# பிரேமாவதாரம்

சாயி அவதாரங்களில் மூன்றாவதான ஸ்ரீ பிரேம சாயிபாபாவின் அவதார மகிமைகளையும் அற்புதங்களையும் கூறும் முதல் புத்தகம்.



வெளியீடு:

PREMA SAI
LOVE ALL SERVE ALL

சாந்தி நிலையம்

பிரேமசாய் ஆசிரமம்

prema sai baba

www.premasaiashram.org

சாயி அவதாரங்களில் முதலாவதான ஸ்ரீ ‘சீரடிசாய்’ சரிதம், இரண்டாவதான ஸ்ரீ ‘சத்யசாய்’ சரிதம், அந்த வரிசையில் மூன்றாவதாக ஸ்ரீ ‘பிரேமசாய்’ சரிதத்தை வாசித்து இன்புற உள்ளோர்க்கு என் நன்றியை கூறிக் கொள்கிறேன்.

**இது ஒரு புத்தகம் அல்ல! தபோவனம் இதை வாசிப்பது என்பது ஒரு தபம்!. சத்யசாய் என்ற பவசாகரம் பிரேமசாயியாக தன்னுள்ளே கோவில் கொண்டு, சக்தியின் அம்சமாக, ஸ்ரீ மாதாவாக, அம்மாவாக நம் முன்னே நிற்கிறார். ஒரு விக்கிரகத்தை தங்கத்தில் வார்த்து எடுத்தால், அந்த விக்கிரகத்தின் ஒவ்வொரு அங்கமும் தங்கம்தான். சத்யசாய் என்ற ஜீவ தங்கம், பிரேமையில் வார்த்து ‘பிரேமசாய் அவதாரம்’ நிகழ்த்தி இருக்கிறது. இந்த கலியுகத்தில் பிரேமை, பிரேமை, பிரேமை என்ற அமுதத்தை தவிர வேறு எதுவுமே இல்லை என்று சர்வ நிச்சயமாக நம்மிடையே நடமாடுகிறது. அதுவும் ‘சக்தியின் அம்சம்’ மிகுதியாக, நமக்கெல்லாம் அம்மாவாக அல்லவா இந்த அவதாரம் எழுந்திருக்கிறது! என்பதை இப்புத்தகம் மூலம் நீங்களே காணப் போகிறீர்கள். பகவான் ஸ்ரீ சத்யசாய் எவ்வாறு தாராபுரம், இரெட்டபர்த்தியில் சங்கமம் ஆனார்கள் என்றும், சத்ய சாயியாக இருந்தபோதும் பிரேம சாயியாக மாறிய பிறகும் செய்த லீலைகளை உடனிருந்து பார்த்ததால் அதனை மிகைப்படுத்தாது உள்ளது உள்ளவாறு தெரிவித்துள்ளேன். பிரேமசாயியின் சத்சரிதத்தில் எப்படி அவர் அனேக பக்தர்களை அழகாக ஆட்கொண்டார் என்றும் இதனில் விளக்கப்பட்டுள்ளது.** பிரேமசாயியின் சக்தி மயமான ஆற்றலையும்,அற்புத லீலைகளையும், மஹிமைகளையும் பிரேமையின் குளிர்ச்சியையும் இந்நூல் வாயிலாக நீங்கள் அனுபவிக்கப் போகிறீர்கள்.




நூலாசிரியர்

**R.G. தண்டபாணி**


*Book shop / Online details :*

₹ 599/- (INR)

$ 15/- (USD)


Printed by : Senthil Offset Printers, Sivakasi.

ஓம் ஸ்ரீபிரேம சாய்ராம்

# பிரேமாவதாரம்

பாகம்-1

**சாயி அவதாரங்களில் மூன்றாவதான ஸ்ரீ பிரேம சாயிபாபாவின் அவதார மகிமைகளையும் அற்புதங்களையும் கூறும் முதல் புத்தகம்.**


நூலாசிரியர்
R.G.தண்டபாணி



© பதிப்புரிமை அனைத்தும் நூலாசிரியர்க்கே உரியது.



முதற்பதிப்பு: 16 மார்ச் 2025

[ஸ்ரீ பிரேம சாயிபாபாவினுடைய 21வது பிறந்தநாள் வைபவத்தில் வெளியிடப்பட்டது.]

வெளியீடு :

சாந்தி நிலையம்

Shanthi Nilayam
Premasai Ashram,
Rettaparthi, Rattalavalasu Post,
Dharapuram City - 638661.
Tamilnadu State, INDIA.

பிரேமசாய் ஆசிரமம்,
ரெட்டபர்த்தி, இரெட்டாலவலசு அஞ்சல்,
தாராபுரம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம்,
தமிழ்நாடு - 638 661. இந்தியா

+91 9442208339 premasaibabaashram@gmail.com

prema sai baba www.premasaiashram.org

Book Shop / Online Details :

ஸ்ரீபிரேம சாயிபாபாவின்

# அவதார பிரகடனம்

நான்தான் “பிரேம சாய்பாபா!”
இது சாதாரண தேகம் அல்ல!
நான்தான் ‘பிரேம சாய்’
சத்யசாயியின் மறுஅவதாரம்!

‘அவதாரம்’ என்றால் இறங்கி வருதல் உயர் நிலையில் இருந்து மனித நிலைக்கு வந்து, மாயையில் சிக்கியுள்ள மனிதர்களை மேல்நிலைக்கு கூட்டிச் செல்லவே இந்த அவதாரம் வந்துள்ளது.

இந்த அவதாரம் அற்புதங்கள் செய்து உங்களுடைய பிரச்சனைகளை தீர்ப்பதால், நீங்கள் கடவுளை நினைத்து கடவுள் சொல்லும் வழியை பின்பற்றுவீர்கள். அதற்காகவே நான் அற்புதங்கள் செய்வது.

நான்கு யுகங்களிலும் கடவுள், தர்மம் அழிந்து, அதர்மம் அதிகமாகும் போது தோன்றினார். திரேதா யுகத்தில் ஒரே ஒரு எதிரி ஆயுதம் எடுத்து அழிக்கப்பட்டது.

துவாபரயுகத்தில் நூறு பேரை ஆயுதம் எடுக்காமலே அழித்தார். ஆனால் கலியுகத்தில் ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு மனிதனுக்குள்ளும், நல்லதும், கெட்டதும் உள்ளது. இப்போது ஆயுதம் எடுத்து அழித்தால் யாருமே இருக்க மாட்டார்கள்.

சுவாமியினுடைய ஆயுதம் அன்பு,
அன்பு, அன்பு மட்டுமே!
அன்பே கடவுள், அன்பு செய்பவர்களாளேயே
அன்பு வடிவ கடவுளை அறிய முடியும்.

இந்த சின்ன பையனா கடவுள்?
என்று நினைக்கிறீர்களா! வெறும் கையில்
விபூதி வரவழைத்து தருவதால் கடவுளா?
உங்கள் பிரச்சனைகளை தீர்ப்பதால் கடவுளா?

இந்த உடல் கடவுள் அல்ல! ஆனால்
உள்ளிருக்கும் சத்தியமே கடவுள்.
அந்த சத்தியத்தை உணரவே முடியும்.
அதை அறிவால் யோசிக்கமுடியாது,
பக்தியால் அனுபவிக்கவே முடியும்.

கடவுள் குணங்கள் அற்றவர் அவர்
இப்படித்தான் என்று கூற முடியுமா?
கண்களால் காண முடியுமா?
அவர் காலத்தைக் கடந்தவர்!
சீரடியில் சிவ சொரூபமாக வந்திருந்தவரே!
புட்டபர்த்தியில் சத்ய சாய்பாபாவாக,
சிவசக்தி சொரூபத்தில் வந்திருந்தார்.

அப்பொழுது சாய் பக்தர்களுக்கு கேட்டதை
எல்லாம் கொடுத்தேன். நன்றி மறக்காமல்
செலுத்துங்கள். இப்பொழுது சக்தியின் அம்சமாக
பிரேம சாயியாக வந்துள்ளேன்.

என்னுடைய ஆயுதம் பிரேமை, பிரேமை,
எனும் அன்பு ஒன்றே.
அன்று நான்கு வகையான மக்களும்
அறவழியில் நடந்தார்கள்.

ஒரு சிலரே அறவழியிலிருந்து விலகினார்கள்.
கிரேதா யுகத்தில் மூன்று வகையான
மக்கள் அறவழியில் நடந்தனர்.
சத்ய யுகத்தில் இரண்டு வகையான
மக்களே அறவழியில் நடந்தனர்.

இன்று எல்லார் மனதிலும் நல்லதும்,
கெட்டதும் உள்ளது. எனவே எல்லோரையும்
அன்பு கொண்டே நல்வழிப்படுத்தப் போகிறேன்.

அன்பால் அவர்கள் செய்த பாவங்களை
கரைத்து, அவர்களை சுவாமியுடன்
அழைத்துக் கொள்வேன்.

நீங்கள் சுவாமிக்கு செய்ய வேண்டியது,
காசு பணம் அல்ல.
சுவாமியிடம் ஓடி வருவது மட்டுமே!

என்னிடம் வந்து விட்டால், உங்கள்
கைகளைப் பிடித்துக்கொண்டு
மேலேற்றி விடுவேன்.

நீங்கள் என்னை நோக்கி ஒரு அடி எடுத்து
வைத்தால், ஆயிரம் அடி எடுத்து உங்களை
நோக்கி ஓடி வருவேன். யாருக்கும் அறிவுரை
கூறவில்லை. அன்பை மட்டுமே தருவேன்.
சக்தி சொரூபம்
பராசக்தியான நான் உங்களின் அம்மாவாக
இருந்து உங்களையும், மற்ற எல்லோரையும்,
இந்த இடத்தையும்,(சாந்தி நிலையத்தையும்)
உயர் மாற்றமடைய செய்வேன்.

26 செப்டம்பர், 2019
ரெட்டபர்த்தி, தாராபுரம், இந்தியா.

\- ஸ்ரீபிரேம சாய்பாபா
சாந்தி நிலையம்.







# சமர்ப்பணம்





**பூவுலகில்**
**ஜீவிக்கும் ஆன்மாக்களை**
**நல்வழிப்படுத்த**
**யுகந்தோறும்..**

**பரமாத்மாவின்**
**சொரூபமாக அவதரித்த..**
**பற்பல அவதாரங்களுக்கும்,**

**இக்கலியுகத்திலும்**
**கருணை புரிய வந்த..**
**'சாயி'**
**அவதாரங்களுக்கும்,**

**மற்றும்**
**பகவானின் பக்தர்களுக்கும்**
**இந்நூலை பணிந்து**
**சமர்ப்பிக்கின்றேன்.**




**R.G.தண்டபாணி**

சாந்தி நிலையம்
தாராபுரம், இந்தியா.

# பொருளடக்கம்

அவதார பிரகடனம்

சமர்ப்பணம்

இறைவணக்கம்

*பகுதி - 1 (நூல் அறிமுகம்)* **பக்கம் #**

1. முன்னுரை .......... .......... 10
2. அணிந்துரை .......... .......... 15
3. என்னுரை .......... .......... 20

*பகுதி - 2 (பிறப்பும் அவதாரமும்)*

4. ஊரும் உறவும் .......... .......... 29
5. பிறப்பும் வளர்ப்பும் .......... .......... 39
6. புட்டபர்த்தியில் இருந்து.. ரெட்டபர்த்திக்கு ...... .......... 51
7. அவதாரம் மலர்ந்ததும் & அறிவிப்பும் .......... .......... 121

*பகுதி - 3 (அற்புதங்களும் லீலைகளும்)*

8. ஆபத்பாந்தவன் அனாதரட்சகன் .......... .......... 132
9. தூர தேசங்களுக்கு ஒரு மாயபயணம் .......... .......... 144
10. பிரேமஸ்வரூபன் .......... .......... 180
11. எங்கும் நிறை தன்மை .......... .......... 196
12. பஞ்ச பூதங்களும் படைத்தவனும் .......... .......... 208
13. காணாத பொருளை கொண்டு கொடுப்பான் ... .......... 228
14. எல்லா இறையும் நானே .......... .......... 238
15. சத்தியமான வாக்கு .......... .......... 250
16. தர்மம் காப்பான் சங்கடம் தீர்ப்பான் .......... .......... 260
17. லிங்கேஸ்வரனின் லிங்கோத்பவம் .......... .......... 271
18. விபூதி சுந்தரன் .......... .......... 279
19. நோய் தீர்ப்பான் நேயன் .......... .......... 303
20. சித்துக்களா சித்தர்களுக்கும் மேலே! .......... .......... 321
21. தேவர்களின் தேவன் .......... .......... 349

பகுதி - 4 (ஆலயங்களும் விழாக்களும்) பக்கம் #

22. குடும்பத்தின் மனஆதங்கமும் போராட்டமும் .......... 367
23. தெய்வீகம் நிறைந்த ஆலயங்களும் விழாக்களும் .......... 381

பகுதி - 5 (சாயி அன்பர்களுக்கு)

24. சேவையின் சிறப்பு .......... .......... 420
25. ஞானத்தின் மொழிகள் .......... .......... 438
26. பிரேமசாயி அன்பர்களுக்கு .......... .......... 450
27. முடிவுரை .......... .......... 461






ஓம் ஸ்ரீபிரேம சாய்ராம்

# இறை வணக்கம்



ஓம் சாயீஸ்வராய வித்மஹே சத்ய தேவாய தீமஹி
தன்னஸ்சர்வ பிரஜோதயாத்.

ஓம் சம்பூர்ண அவதாராய வித்மஹே சாயிநாதாய தீமஹி
தன்னோ பிரேம பிரஜோதயாத்.

ஓம் சாயி ராமாய வித்மஹே ஆத்மா ராமாய தீமஹி
தன்னோ பாபா பிரஜோதயாத்.

ஓம் என்னும் ப்ரணவரூப நாயகா உமையவளின் பாலனே
விநாயகா தேவர் மூவர் போற்றும் வேதநாயகா தேவாதி
தேவனே விநாயகா

உங்கள் பாதங்கள் பணிந்து பகவானை பற்றிய சிறு நூலை எழுத ஆரம்பிக்கிறேன். எந்தவித தடைககளும் வராது காத்து மனதில் வந்து இருந்து அருள் செய்வீராக.

வியாசர் சொல்ல பாரதம் எழுதிய விநாயகரே! என் கரங்களை கருவியாக கொண்டு தாங்களே இந்நூலை எழுதுவீர்களாக. ,

ஈன்றளி தழிக்கும் செய்கைக்கு ஏதுவாய், அயனாய், மாலாய், ஆன்ற ஈசனுமாய் தானே அனந்த மூர்த்தியுமாய் நிற்கும் பூன்ற முத்தனுமாய், இன்பப்புணரியுமாய், ஆதவனாய், நாளும் தோன்றிய விமல போத சொரூபத்தை பணிகின்றேனே.

படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் செயல்களுக்கு ஏதுவாக பிரம்மா, விஷ்ணு, சிவன் என்னும் மும்மூர்த்திகளாக ஆனதும் பரம்பொருளே! தானே ஆன்ற பிரமம் எனும் ஈசனுமாகி இவ்வகிலமெங்கும் அனந்த கோடி மூர்த்தியுமாய் நிற்பதுவும் சிவமே!

இப்பூமியில் பிறந்த அடியேனுக்கு ஞான அறிவை தந்து முத்தன் என்ற நிலைபெற வைத்து சத்குருவாய் என்னுள் நின்றதுவும் சிவமே! என்னுள் மெய் இன்பத்தை கடல் அலை போல் எழுப்பி புணர் நீராய் என் ஆருயிராய் நின்றதுவும் சிவமே! சூரியனில் தோன்றிய அழகு நிறைந்த, அழியா நிலையுடைய ஞான திருவடியில் நின்ற ஜோதி ஸ்வரூபத்தையே, நாளும் மறவாது பணிகின்றேனே!!.




*Rettaparthi PremaSai Ashram Campus*

# முன்னுரை

**ஓம் பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே**
**பூர்ணஸய பூர்ணமாதாய பூர்ணமேவா வசிஷ்யதே**
**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

சம்பூர்ணரான நமது பிரேம ஸாயிக்கு எங்கள் இதய பூர்வமான வணக்கத்தை காணிக்கையாக்கிக் கொள்கிறோம். இந்நூலை கையில் ஏந்தியுள்ள உங்களுக்கும், எங்களுடைய வணக்கத்தை கூறிக்கொள்கிறோம்.

எனது பெயர் டாக்டர் ல.சண்முகலஷ்மி எனது கணவர் பெயர் டாக்டர் ம.லட்ச்மணன் நாங்கள் இருவரும் மருத்துவர்கள் ஸ்ரீவில்லிபுத்தூரை சேர்ந்தவர்கள்.

ஒரு நாள் தற்செயலாக Youtube பார்த்துக் கொண்டிருந்த பொழுது நமது பிரேமஸாயிபாபாவின் காணொளியைப் பார்க்க நேர்ந்தது.நானும், எனது கணவர் மற்றும் குடும்பத்தினர் அனைவரும் சத்யசாய் பக்தர்கள்.

அச்சு அசல் சத்யஸாயி போலவே இருக்கும் நமது பிரேமஸாய் பகவானை பார்த்து அதிசயித்துப் போனோம். ஆனால் மனதில் ஒரு சந்தேகம் இது உண்மையா? இல்லையா? அவரை நம்பலாமா? வேண்டாமா? என்று எங்களுக்கு குழப்பமாக இருந்தது.

நாங்கள் ஓர் நாள் ஸ்வாமியை நேரில் சென்று தரிசித்தோம். ஸ்வாமியை பார்த்து பேசிய பிறகு எங்கள் மனம் மிகுந்த சந்தோஷமும், அமைதியும் அடைந்தது. இவர் சத்யஸாய்பாபா தான் என்று அவரை பார்த்தவுடனே நம்பிக்கை பிறந்தது. எங்கள் மகளுக்கு குழந்தை பாக்யம் அருள வேண்டினோம். அவள் மருத்துவம் முடித்து இருந்ததால் மேற்படிப்பிற்கும் அருள்புரிய வேண்டினோம்.

நமது இனிய ஸ்வாமி ஆசீர்வதித்தார்கள். அதன் பிறகு அடுத்த சந்திப்பில் குழந்தை பாக்கியம் கிடைத்தது. முதுகலை படிப்பிற்கான இடமும் கிடைத்தது, நாங்கள் ஸ்வாமியை காணச்சென்று எங்கள் நன்றியை தெரிவித்தோம்.

எங்கள் வேலை மற்றும் பொறுப்புகள் காரணமாக எந்தவித ஒழுங்குமுறையான சாதனைகளும் ஜபதபங்களும் செய்ய இயலாது இருந்தது இதை ஸ்வாமி பிரேமசாயி யிடம் கூறிய பொழுது..

"எதற்கு வருத்தப்படவேண்டும் எனக்கு காலையில் ஒரு Good Morning இரவு ஒரு Good Night சொல்லுங்கள் போதும் என்பார்" **அவ்வளவு எளிமையான, எளிதாக தானே இறங்கி வந்து அருள் புரியும் தயாளர் நம் ஸ்வாமி பிரேமசாயி.**

மாதம் ஒரு முறை நானும், எனது கணவரும் ஸ்வாமியை சென்று தரிசித்து வந்தோம். கடந்த ஒரு மாதமாக தரிசிக்க முடியவில்லை (வேலை சுமை காரணமாக) இந்த சமயத்தில் நடந்த ஒரு நிகழ்வை கூற விரும்புகிறேன்.

எனது ஊரில் அருகில் இருக்கும் **வசந்த சாயி அம்மா சத்ய சாய்பாபாவின் தீவிர உபாசகரும் பக்தரும்** ஆவார். அவர் மதுரை-திருமங்கலம் அருகேயுள்ள ராயபாளையம் என்னும் ஊரில் 108 கோவிலுள்ள 'முக்தி நிலையம்' எனும் ஆசிரமம் அமைத்து தவ வாழ்வு வாழ்ந்து வருகிறார். அவர்களுக்கு அவ்வப்போது சிறு சிறு மருத்துவ சேவை செய்யும் பாக்யம் எங்களுக்கு கிடைத்திருந்தது. அப்படி கடந்த 2024 பிப்ரவரி மாதம் அம்மா அவர்களுக்கு மருத்துவ சேவை செய்ய முக்தி நிலையம் ஆசிரம கோவிலுக்கு சென்றிருந்தோம்.

**அப்பொழுது தான் ஓர் அதிசயம் நிகழ்ந்தது.**
எனது கைபேசியில் ஓர் அழைப்பு வந்தது!

ஸ்வாமி பிரேமசாயி என்னிடம் பேசினார்கள் "என்னை எப்பொழுது? வந்து பார்த்தாய்" என்றார்.

நான் - "ஸ்வாமி கடந்த ஒரு மாதத்திற்கு முன்" என்றேன். உடனே ஸ்வாமி அதனால் தான் நான் உங்களைப் பார்க்க இங்கு (முக்தி நிலையம்) வந்து விட்டேன்" என்றார்.

எனக்கு துாக்கி வாரிப்போட்டது!!

ஆம் நான் இப்பொழுது முக்தி நிலையத்தில் உள்ளே இருக்கிறேன் என்றார் ஸ்வாமி பிரேமசாயி. நான் வசந்தசாயி அம்மாவின் அறையிலிருந்து ஓடிப்போய் வெளியே பார்த்தேன்.

**சாட்சாத் பிரேமசாயி பிரசன்னமாக வந்து கொண்டு இருந்தார்கள். அப்போதே ஸ்வாமியை நானும், என் கணவரும் பக்தியுடன் பாதம் பணிந்து வணங்கினோம்.** ஸ்வாமி பிரேமசாயி இரு கைகளையும் எங்கள் தலைகளில் வைத்து ஆசீர்வதித்தார்கள். பின் நானும் எனது கணவர் மற்றும் சுவாமியுடன் வசந்தசாயி அம்மாவின் அறைக்கு சென்றோம், ஸ்வாமி எல்லோரையும் ஆசீர்வதித்தார்கள். **வசந்தசாய் அம்மாவிற்கும் எங்களுக்கும் விபூதியை வெறும் கைகளிலேயே சிருஷ்டித்து கொடுத்தார்கள்.** (*வசந்தசாயி அம்மா - ராதையின் மறுபிறவி என சத்யசாயி கூறியாக தகவல் உள்ளது.) அந்த அற்புத நாள் என் வாழ்நாளில் மறக்க முடியாத நாளாகிவிட்டது.

ஸ்வாமி பிரேமசாயியை, அவர் பாதங்களை இறுக்கமாக பற்றிக் கொண்டால் நம் வாழ்வில் வரும் கஷ்டங்களை எல்லாம் எளிமையாக எதிர்கொள்ளலாம். **சத்யசாய் என்ற பவசாகரம், பிரேமசாயியாக தன்னுள்ளே கோவில் கொண்டு, சக்தியின் அம்சமாக, ஸ்ரீ மாதாவாக, நம் அம்மாவாக** நம் முன்னே நிற்கிறார்.

**ஒரு விக்கிரகத்தை தங்கத்தில் வார்த்து எடுத்தால், அந்த விக்கிரகத்தின் ஒவ்வொரு அங்கமும் தங்கம்தான். அப்படி சத்யசாய் என்ற ஜீவ தங்கம், பிரேமை எனும் நித்ய அன்பில் வார்த்து பிரேமசாயி அவதாரமாக நிகழ்த்தி இருக்கிறது. இந்த கலியுகத்தில் பிரேமை, பிரேமை, பிரேமை என்ற நித்ய அன்பு அமுதத்தை தவிர வேறு எதுவுமே இல்லை என்று சர்வ நிச்சயமாக நம்மிடையே நடமாடுகிறது.**

நமக்கெல்லாம் தெய்வீக தாயாக அல்லவா இந்த 'பிரேம சாயி அவதாரம்' எழுந்திருக்கிறது! என்பதை இந்நூலின் வாயிலாக வாசிக்கும் அல்லது கேட்கும் நீங்களே காணப் போகிறீர்கள்.

**யாதேவி சர்வ பூதேஷு சக்தி ரூபேணா ஸம்ஸ்திதா**
**நமஸ்தஷ்யை நமஸ்தஷ்யை நமஸ்தஷ்யை நமோ! நமக!!**

**தெய்வீக அன்னையை கெட்டியாக பிடித்துக் கொண்டோமானால், நம் வாழ்வு வளம் பெறும்!** சிலந்தி வலையில் விழுந்த பூச்சியும், உலக வாழ்க்கையில் இருக்கும் மனிதனும் ஒன்றுதான். அதிலிருந்து மீண்டுவர பொறுமை மிக்க தவத்தால் மட்டுமே சாத்தியம். அதற்காக எல்லோரும் வீட்டை விட்டு காட்டுக்கு போக வேண்டுமா? நம் பொறுப்புகள் என்னாவது? வாழவும் வேண்டும், அதே சமயம் மீளவும் வேண்டும். எதுதான் வழி? **அதுதான் சரணாகதி.**

**நம் இனிய பிரேமசாயி பகவானின் பாதங்களில் சரணாகதி அடைவோம் நம் பிரேமசாயி யார் யாருக்கு எது வேண்டுமோ? எப்பொழுது வேண்டுமோ? எப்படி வேண்டுமோ? அதை சரியாக கொடுப்பார். முடிவாக பிரேம சாகரத்தில், தெய்வீக ஆனந்த வெள்ளத்தில், கலந்து விடுவோம்.** புட்டபர்த்தியிலிருந்து தற்போது **ரெட்டபர்த்திக்கு எழுந்தருளியிருக்கும் சாயீஸ்வரனான பர்த்தி ஈசன்** நம்மை ஆட்கொள்வார்.

பிரேமசாயியின் சத்சரிதத்தில் அவர் எப்படி அனேக பக்தர்களை ஆட்கொண்டார் என்று அழகாக இந்நூலில் விளக்கப்பட்டிருக்கிறது. இந்நூலை இயற்றுவதற்காக **சாயியின் தீவிர பக்தரும் தந்தையுமான (R.G.தண்டபாணி) மிக கடின உழைப்பும், தனி கவனமும் கொண்டு இந்த தமிழ் புத்தக சிற்பத்தை செதுக்கியிருக்கிறார். அவரும் சத்ய சாயியின் நெடுநாள் தீவிர பக்தர்தான்.** அவர் இந்நூலில் எவ்வாறு சத்யசாயி தனது குடும்பத்தில் ஒரு தெய்வீக அவதாரமாக சங்கமம் ஆனார்கள் என்று இயல்பாகவும், தெளிவாகவும் அனுபவத்துடன் கூறியுள்ளார். அக்கால கட்டங்களில் எழுந்த அவர்களுடைய மனபோராட்டங்களையும், உள்ளத்தின் ஆதங்கத்தையும், துன்பத்தையும் இந்நூலின் மூலம் ஒருவாறு காணமுடிகிறது.

பகவான் சத்யசாயியாக இருந்தபோதும் பிரேமசாயியாக மாறிய பிறகும் செய்த தெய்வீக அற்புத லீலைகளை உடனிருந்து பார்த்ததால் அதனை உணர்ச்சி பூர்வமாக கூறி உள்ளார். எழுத்து நடையில் கொங்குத்தமிழ் வாசனை வீசுகிறது ஆனாலும் 'புதியதோர் எழுத்தாளராக' சிரத்தையுடன் முயற்சித்து, எளிமையான நடையில் வார்த்தை ஜாலமின்றி எழுதி, நம்மையும் உடன் அந் நிகழ்ச்சிக்குள்ளாகவே அழைத்துச் சென்றுவிடுகிறார்.

பகவான் பக்தர்களுக்கு செய்த அற்புதங்களை விரித்து சொல்லாமல் மிக சாதாரணமாகவே சுருங்க சொல்லி இருக்கிறார். ஆனாலும் அதன் ஆழத்தை நம்மால் உணர முடிகிறது. இப்படி ஒரு தெய்வீக சக்தி கொண்டவரா? பிரேமசாய் என்று நம்மையெல்லாம் பிரம்மிக்க வைக்கிறது. நம்முடைய ஆபத்து சமயத்தில் அழைத்தால் நம்மை காக்க பிரேமசாய் உள்ளார் என்ற நம்பிக்கையை இந்நூல் தருகிறது. இதை வாசிப்பது என்பது, எப்படி ஒரு பஜனையில் நாமசங்கீர்த்தனத்தில் தியானத்தில் அமர்ந்து, இறைவனின் மகிமையை உணர்கிறோமோ அந்த உணர்வை தருகிறது.

இந்நூல் ஒரு மலரில் விளைந்த மது, உள்ளத்தே விளைந்த உவகைத்தேன், இடைவிடாமல் வாசிப்போர்க்கு அல்லது காதில் கேட்போர்க்கு அமுத கலசமாகும். நடுக்கடலில் சென்று வீழினும் கரையேற்றுவது சாயீசனின் திருவுளமே. ஆம் **நம் கர்மத்தால், ஊழ்வினையால் என்ன விதமான கஷ்டங்களை அனுபவித்தாலும் எல்லா காலங்களிலும் தெய்வீக அவதாரங்களாக அவ்வப்போது மாறி மாறி வந்து, கரையேற்றுவது தீனதயாளன் நம் சுவாமி சாயீசன் தான், அவர் பொற்ப் பாதங்களை சரணடைவோம்.** சாயீசன் இவ்வுலகிலும், எவ்வுலகிலும் நம்மை ஆட்கொண்டு எல்லா திக்கிலிருந்தும் அவரின் பக்தர்களாகிய நம்மை காப்பாராக.!!



**ஓம் ஜெய் சாய்ராம்!!**

-நன்றிகள்-

**டாக்டர் ல.சண்முகலட்சுமி**

**டாக்டர் ம.லட்சுமணன்**

(ஸ்ரீவில்லிபுத்தூர்,
தமிழ்நாடு, இந்தியா)



Mukthi Nilayam @ Madurai

Srivilliputhur Temple



ஓம் ஸ்ரீபிரேம சாய்ராம்

# அணிந்துரை

**பகவான் ஸ்ரீ பிரேமசாயி பகவானின் பொற்கமல பாதங்களுக்கு எனது அனந்தகோடி வணக்கத்தை சமர்பித்துக் கொள்கிறேன்.** என்னுடைய பெயர் செ.வெங்கடேசன், அடியேன் கரூர் மாவட்டத்தைச் சேர்ந்தவன்.

**'ஓம் ஸ்ரீ பிரேம சாய்ராம்'** என்று வருங்காலத்தில் கோடிக்கணக்கான மக்களால் உச்சரிக்கப்பட போகும் புனித நாமத்தினுடைய, **அவதார புருஷரின் வாழ்க்கை நிகழ்வுகளையும், அற்புத மகிமைகளையும் இப்புத்தகம் தாங்கியுள்ளது. பிரேமசாய் பகவானின் ஆசிர்வாத அருள் அலைகளையும் இப்புத்தகம் தனக்குள் நிரப்பிக் கொண்டு இருக்கிறது. இந்நூலை படிப்பவர்கள் எவராயினும் தங்களுக்குள் சுவாமி பிரேமசாயியின் அன்பின் அலைகள், ஆசீர்வாதமாக பாய்ந்து நிரம்புவதை உணர்வார்கள்.**

இப்புத்தகத்தின் ஒவ்வொரு எழுத்துக்களும் புனிதமானவை! சுவாமி பிரேமசாயியின் ஒவ்வொரு பேச்சும், செயலும் அவர் நம் மீது கொண்டிருக்கும் அன்பையும், கருணையையும் இந்நூல் வாயிலாக அறிய முடிகிறது. **ராம நாமத்தின் மகிமையை உலகிற்கு உணர்த்த ஒரு 'ராமாவதாரம்'. பிரேமை எனும் அன்பின் மகிமையை உணர்த்த 'பிரேமாவதாரம்'.**

நம்மை போன்றவர்களுக்கு பிரேமசாயி நிகழ்த்திய நிகழ்வுகள் மிகவும் ஆச்சரியமானதாகவும் நம்ப முடியா ததாகவும் இருக்கும். காரணம் நம்முடைய உடல் என்ற எல்லை கட்டிய தன்மை. ஆனால் **அவதாரங்களுக்கு இது ஒரு சாதாரண நிகழ்வுகள் ஆகும். காரணம் அவர்கள் எல்லையற்றவர்கள், அனைத்தையும் உள்ளடக்கிய பரம் பொருள், பேரறிவாக, பேருணர்வாக, மாயையின் கலப்பு இன்றி தன்னை அப்படியே நம்மைப் போன்ற மனித தோற்றத்தில் வெளிப்படுத்துவது அவதாரமாகும்.**

இந்த பிரபஞ்சமே இறைவனின் தெய்வீக அற்புதமாகும். இதில் **மனித ரூபத்தில் அவதாரமாக வந்து அற்புதங்களை நிகழ்த்துவது இறைவனுக்கு பெரிதல்ல. நமக்கு ஆறறிவை தந்தாலும், கூடவே மாயையும் தந்ததன் விளைவால் இறைவனே நம்மைப் போன்ற மனித ரூபத்தில் வந்தாலும் நம்ப முடியாமல் தவிக்கிறோம். ஆனால், நம்பிக்கையே அவன் அருளை பெறுவதற்கு மிக முக்கியமான கருவி.**

நான் தாங்கமுடியாத மன துன்பத்தில் சுவாமியை சந்திக்கிறேன். இல்லை! இல்லை! சுவாமி என்னை அழைத்துக்கொண்டார். அப்போது எல்லாவற்றையும் என்னிடத்தில் விட்டுவிடு நான் பார்த்துக் கொள்கிறேன். நீ சிந்திக்காதே, நீ எதையும் செய்யாதே, நான் செய்கிறேன் என்று சொன்னார். இந்த வார்த்தைகளில் எல்லாம் என் தந்தையையே உணர்ந்தேன். ஆனால் நம்பிக்கை என்பது நம் காரியம் நிறைவேறினால் தானே வரும் சுவாமியிடமே கேட்கிறேன். சுவாமி எனக்கு குழப்பமாக இருக்கிறது. **சுவாமி கேட்கிறார் 'உனக்கு மகாபாரதம் தெரியும் அல்லவா' என்று நான் தெரியும் சுவாமி என்றேன். அது நடந்து முடிந்துவிட்டது அதனால் கிருஷ்ணரை கடவுளாக ஏற்றுக் கொண்டாய், உனது வாழ்க்கை நடந்து கொண்டிருக்கிறது, அதனால் நீ இன்னும் என்னை கடவுளாக ஏற்க முடியாமல் இருக்கிறாய் என்று சொன்னார். கருணையை பாருங்கள்! என் மீது நம்பிக்கையில்லை என்றால் சென்றுவிடு என்று சொல்லவில்லை, மாறாக கருணையோடு சத்தியத்தை போதித்து, நம்மை அளவில்லாத பிரேமையுடன் அரவணைத்துக் கொள்கிறார்.**

சுவாமி மீது எமக்கு முதலில் நம்பிக்கை வரவழைத்தது சுவாமி என்பதைவிட, சுவாமியின் குடும்பம் தான். சுவாமியின் நூறு வயதைத் தாண்டிய பாட்டனார் (முத்துச்சாமி) சத்ய சாய்பாபாவின் ஸ்தூல உடல் தரிசனத்தை இன்றளவும் பெற்றுக் கொண்டிருப்பவர். சுவாமியின் தாத்தா பல மகான்களின் ஞான வழிகளை அகவிசாரணை செய்து கொண்டிருப்பவர். சுவாமியின் அப்பா (தண்டபாணி) ஆறாவது படிக்கும் போதிருந்தே சத்ய சாய்பாபாவின் தீவிர பக்தர்.

அவரின் மூலம் சுவாமிஆத்தாவும், சுவாமிஅம்மாவும், சுவாமிஅக்காவும், சத்யசாய்பாபாவின் பக்தர்கள் ஆனவர்கள். தன் மகனாகவே **பேரிறைவன் பிரேமசாய் பகவான் அவதரித்த போதும் சுவாமியின் மகிமைகளை எல்லாம் தன் மகன் என்று பாராமல், ஒரு நடுநிலை பார்வையோடு பார்க்கும் சுவாமியின்அப்பா** தண்டபாணி ஐயா, சத்யசாய் பாபாவின் போதனைகளான அனைவரையும் நேசி, அனைவருக்கும் சேவை செய் என்பதை தவறாமல் கடைப்பிடித்து சத்தியத்தின் வழி வாழும் சாயி குடும்பம். இக்குடும்பத்தில் **சாயீஸ்வரன் அவதரிப்பது** என்பது ஆச்சரியப்படும் விஷயம் ஒன்றும் அல்ல என்றே தோன்றுகிறது!.

**இறைவனே நாம் காணும் உருவாக வந்து, தன்னை பொருள்களாகவும் உயிர்களாகவும் வெளிப்படுத்தினால் அன்றி இறைவனை நாம் உணர முடியாது. அதுபோல நம் சுவாமி பிரேமசாயியே தன்னை வெளிப்படுத்தினால் அன்றி சாயியின் தெய்வாம்சத்தை உணர்ந்து கொள்ள முடியாது.**

காலம் கனிந்தது! சுவாமி பிரேமசாயியே தன்னை யாரென்று எங்களுக்கு உணர்த்தினார். தான் எங்கும் நிறைந்திருக்கும் சர்வ வியாபக ஈஸ்வர தன்மையை புரிய வைத்தார்.

இதையெல்லாம் நான் வார்த்தைகளில் உங்களுக்கு உணர்த்தி விட முடியுமா? தெரியவில்லை! தேனே சுவைக்காத ஒருவருக்கு தேன் சுவைத்த ஒருவன் தேனின் ருசியை எப்படி உணர்த்த முடியும், **பிரேமசாய் என்ற அமுதத்தை சுவைத்து பாருங்கள் நீங்களே அந்த அமுதமாய் மாறுவதை உணர்வீர்கள்!.**

சுவாமி பிரேமசாயியின் அருள் என்பது நீங்கள் கொடுப்பதா? நாங்கள் எடுத்துக் கொள்வதா? என்று கேட்டதற்கு **நீ என்னை நினைப்பது பக்தி, அதனால் நான் உன்னை நினைப்பது அருள் என்று பிரேமசாயி சொன்னார். நான் நிகழ்த்தும் அற்புதங்கள் எல்லாம் பெரிதல்ல, உண்மையில் அற்புதம் என்பது நீ என்னை நினைப்பதால் உனக்குள் நிகழ்வது !!.**

சாயி அவதாரங்களை போன்று இதற்கு முன் எந்த புராதண அவதாரமும் தொடர்ச்சியாக தன்னை அவதரித்துக் கொண்டு

இருந்ததை மனித குலம் அறிந்ததில்லை, **மனித குலத்தின் மீது சாயி அவர்கள் கொண்ட கருணையே இந்த அவதரித்தலின் தொடர்ச்சி!!** இப்படிப்பட்ட பேரறிவான, சாயி அவதாரங்களை மனித சிற்றறிவால் ஓரளவாவது புரிந்து கொள்ளவோ, மதிப்பீடுகளுக்கு உட்படுத்தவோ முடியுமா? ஆம் என்றால் ஒருவன் சமுத்திரத்தின் முன் நின்று கடலை முழுதும் அளந்து விட்டேன் என்று சொல்வதைப் போன்றதுதான்.

**சுவாமி பிரேமசாயி ஒரு ஞானக்கடல், அறிவுக்கடல், அருள்கடல், அன்புக்கடல், கருணைக்கடல் இந்த அமுதக் கடலில் மூழ்கி எழுந்தவர்கள் தங்களின் மனிதன் எனும் தனித்தன்மையை இழந்து சாயி என்ற தெய்வீக தன்மையை பெறுகிறார்கள். நம் சுவாமி யார்? பிரேமசாயி பகவான் என்ற தனி அவதாரமா அல்லது சத்ய சாய்பாபாவின் மறுபிறப்பா? இதற்கு சுவாமியே என்னிடம் சொல்லியது. நான்தான் பிரேம சாய்பாபா, சத்ய சாய்பாபாவின் சிறுவயதில் சீரடி சாய்பாபா அவரின் உடனேயே இருந்ததைப் போல, என் சிறு வயதில் இருந்தே சத்யசாய்பாபா என் உடனேயே இருந்தார்.**

இந்த உடலின் விருப்பங்களை பூர்த்தி செய்து, எல்லாம் காலியான பிறகு **சத்யசாய்பாபா** என்னோடு ஒன்றாக இணைந்தும் கலந்தும் கொண்டார்கள். ஆதலால் **சீரடிசாய், சத்யசாய், பிரேமசாய் ஆகிய மூன்று தெய்வீகமானவரும் ஒரே சாயிதான்.** அதேபோல நீங்கள் என்னை எந்த சாயியாக நினைக்கும் போதும், உங்களுள்ளே நீங்களும் நானும் ஒன்றுதான், எனது திரை விலகியது!

**பிரேமசாய் பகவான் என்பவர் யார்?**

நான் உணர்ந்தது **எல்லா உயிர்களிலும், எல்லா பொருள்களிலும், எல்லா இடங்களிலும், எல்லாமாக தன்னை உணரும் பேரறிவுதான் பிரேசாய் பகவான். எல்லா உயிர்களிலும் இருப்பாக இருக்கும் இத்தகைய அறிவின் தன்மையே பகவான் என்று அவதாரங்களை தவிர சாதாரண மக்களால் உணர முடிவதில்லை.**

எப்பொருளை, எச்செயலை, எக்குணத்தை, எவ்வுயிரை, ஒருவர் அடிக்கடி நினைத்தால் அப்பொருளின் தன்மையதாய் நினைப்போர் ஆற்றல், அறிவினிலும், உடலினிலும், மாற்றம் காணும் என்பது வேதாத்திரி மகரிஷியின் வாக்கு.

இன்றைய விஞ்ஞானமும் இதை உறுதிப்படுத்துகிறது. **முடிவாக சுவாமியையே நினைத்து சுவாமியையே தியானிப்பவர்கள் சுவாமி ஆகிறார்கள்** என்று கூறிக்கொண்டு பிரேமசாய் பகவானின் அருளால்..

எல்லோரும் எல்லாமும் பெற்று வாழ்க வளமுடன் !

-நன்றிகள்-



**செ.வெங்கடேசன்**
யோகி ராம்சுரத்குமார் நாமாலயம்,
(கரூர், தமிழ்நாடு, இந்தியா)



# என்னுரை

**கலையாத கல்வியும் குறையாத வயதும்**
**ஓர் கபடு வாராத நட்பும்**

**கன்றாத வளமையும் குன்றாத இளமையும்**
**கழுபிணி யிலாத உடலும்**

**சலியாத மனமும் அன்பகலாத மனைவியும்**
**தவறாத சந்தானமும்**

**தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்**
**தடைகள் வாராத கொடையும்**

**தொலையாத நிதியமும் கோணாத கோலும் மொரு**
**துன்பமில்லாத வாழ்வும்**

**துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப்பெரிய**
**தொண்டரொடு கூட்டு கண்டாய்**

**அலையாழி அறிதுயிலும் மாயனது தங்கையே**
**ஆதி கடவூரின் வாழ்வே!**

**அமுதீசர் ஒரு பாகம் அகலாத சுகபாணி**
**அருள்வாமி! அபிராமியே!**

**-அபிராமி அந்தாதி**

உலகுக்கு எனை ஈன்றளித்து, வளர்த்து ஆளாக்கிய, அன்பு தெய்வம் என் தாய்க்கு முதல் வணக்கத்தை அவர் பாதங்களில் சமர்ப்பிக்கிறேன்.

என்னை பேணிக்காத்து, உலகியல் வாழ்வில் வாழ வழி செய்து கொடுத்து, பாசத்தோடு பண்புதனை ஊட்டிய எனதருமை தந்தைக்கு அவர் பாதங்களில் வணக்கத்தை சமர்ப்பிக்கிறேன்.

எனது அறிவைப் பெருக்கிய ஆசான்களுக்கும், இவர்தான் கடவுள் என்று கைநீட்டி காட்டிய குருமார்களுக்கும் வணக்கத்தை காணிக்கையாக்குகிறேன்.

எங்கள் குலம் வாழ, குலம் தழைக்க, காவல் நிற்கும் குலதெய்வம் முத்தூர் செல்வகுமாரசுவாமிக்கும், அத்தனூர்அம்மனுக்கும், குப்பையணசுவாமிக்கும் என் வணக்கத்தை சமர்ப்பணம் ஆக்குகிறேன்.

அன்பால் எனையாளும் சத்யசாய் கடவுளுக்கு அனந்த கோடி வணக்கங்கள்.

**'எந்தரோமகானுபாவுலு அந்தரிகு வந்தனமு'**

இந்நூலை கையில் ஏந்தி உள்ள உங்களுக்கு என் வணக்கத்தை தெரிவித்து பிரேமஸாயின் லீலைகளை காணப்போகும் உங்களை வெற்றிலை பாக்கு தாம்பூலம் தந்து வரவேற்கிறேன்.

பிரேமசாயின் சக்தி மயமான ஆற்றலையும், லீலைகளையும், மஹிமைகளையும் அவரின் அன்பின் குளிர்ச்சியையும் இந்நூல் வாயிலாக நீங்கள் அனுபவிக்கப் போகிறீர்கள்.

இருபத்தொன்றாம் ஆண்டில் அடி எடுத்து வைத்து உள்ள சுவாமியின் பாதத்தில் இந்நூலை சமர்ப்பிக்கிறேன்.

2017 முதல் 2024 வரையிலான இந்த குறுகிய நாட்களில் அவர் செய்த லீலைகள் தான் எத்தனை! லீலைகளில்தான் எத்தனை எத்தனை வகைகள்! எத்தகைய அன்பின் வெளிப்பாடு! சத்யசாயி பிரேமசாயி போன்று வேறு மகாபுருஷர்கள் கடவுள்கள் இவ்வளவு அற்புதங்கள் நிகழ்த்தி இருப்பார்களா என்று எமக்கு தெரியவில்லை. இதை படிக்கும் போது சாயி அவதாரங்களில் சத்யசாயும், பிரேமசாயும் இங்கு (ரட்டபர்த்தியில்) நடத்திய அற்புதங்களை கண்டு பிரமித்துப்போவீர்கள்.

இப்படிப்பட்ட தெய்வமா இவர் என்று மலைத்து போவீர்கள், இப்படி எல்லாம் நடந்துள்ளதா! என்று ஆச்சரியத்தால் உறைந்து விடுவீர்கள், இவர்கள் செய்யும் அற்புதங்களை மகிமைகளை பற்றி வாய் திறந்து அவர்களாக ஏதாவது கூறியது உண்டா? சம்பந்தப்பட்டவர்கள் வந்து கூறினால் தானே வெளி உலகம் அறிகிறது. குழந்தையின் தாய் குழந்தைக்கு பால் கொடுப்பதை வெளியே சொல்லிக் கொண்டா இருக்கிறாள்.

அதைப்போல அவர் தம் குழந்தைகளுக்காக செய்த அற்புதங்கள் பற்றி ஒருநாளும் அவராக கூறியதில்லை.

இந்நூலில் வரும் நிகழ்ச்சிகள் என்னுடைய குறிப்பேட்டில் குறித்து வைத்தவைகளையே அதிகமாக கூறியுள்ளேன். இதில் வரும் சம்பவங்களில் 80 சதவீதம் நான் நேரில் பார்த்தவைகளே, இவைகளுக்கு நானே சாட்சி. 20% சம்பந்தப்பட்டவர்கள் நேரில் என்னிடம் கூறியது, அவர்கள் கூறியதில் நம்பகத்தன்மையை உறுதி செய்ய, சம்பந்தப்பட்ட நிகழ்ச்சியின் போது உடனிருந்த மற்றவர்களையும் கேட்டு, அவர்கள் கூறியதும் சம்பந்தப்பட்டவர்கள் கூறியதும் பொருந்தி வந்தால் தான் இந்நூலில் அந்நிகழ்ச்சியை சேர்த்து உள்ளேன்.

தனிப்பட்டவருக்கு பிரேமசாய் செய்த லீலைகள் ஏராளம். தினம் தினம் சாந்திநிலையம் வருபவர்கள் புது புது சம்பவங்களை பிரேமசாய் நிகழ்த்திய அற்புதங்களை கூறிக்கொண்டே உள்ளனர். அவர்கள் கூறுவது நாளுக்கு நாள் கூடி கொண்டே போகிறது. அப்படிபட்ட நிகழ்வுகளை இந்நூலில் சேர்க்கவில்லை. அதனால் 100 சதவீதம் இதில் வரும் சம்பவங்கள் உறுதிபடுத்தப் பட்டவைகளே. அதோடு இதில் வரும் நிகழ்ச்சிகள் ஏதோ நூறாண்டு, இருநூறாண்டு, ஆயிரமாண்டு பழமையானது அல்ல, கடந்த ஏழு வருட காலங்களில் நடந்தவைகளே. அதனால் இதில் சம்பந்தப்பட்டவர்கள் எல்லாம் இன்னும் வாழ்ந்து கொண்டு இருப்பவர்களே, பெரும்பாலானவர்கள் பிரேமசாயியின் பிரேமையால் ஈர்க்கப்பட்ட சாயி வட்டத்தை சேர்ந்தவர்களே. அவர்களிடம் நீங்களே பேசி இதில் வரும் சம்பவத்தையும், அனுபவத்தையும் நேரில் கேட்டே தெரிந்து கொள்ளலாம். ஒரு சிலரை தவிர எல்லோருடைய பெயரும் தேதியும் போடப்பட்டுள்ளது. விசாரித்து தெளிவதற்கு அவர்களின் போன் நம்பர்களும் உள்ளது.

**இதில் வரும் சம்பவங்களை மிகைப்படுத்தியோ, திரித்தோ கூறப்படவில்லை எதார்த்தமாக அப்படியே கூறப்பட்டுள்ளது. இப்புத்தகம் ஒரு குறிப்பேடு போல தான், வாய்மொழியாக சொல்ல சொல்ல எழுதப்பட்டுள்ளது.**

மற்றும் **புத்தக எழுத்தாளர்களின் தேர்ந்த திறமை கொண்டோ, பதிப்பக குழுக்களின் நிபுணத்துவம் கொண்டோ வடிவமைக்கப்படவில்லையாதலால், முதல் பதிப்பின் குறைகளையும், பிழைகளையும் பொறுத்துக் கொண்டு, தங்களது மேலான கருத்துக்களையும் வழங்க வேண்டுகிறேன்.**

என்னுடைய சொந்த வாழ்வில் சுவாமி நிகழ்த்திய அற்புதங்களை வேறு ஒரு புத்தகமாக எழுதும் அளவு நிறைய உள்ளது. ஆனால் இங்கு ஒரு சில நிகழ்ச்சிகளை தவிர மற்றவர்களின் வாழ்வில் நடந்ததையே அதிகமாக கூறப்பட்டுள்ளது, இங்கே இன்னொன்றையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

எங்கள் குடும்பம் நடுத்தர குடும்பம் தான், ஓரளவு பொருளாதாரத்தில் திருப்தியான நடுத்தர குடும்பமே, **பிரேமசாயியின் பெயரை எப்படியாவது உயர்த்தி தூக்கி காட்டி அதனால் ஏதாவது வருவாய் பார்த்து வாழ வேண்டிய அவசியம் இல்லாத குடும்பம்.** நாங்கள் இந்த ஏழு வருடங்களில் சுவாமிக்காக கோடிக்கணக்கில் சொந்த பணத்தை செலவு செய்து உள்ளோமே தவிர, வருகின்ற பக்தர்களிடம் உண்டியல் வைத்தோ, நன்கொடை கேட்டோ வசூல் செய்ததோ இல்லை.

எங்கள் குடும்பத்தை பற்றி நேரில் கண்டு தெரிந்தவர்கள் அறிவார்கள், இதுவரை **சாந்தி நிலையத்தில் ஏழு கோயில்கள்** கட்டி கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது, 2024 சுவாமியின் பிறந்தநாள் வரை உணவிற்கான பாக்கு தட்டுகள் 58,000 வரை வாங்கப்பட்டுள்ளது, குறைந்தது ஒரு பாக்கு தட்டிற்கு சாப்பாட்டு செலவு 2 5 ரூபாய்க்கும் குறையாமல் ஆகியிருக்கும்.

அது மட்டுமல்லாமல் **'பிரேம சத்ய மந்திர்'**கான நிலம் வாங்கியது, மராமரத்து செய்தது எல்லாம் சேர்த்து 50 லட்சத்திற்கு மேல் வருகிறது. ஒரு பவுன் தங்கம் நாற்பதாயிரம் - ஐம்பதாயிரத்துக்கு விற்கும் காலத்தில் அது எங்கள் தகுதிக்கு கொஞ்சம் கூடுதலான அதிக தொகைதான்.

இருந்தாலும் யாரிடமும் கைநீட்டி பணம் வாங்கவில்லை, இதுவரை எங்களின் சொந்த நிதியைத்தான் சாயியின் சேவைகளுக்காக செலவு செய்து உள்ளோம். யாரிடமும் அவ்வளவு தாருங்கள், இவ்வளவு தாருங்கள் என்று கேட்டதே இல்லை, சுவாமி பிரேமசாயியும் அதற்கு அனுமதிக்கவில்லை.

இன்னும் சரியாகச் சொல்லப்போனால் சுவாமியின் வருகைக்குப் பின்னரே பொருளாதாரமே முக்கியம் எனும் வாழ்வியலிலிருந்து விலகி, நாங்கள் தெய்வீக மேம்பாட்டிற்காகவும் சாயியின் அவதார நோக்கத்தின் அர்ப்பணிப்பிற்காகவுமே வாழ பழகி விட்டோம். ஆதலால் நிதி ஆதாரத்திலே பின்னோக்கிப் போகவில்லை என்றாலும் பொருளாதார முன்னேற்ற பயணம் நின்றே விட்டது எனலாம், எங்களோடு தொழிலில் உடன் பயணித்தவர்கள் உறவுகள் எல்லாம் எங்கோ முன்னேறி சென்று விட்டனர்.

காரணம் எங்களால் தொழிலில் முழுமையாக கவனம் செலுத்திட இயலாது போனது, சுவாமியின் வேலைகளிலேயே முழு கவனமாக இருப்பது ஒரு வகையில் எங்கள் பொருளாதார முன்னேற்றத்தை பாதித்துள்ளது. இதை எதற்கு சொல்ல வருகிறேன் என்றால், **சுவாமி பிரேமசாயியின் சிறப்பை உயர்த்தி காட்டி, மிகைப்படுத்தி சொல்லி, அந்த வகையில் ஏதேனும் வருமானம் பெற பார்க்கிறார்களோ?! என்று ஐயப்பட வேண்டாம், என்பதற்காகத்தான் இதையெல்லாம் முன்பே இப்பகுதியில் குறிப்பிட்டுக் கூறுகின்றேன்.**

**அடுத்தது புகழ், புகழுக்காக கௌரவத்துக்காக இந்நூலில் வரும் சம்பவங்களை மிகைப்படுத்தி கூறி விட்டார்கள் என்று நீங்கள் நினைக்க வேண்டியதும் இல்லை.**

**"ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை**
**சான்றோன் எனக் கேட்ட தாய்"...**

**..இது வள்ளுவரின் குரல்**

இந்த உலகின் பார்வையில் தன்மகன் சிறந்த அறிவாளி, பெரிய தொழில் செய்கிறான், நூறு - இருநூறு ஆள் வைத்து

வேலை செய்கிறான் அல்லது பெரிய கம்ப்யூட்டர் கம்பெனியில் 2 லட்சம், மூன்று லட்சம் சம்பளம் வாங்குகிறான், அங்கே இடம் வாங்கினான், அங்கே தோப்பு வாங்கினான், இங்கே வீடு கட்டினான், பேங்க் அக்கவுண்டில் இவ்வளவு பணம் உள்ளது என்று இருந்தால் தான் அவர்களுக்கும் அவர் குடும்பத்திற்கும் புகழும் கௌரவமும்.

இங்கோ "**ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனை சாமியார் என கேட்ட தாய்**" இப்படி அல்லவா எங்கள் நிலைமை உள்ளது, இந்த பொருளாதார உலகில் எங்கள் மகன் பிரேமயை வழங்கும் சுவாமியாக உள்ளான் என்றால், உறவுகளிடத்திலும் உலகத்தினரிடத்திலும் புகழ் எங்கே? பெருமை எங்கே? உள்ளது.

புதியவர்களிடம் அறிமுகமாகும் போது நீங்கள் என்ன தொழில் செய்கிறீர்கள்? குழந்தைகள் எத்தனை, பொண்ணு என்ன செய்கிறாள், பையன் என்ன செய்கிறான் என்ற கேள்விக்கு பதில் சொல்லும் போது தொழில் செய்யவில்லை, பையன் சாமியாக உள்ளான் என்று கூறும் போது **உள்ளமும் மனமும் நொறுங்கித்தான் போகிறது. அந்த வலியை அடிக்கடி அனுபவித்துக் கொண்டுதான் உள்ளோம்.** இந்த சமுதாயம் எந்தெந்த விஷயத்தை உயர்த்தி பிடித்துக் கொண்டுள்ளதோ அந்த விஷயத்தில் எங்கள் குடும்பம் அதலபாதாளத்தில் உள்ளது.

இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால் சுவாமி பிரேமசாயியை பற்றி மிகைப்படுத்தி எழுதவில்லை என்று கூறத்தான். 'சாமியார்களில் எங்கள் மகன் பெரிய சாமியார்' என்று காட்ட வேண்டும் என்று மிகைபடுத்தி கூறவில்லை. அந்த தேவையும் எமக்கு இல்லை.

பின் எதற்காக இந்த நூல் எழுதப்பட்டுள்ளது என்றால் அதற்கு காரணம் **இந்த ஏழு வருடங்களில் நடந்த சம்பவங்களை, நிகழ்ச்சிகளை, லீலைகளை, மகிமைகளை எதிர்கால சந்ததியினருக்கு பிரேமசாயியின் சரிதத்தை எடுத்து செல்ல வேண்டும், என்ற ஒரே நோக்கத்திற்காக மட்டுமே எழுதப்பட்டுள்ளது.**

காலத்தால் நிறைய நிகழ்வுகள் இப்பொழுதே அழிந்துவிட்டன, மறந்து விட்டன. நான் அவ்வப்போது சில சம்பவங்களை குறிப்பேட்டில் குறித்து வைத்திருந்த பழக்கத்தினால் தான் அந்த குறிப்புகளை கொண்டு, இந்த அளவுக்காவது நிகழ்ச்சிகளை கூற முடிந்தது, ஓரளவு விடுபட்ட ஞாபகங்களை சொல்ல சொல்ல தொகுக்கவும் முடிந்தது. அதிலும் 2018 ல் எழுதிய ஒரு குறிப்பேட்டை காணவில்லை, 2017 உள்ளது. 2019, 2020, 2021, 2022, 2023, 2024 உள்ளது. 2018 இல் நடந்த நிகழ்வுகளை முழுமையாக **இந்நூலில் கூற முடியவில்லை. எங்களுக்கும் மற்றவர்களுக்கும் ஞாபகம் இருந்த ஒரு சில நிகழ்ச்சிகளை மட்டுமே கூற முடிந்தது.** அதனால் வாசகர்களிடம் நான் சொல்ல வருவது இந்நூலில் உள்ள சம்பவங்கள் 99%ம் இல்லை 101%ம் இல்லை **100%** தான் என்று உறுதியாக ஐயப்படாமல் இருக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஸ்ரீ ராமரின் சரிதத்தை** வால்மீகி எழுதியுள்ளார். **ஸ்ரீ கிருஷ்ணரின் சரிதத்தை** வியாசமுனிவர் சொல்ல விநாயகர் எழுதியதாக சொல்வார்கள். சாயி அவதாரங்களில் **ஸ்ரீ சீரடிசாய் சரிதத்தை** முதன் முதலாக எழுதியவர் அன்னாஸாஹேப்தபோல்கர். **ஸ்ரீ சத்யசாய் சரிதத்தை** ஸ்ரீமான் கஸ்தூரி அவர்கள் முதன் முதலாக எழுதியுள்ளார்.

அந்த வரிசையில் **’பிரேமஸாய் சரிதத்தை’** முதன் முதலாக எழுதும் வாய்ப்பு அடியேனுக்கு கிடைத்ததை எண்ணி என் மனம் ஆனந்தத்தால் நிறைந்து உள்ளது. அந்த வாய்ப்பை கொடுத்த சாயி பகவானுக்கு என் நன்றியை கூறிக் கொள்கிறேன். **வாசகர்களுக்கு ஒரு வேண்டுகோள் இந்த புத்தகத்தை படிக்க ஆரம்பிக்கும் முன் சுவாமியையோ அல்லது உங்கள் இஷ்ட தெய்வத்தையோ மனதில் நினைத்து வணங்கி விட்டு பின் படிக்க தொடங்குங்கள். படிக்கத் தொடங்கும் முன் சுவாமி பற்றி உங்கள் மனதில் உயர்வாகவோ, தாழ்வாகவோ கொள்ளாமல் நியூட்ரலாக நடுநிலையில் இருந்து கொண்டு படியுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.**

**இது ஒரு புத்தகம் அல்ல தபோவனம் இதை வாசிப்பது என்பது ஒரு தபம்.** இதில் பிரேமஸாயின் மகிமைகளைப் பற்றியும் அவர் செய்த அற்புத லீலைகளையும் பற்றியுமே அதிகமாகக் கூறியுள்ளேன்.

அவரின் அறிவுரைகளை, போதனைகளை கூறவே இல்லை எனலாம். மணிக்கணக்கில் சாய் பேமிலி அன்பர்களுடன் அவர் பேசிய மிக உயர்ந்த ஆத்ம தத்துவங்களை தனி நூலாக வெளியிட ஆசை, அந்த ஆசையை சுவாமி விரைவில் நிறைவேற்றுவார் என நம்புகிறேன். **திறந்த மனதுடன் வாருங்கள் பிரேமஸாய் கங்கையில் நீராடி மகிழ்வோம்.**



## வாருங்கள் என வரவேற்கிறோம்

**தண்டபாணி-மகாலட்சுமி-குடும்பத்தினர்**

சாந்தி நிலையம், தாராபுரம், இந்தியா.



# பிரேம சாய் பாபா



மனித ரூபத்தில் 'அவதாரம்'ஆக வந்து
அற்புதங்களை நிகழ்த்துவது
இறை சக்திக்கு பெரிதல்ல.

நமக்கு ஆறறிவை தந்திருந்தாலும்,
கூடவே மாயையும் தந்ததன் விளைவால்,
இறை சக்தியே நம்மைப் போன்ற மனித ரூபத்தில்
அவதாரமாக வந்தாலும் நம்ப முடியாமல் தவிக்கிறோம்.

ஆனால், நம்பிக்கையே இறை அருளை /
அவதாரத்தின் அருளை பெறுவதற்கு..
மிக முக்கியமான முதல் கருவி !!

~ பிரேம சாய்

(பிரேமாவதாரம் புத்தகத்தில் இருந்து..)

prema sai baba

www.premasaiashram.org

# ஊரும் உறவும்







தென்னா டுடைய சிவனே போற்றி!
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி!
ஈசனடி போற்றி எந்தை அடி போற்றி!
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி!
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி!
மாயப் பிறப்பருக்கும் மன்னன் அடிபோற்றி!
சிறார் பெருந்துறைந் தேவன் அடிபோற்றி!
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி!
தில்லையில் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானை ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து..!!

**- திருச்சிற்றம்பலம் -**

இப்புண்ணிய பாரதபூமியில் எத்தனையோ மகான்களும், முனிவர்களும், சித்தர்களும், ஞானிகளும், ஆழ்வார்களும், நாயன்மார்களும் தோன்றியுள்ளனர். இந்த தேசத்தில்தான் உயர் நிலையில் உள்ள பரம்பொருள் அவதாரமாக கீழே இறங்கி வந்து உலக மக்களை அதர்மத்தில் இருந்து காத்து தர்ம வழியில் திருப்பியது. சனாதனத்திற்கு ஊறு நிகழும் போதெல்லாம், பரம்பொருள் அவதாரமாக வந்து சனாதனத்தை மீண்டும் நிலை நிறுத்தியது. குருச்சேத்திரப் போரில் கலங்கி நின்ற அர்ஜுனனுக்கு ஸ்ரீ கிருஷ்ணர் தான் யார் என்றும், எதற்காக வந்துள்ளேன் என்றும் இவ்வாறு கூறுகிறார்.

**யதா யதா ஹி தர்மஸ்ய**
**கலானிர் பவதி பாரத!**
**அப்யுத்தானம் தர்மஸ்ய**
**ததாத்மானம் ஸ்றுஜாம்யஹம்!!**

எப்பொழுது எல்லாம் தர்மம் நலிவுருகிறதோ அப்போது எல்லாம் இறைவன் தன்னைத்தானே அவதாரம் செய்துகொள்கிறார் என்று ஸ்ரீ கிருஷ்ணர் சொல்கிறார்.

**பரித்ரானாய ஸாதூநாம்**
**விநாஸாய துஷ்க்ருதாம்!**
**தர்ம ஸம்ஸ்தாபனார்த்தாய**
**ஸம்பவாமி யுகே யுகே**

சாதுக்களை காப்பதற்காகவும், துஷ்டர்களை அழிப்பதற்காகவும் தர்மத்தை நிலைநாட்டுவதற்காகவும் யுகந்தோறும் தோன்றுகிறேன் என்கிறார் கிருஷ்ணபரமாத்மா.

**ஆன்மீகம் எனும் ரயிலின் எஞ்சின் போன்றது பாரதம். மற்ற நாடுகள் அதன் பின்னால் வரும் பெட்டிகள் போன்றது. இறைவனே! இப்பாரத தேசத்தில் தன்னை தோற்றுவித்துக் கொள்ளும் அளவு புன்னியம் உடையது இத்தேசம். இப்பாரத தேசத்தில் பிறந்துள்ள நாமும் அதிர்ஷ்டம் மிக்கவர்களே, அதிலும் தமிழகம் ஆன்மீக பூமி** இங்கு தான் 12 ஆழ்வார்கள் பிறந்த பூமி 63 நாயன்மார்கள் வாழ்ந்த பூமி, 18 சித்தர்கள் நடமாடிய பூமி. 'தென்னாடுடைய சிவனே போற்றி' எனவரும் திருவாசகத்தில் **சிவபெருமான் தென்னாட்டிற்கு அதாவது தமிழகத்திற்கு உரியவர். எல்லா நாட்டினருக்கும் பொதுவான இறைவனாக விளங்குபவர் என்று கூறுவதிலிருந்து தமிழகத்தின் பெருமையை உணரலாம்.**



பிரேம சத்ய மந்திர்
வளாகத்திலுள்ள
27அடி பிரேமலிங்கம்

முன்பு தமிழகத்தை சேர, சோழ, பாண்டிய மன்னர்கள் ஆட்சி செய்து உள்ளனர். கரூரில் இருந்து மேற்கே தாராபுரம், கோயம்புத்தூர், கேரளா வரை சேர அரசர்களின் ஆட்சியின் கீழ் இருந்துள்ளது. சோழர்கள் தஞ்சையை மையமாக கொண்டு ஆட்சி செய்து உள்ளனர்.

தஞ்சாவூர் என்றாலே கோவில்கள் தான் நினைவுக்கு வரும். வானுயர கோபுரங்களை உடைய கோவில்களை அமைத்து அக்கோவில்களுக்கு ஏராலமான நிலங்களை மானியமாக அளித்து, அதில் வரும் வருவாயை வைத்து அங்கு உறையும், இறைவனுக்கு ஆறு கால பூஜை செய்து மகிழ்ந்துள்ளனர். மதுரையை மையமாக வைத்து பாண்டிய மன்னர்கள் ஆட்சி செய்துள்ளார்கள். அவர்களும் பக்தியில் சளைத்தவர்கள் அல்லர். அங்குதான் சிவபெருமான் திருவிளையாடல் புராணமே நிகழ்த்தியுள்ளார், அங்குதான் சிவபெருமான் பிட்டுக்கு மண் சுமந்த வரலாறு எல்லாம் நடந்துள்ளது, **தமிழகத்தின் எல்லா கோவில்களுக்கும் ஒரு வரலாறு உண்டு. இறைவனின் திருவிளையாடல் உண்டு, சிவபெருமான் தமிழ்நாட்டில் புரிந்த திருவிளையாடல்கள் ஏராளம். அதனால்தான் தென்னாடுடைய சிவனே என்று பாடல் பெற்றார்.**

அப்படிப்பட்ட தமிழ்நாட்டில் சேர அரசர்கள் ஆட்சியின் கீழ் கொங்கு மண்டலம் இருந்து உள்ளது. அந்தக் கொங்கு நாடு தமிழகத்தின் வடமேற்கு பகுதி ஆகும். காடு கெடுத்து நாடு அமைத்தவர்கள் காமிண்டர் எனப்பட்டனர். காமிண்டர் என்ற சொல் கவுண்டர் என்று மருவியது. இங்கு வாழ்பவர்கள் வேளாண்மையை பிரதானமாகக் கொண்டதால் கொங்கு வேளாளக்கவுண்டர்கள் என்று அழைக்கப்பட்டனர். இது ஜாதி பெயர் அல்ல அவர்களது சிறப்பு பெயர். அந்த வகையில் நம் காவியநாயகன் **பிரேம சாயி பகவான் கொங்கு வேளாளக் கவுண்டர்கள் வழிவந்தவரே** இவர்களின் குலம் சேரன் குலம்.

இவர்களின் குலதெய்வம் முத்தூர் குப்பையன சுவாமி ஆகும். தாராபுரம் கொங்கு மண்டலத்தின் மத்தியில் அமைந்துள்ளது. துவாபர யுகத்தில் பஞ்சபாண்டவர்கள் 12 ஆண்டுகள் வனவாசமும், ஓராண்டு அஞ்ஞாத வாசமும் செய்ய வேண்டும். அதாவது ஒரு வருட காலத்திற்கு மறைந்திருந்து வாழ வேண்டும், அந்த ஒரு வருடத்தில் துரியோதனாதிகளுக்கு இவர்கள் மறைந்து வாழும் இடம் தெரிந்து விட்டால், மீண்டும் 12 ஆண்டுகள் வனவாசம் இருக்க வேண்டும். இவ்வாறு மறைந்திருந்து வாழ வேண்டிய சூழ்நிலையில் தான் விராட தேசத்தை அரசாட்சி செய்யும் விராட மன்னனிடம் வந்து தங்கள் உருவங்களை மாற்றிக்கொண்டு தர்மர், கங்கன் என்ற பெயரிலும் பீமன், வல்லன் என்ற பெயரிலும். அர்ஜுனன், ப்ரகந்நிலை என்ற திருநங்கையாகவும். நகுலன், கிருகதன் என்ற பெயரிலும், சகாதேவன், தந்திரிபாலன் என்ற பெயரிலும், திரௌபதி, சைலேந்திரி என்ற பெயரிலும், விராட மன்னனின் அரண்மனையில் பஞ்சபாண்டவர்கள் வேலை செய்து கொண்டிருந்தனர்.

இவ்வாறு பஞ்சபாண்டவர்களும், திரௌபதியும் ஒரு வருடம் மறைந்து வாழ்ந்த விராடபுரம்தான் இன்றைய தாராபுரம் என மருவியது. இவ்வாறு பஞ்சபாண்டவர்கள் 10 மாதம் யாரும் தங்களை இன்னார் என்று அடையாளம் காண முடியாமல் வாழ்ந்து விட்டார்கள். இன்னும் 2 மாத காலம் இவ்வாறு இருந்துவிட்டால், அஸ்தினாபுரம் திரும்பி செல்லலாம் துரியோதனன் எங்கு பசுமையும் செல்வச் செழிப்பும், சரியானபடி மழையும் பெய்கின்றதோ, அங்கு தான் பாண்டவர்கள் இருப்பர் என அவர்களை தேடி தகவல் அனுப்ப ஒற்றர்களை நியமித்திருந்தான், ஒற்றர்கள் சொன்ன தகவல் படி பஞ்சபாண்டவர்கள் விராடபுரத்தில் தான் இருக்க வேண்டும் என்று முடிவெடுத்த துரியோதனன், விராட மன்னனின் ஆநிரைகளை அதாவது ஆடு, மாடு இவைகளை களவாடி ஓட்டிச் செல்கிறான். தகவல் அறிந்த விராட மன்னன் துரியோதனன் படைகளுடன் மோதும் அளவிற்கு தன்னிடம் படைபலம் இல்லையே, ஆநிரைகளை திருப்ப என்ன செய்வது என்று கவலையில் இருந்த போது, விராடனின் மகன் உத்திரனை அழைத்துக் கொண்டு, பிரகன்நிளை என்ற பெயருடன் இருந்த அர்ஜுனன் சென்று துரியோதனனின் படைகளை கொன்று ஆநிறைகளை திருப்புகிறான்.

அர்ஜுனன் போர் செய்து துரியோதனன் படைகளை கொன்ற இடம் தான் குண்டடம் என மருவி அழைக்கப்படுகிறது. இது தாராபுரத்தில் இருந்து பத்து கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது. ஆநிரைகளை திருப்பிய இடம் தான் திருப்பூர் எனவும் ஆனது திருப்பூர் தாராபுரத்தில் இருந்து 40 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

தாராபுரத்தில் விராடமன்னனின் அரண்மனை கோட்டைமேடு என்னும் பகுதியாக இன்றும் உள்ளது அங்கு கோட்டையின் இடிபாடுகள் ஆங்காங்கு உள்ளது சுரங்க பாதைகளும் நடன மண்டபமும் இன்றும் காணலாம். பாண்டவர்கள் தங்கள் ஆயுதங்களை மறைத்து வைத்திருந்த சுடுகாடு தில்லாபுரியம்மன்தோப்பு என்று இப்பொழுதும் உள்ளது. அரண்மனைக்கு காவல் தெய்வமாக பெருமாள் இருந்துள்ளார் அங்கு இன்னும் உள்ள கோவிலுக்கு கோட்டைபெருமாள் கோவில் என்ற பெயரே வழங்கப்படுகிறது. கோட்டையின் எல்லை தெய்வமாக ஆஞ்சநேயர் இருந்துள்ளார் அது காடு ஹனுமன்தராயர் கோயில் என்று அழைக்கப்படுகிறது. இந்த ஹனுமன் கோவில் வரலாறு மீண்டும் ஒரு யுகம் பின்னோக்கி செல்கிறது.

ராமாயண காலத்தில் ராம ராவண யுத்தம் நடைபெற்றுக் கொண்டுள்ளது அப்போது ராவணனின் மகன் மேகநாதன் எய்த ஆயுதத்தால் ராமர் படைகளும் லட்சுமணனும் மயங்கி விழுந்தனர் அவர்களை மயக்கத்திலிருந்து எழுப்ப வேண்டுமானால் சஞ்சீவி மூலிகை தேவை அந்த மூலிகை இமயமலையில் உள்ளது அதை எடுத்து வர சென்ற ஹனுமன் மூலிகை எது என்று தெரியாததால் மலையையே தூக்கி வருகிறார் அப்போது ஓய்வெடுத்துச் செல்ல இறங்கிய இடமே தற்போது உள்ள காடு ஹனுமந்தராயர் சுவாமி ஆலயம். சஞ்சீவி மலையை கீழே வைத்துவிட்டு ஓய்வெடுத்தவுடன் மீண்டும் தூக்கி சென்ற போது வீழ்ந்த சிறு குன்றே ஊதியூர் மலை எனப்படுகிறது இது தாராபுரத்தில் இருந்து 15 கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது அதோடு குண்டடம் வடுகநாத சுவாமி ஆலயம் திருப்பூர் அவிநாசியப்பர் ஆலயம் சிவன்மலை முருகர் ஆலயம் தாராபுரம் அமராவதி ஆற்றங்கரையில் உள்ள அகஸ்தீஸ்வரர் ஆலயம் பழனி தண்டாயுதபாணி சுவாமி கோவில் கொங்கண சித்தர் வாழ்ந்த கொங்கணமலை இவையெல்லாம் இந்த பகுதியை ஆன்மீக அதிர்வலைகளால் நிரம்பிய இடமாக வைத்துள்ளது.

## சுவாமியின் உறவு பற்றி

பிரேம சாயி பாபாவின் பாட்டனார் முத்துசாமிகவுண்டர். அவர் நூறு வருடங்களை தாண்டி இன்னும் ஆரோக்கியமாக வாழ்ந்து வருகிறார். அவர் துனைவி செல்லாத்தாள். அவர்கள் இருவருமே ஆத்மஞானசாதுசங்கம் எனும் ஆன்மீக அமைப்பில் உறுப்பினராகி, விருதுநகர் செந்தியப்ப சுவாமிகளிடம் உபதேசம் பெற்றவர்கள். அவருடைய மகன் கோவிந்தசாமியும், நல்லிமடசுவாமியிடம் உபதேசம் பெற்று, ஆன்மீக விசாரம் செய்பவர். கோவிந்தசாமி-சுப்பாத்தாள் ஆகியோரது மகன் தண்டபாணி, இவர் சிறு வயது முதல் சத்யசாயின் தீவிர பக்தர். 1983 ல் தனது 12 வது வயதில் முதன் முதலாக பகவான் ஸ்ரீ சத்யசாய்பாபாவை கொடைக்கானலில் சென்று தரிசனம் செய்கிறார். இவர் சத்யசாய் நிறுவனம் நடத்தும் பாலவிகாஸ் எனும் பாடத்திட்டத்தில் பயின்று தேர்வும் எழுதியுள்ளார். வாரம் ஒரு முறை வியாழக்கிழமைகளில் சத்யசாயி சேவா சமிதியில் நடைபெறும் பஜனையில் தவறாமல் கலந்து கொள்வார். சமிதி நடத்தும் சேவை பணிகளில் பங்கேற்பார், இரெட்டாலவலசில் நிறைய சேவை முகாம்கள் இவரால் நடத்தப்பட்டன. இரெட்டாலவலசு ஒரு பஜனா மண்டலியாக மாற இவரும் ஒரு காரணம்.

## சுவாமியின் அப்பாவிற்கு சத்யசாய்பாபா செய்த சகாயம்

ஒருமுறை பகவான் சத்ய சாயி பாபா ஊட்டி வந்திருப்பதை அறிந்து அவரை காண பஸ் ஏறி புறப்படுகிறார். ஊட்டியை அதுவரை பார்த்திராத சிறுவயது கிராமத்து பிள்ளையான அவர். அங்குள்ள மலைகளையும், சூழ்நிலையும் பார்த்து பயம் அடைகிறார். சத்யசாயி எங்கு உள்ளார் என்று முகவரி தெரியாததால், ஊட்டி பஸ் ஸ்டாண்டில் இறங்கி கொள்கிறார். அங்குள்ளவர்களிடம் முகவரி கேட்கிறார். அங்குள்ளவர்கள் மகாலிங்கம் பால் பண்ணையில் இறங்கி இருக்க வேண்டும். நீ ரொம்ப தூரம் சத்யசாய்பாபாவின் இருப்பிடத்தை விட்டு வந்து விட்டாய். வந்த வழியில் தான் திரும்பி போக வேண்டும் என்கிறார்கள். திரும்பிப் போக பஸ் ஏதும் அச்சமயத்தில் இல்லை. பகவானின் தரிசன நேரம் நெருங்கிக் கொண்டுள்ளது. சுவாமியை காணும் ஆர்வத்தில் பேருந்தை எதிர்பார்க்காமல், தான் வந்த திசைக்கு எதிர் திசையில் வேகமாக நடைபாதையில் ஓடுகிறார் அப்போது ஒரு வெள்ளை நிற அம்பாசிடர் கார்

இவர் செல்லும் நடை பாதை அருகில் வந்து ஒட்டிநிற்கிறது. ஒயிட் அண்ட் ஒயிட் அணிந்து கொண்டு காரை ஓட்டி வந்தவர், கதவை திறந்து ஏறிக்கொள் என்கிறார். இவரும் எதுவும் பேசாமல் ஏறிகொள்கிறார். காரில் வந்தவரும் எதுவும் பேசவில்லை. கார் பாட்டுக்கு போய்க் கொண்டுள்ளது.

அரை மணி நேர பயணத்திற்கு பின் கார் பார்க்கிங் அருகே கார் நிற்கிறது. அங்கு ஒயிட் அண்ட் ஒயிட்டில் ஸ்கார்ப் அணிந்து சேவாதளர்கள் நிற்பதை பார்த்தவுடன் இது சுவாமி உள்ள இடம் தான் என்பது புரிந்து ஆனந்தம் அடைகிறார். காரில் இருந்து இறக்கி விட்டவர். ‘மேலே செல் உனக்காக சுவாமி காத்துக் கொண்டுள்ளார்கள்’ என்கிறார். இவரும் மேலே சென்று திரும்பி பார்க்கிறார். தன்னை அழைத்து வந்தவர் காரை பார்க் செய்து விட்டு வருவார் என்று. ஆனால் இவர் வந்த காரோ, நபரோ அங்கு இல்லை, மாயமாகி விட்டனர்.

பகவான் சத்யசாயி தான் இவரை அங்கு அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார். இவர் உள்ளே சென்று அமரவும். சுவாமி(சத்யசாய்) வெளியே வரவும், சரியாக இருந்தது. இவ்வாறாக சுவாமியினால் அன்றே ஆட்கொள்ளபட்டவரான பிரேமசாயின் அப்பா, வருடம் ஒருமுறை புட்டபர்த்தி சர்வீசுக்கு செல்வார். சுவாமி(சத்யசாய்) கொடைக்கானல் வந்தால் அங்கும், தவறாமல் சேவைக்கு சென்று விடுவார். ஒருமுறை கொடைக்கானலில் சேவை முடிந்து சுவாமி(சத்யசாய்) இடம் பாத நமஸ்காரம் பெரும்பொழுது, தாராபுரத்தில் சமிதி கட்ட அருள் புரிய வேண்டும் என்று கேட்கிறார். சுவாமி சிரித்துக் கொண்டே ‘ரொம்ப சந்தோஷம்’ என்கிறார்கள். பெங்களூர் ஒயிட் ஃபீல்டில் ஒரு முறை சுவாமியிடம் இதையே கேட்கிறார். அப்போது ஏதோ புரியாத மொழியில் ‘காணியா காணியா ரொம்ப சந்தோஷம்’ என்கிறார்கள் சுவாமி.

தாராபுரம் சமிதி கண்வீனராக இருந்த மா.நடராஜன் ஒரு தலைமை ஆசிரியர். அவர் ஒரு முறை சுவாமி(சத்யசாய்) தரிசனத்தின் போது சுவாமியை தாராபுரத்திற்கு வர வேண்டும். என்று கேட்கிறார். அதற்கு சுவாமி (சத்யசாய்) கட்டாயம் தாராபுரம் சாந்திநிலையத்திற்கு வருவேன் என்று கூறியுள்ளார்கள். மற்றொரு முறை ஊட்டியில் சுவாமி தரிசனத்தின் போதும் இதையே கேட்டுள்ளார். அப்போதும் சுவாமி ‘தாராபுரம் சாந்தி நிலையத்திற்கு வருவேன், வந்து தங்குவேன்’ என்று உறுதியளித்திருந்தார்கள்.

அப்போது தாராபுரத்தில், சாந்தி நிலையம் என்று ஒன்று இல்லை, சுவாமி வருவார் என்று, தன்னுடைய வீட்டிற்கு சாந்திநிலையம் என்றே பெயர் வைத்திருந்தார் தலைமை ஆசிரியர் மா.நடராஜன் ஆனால் சுவாமி சொன்ன சாந்திநிலையம் அது அல்ல, ரட்டபர்த்தி சாந்தி நிலையம் என்று அப்போது யாரும் உணரவில்லை.

## சுவாமியின் பெற்றோர் திருமணம்



இப்படியாக சத்யசாயி உடன் ஆன்மீகப் பயணம் மேற்கொண்டு இருக்கும் சுவாமி (பிரேமசாயி) அப்பாவிற்கும், தாராபுரத்தை அடுத்துள்ள வடுகபாளையத்தில் வசித்து வரும் ரத்னசாமி - பத்மாவதியின் மகள் மகாலட்சுமிக்கும் திருமணம் நிச்சயிக்கப்படுகிறது. அப்பொழுது சுவாமி சத்யசாய்பாபா கொடைக்கானலில் முகாமிட்டிருந்தார்கள். இவர்கள் கொடைக்கானல் சென்று சுவாமிக்கு (சத்யசாய்பாபாவிற்கு) பத்திரிக்கை, மங்கள சூத்திரம், மஞ்சள் கலந்த அரிசி, தாம்பூலம், பூ இவைகளை அர்ப்பணிக்கிறார்கள். பகவான் சத்யசாயி பத்திரிக்கையை எடுத்துக்கொண்டு. மங்கலசூத்திரத்தை தொட்டு ஆசிர்வாதம் செய்து, மஞ்சள் கலந்த அரிசியையும், பூவையும் அள்ளி, சுவாமி (பிரேமசாயின்) அப்பா மேல் போட்டு ஆசிர்வாதம் செய்கிறார்கள். 1998 ல் இவர்களுக்கு திருமணம் நடைபெற்றது. இவருக்கு வாய்த்த மனைவியோ நல்ல குணவதி எள் என்றால் எண்ணெய்யாய் நிற்பார். இவர் திருமணத்திற்கு முன், சத்யசாய் பற்றி அறிந்திருக்கவில்லை. கணவனாகிய சுவாமி அப்பா மூலம் சத்யசாய் பற்றி அறிந்து அவரும் தீவிர சாய் பக்தர் ஆனார். அவரும் வருடம் ஒருமுறை பர்த்தி சர்வீஸ். சமிதி சர்வீஸ். வாரம் ஒரு முறை சமிதி பஜன் என்று பயணித்துக் கொண்டிருந்தார். அதோடு சுவாமியின் பாட்டனார் தாத்தா அவர்களும், ஆன்மீகப் பாதையில் பயணிப்பவர்களே. அவர்கள் எல்லாம் செய்த புண்ணியத்தால் தான் இந்த குடும்பத்தில் பகவான் வந்து பிறந்தார்கள். இவர்கள் சத்ரிய வம்சத்தில் வந்திருந்தாலும் நான்கு தலைமுறையாக சைவ உணவே சாப்பிடுபவர்களாக இருந்துள்ளனர். இவர்களுடைய வீட்டிற்கு உறவினர்களின் வருகையை விட அடியார்களின் வருகையே அதிகமாக இருக்கும், வாரம் ஒரு முறை ஆத்மஞான சாது சங்க

உறுப்பினர்களை வரவழைத்து, ஒன்று கூடி விடிய விடிய ஆத்ம விசாரம் செய்வார்கள். கைவல்யநவநீதம் ஞானவாசிஸ்டம் போன்ற நூல்களில் இருந்து படித்து, ஆராய்ந்து உலகமும், உடலும், உலக வாழ்க்கையும் பொய் இவைகள். ஒரு நாள் அழியக்கூடியவை, உள்ளிருக்கும் இறைவன் தான் மெய், அதுதான் ஆன்மா. ஆன்மாவிற்கு அழிவில்லை என்று உணர்த்தவர்கள் அவர்கள். குருவுக்கு உகந்த நாளான வியாழக்கிழமை, மெய்யடியார்களை அழைத்து அவர்கள் பாதம் பணிந்து உணவு படைத்து. பின்னர் ஆன்மீக விசாரம் செய்வார்கள். அதன் தொடர்ச்சியே பிரேமசாயும் வியாழக்கிழமையை புனித நாளாக தேர்வு செய்துள்ளார். என்று எண்ணத் தோன்றுகிறது. அதன் நீட்சி தான் இன்றும் நடந்து கொண்டுள்ளது.





குடும்பத்தாருடன் சத்யசாய்

குடும்பத்தாருடன்

# பிரேமசாய்

[ இடமிருந்து வலமாக ]

1. சுவாமி அக்கா - சுதர்சனா
2. ஆத்தாள் - சுப்பாத்தாள்
3. சுவாமி அம்மா - மகாலட்சுமி
4. சுவாமி அப்பா - தண்டபாணி
5. தாத்தா - கோவிந்தசாமி
6. பாட்டையன் - முத்துச்சாமி



சுவாமி பிரேமசாயி யின்
லிங்கோத்பவம்





சுவாமி பிரேமசாய்
வெறும் கையசைப்பில்
வரவழைத்து கொடுத்த லிங்கம்!

# பிறப்பும் – வளர்ப்பும்



நமச்சிவாய வாழ்க!
நாதன் தாள்வாழ்க!!
இமைப்பொழுதும் என் நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க! கோகழியாண்ட
குருமனிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகி நின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க!!

தண்டபாணி மகாலட்சுமியை 1999ல் கரம் பிடித்தார். அத்தம்பதியருக்கு 10/11/2000 ல் ஒரு பெண் குழந்தை பிறந்தது, அவளுக்கு 'சுதர்க்ஷனா' என்று பெயர் சூட்டினர்.

பகவான் சத்யசாயின் தாயார் பெயர் ஈஸ்வராம்பா, அவர் கருவுற்றிருந்த சமயம் தண்ணீர் எடுக்க மாமியாருடன் கிணற்றிற்கு சென்றுள்ளார். அந்த அதிகாலை வேளையில் ஆகாயத்திலிருந்து வந்த ஒரு நீல நிற பந்து போன்ற உருண்டை ஒன்று ஈஸ்வரம்மாவை சூழ்ந்து கொள்கிறது. கொஞ்ச நேரத்தில் அவர் உள்ளே இறங்கியும் விடுகிறது. அதன் வாயிலாக அந்த பரம்பொருள் தன்னை அவதாரமாக குறுக்கி இறங்கியது அந்த குழந்தைதான் பூர்ணாவதாரம் சத்யசாயாக பூமியில் ஜனனம் எடுத்தது.

தசரத சக்கரவர்த்திக்கு மூன்று மனைவிகள் இருந்தும் குழந்தைகள் இல்லை. குழந்தை வரம் வேண்டி ஒரு யாகம் செய்கிறார்கள். அந்த யாகத்தீயில் இருந்து நீலநிற தேவதை தோன்றி ஒரு அமுத கலசத்தை தருகிறது. அதனை தனது மூன்று மனைவியருக்கும் பகிர்ந்து அளிக்கிறார் தசரத மன்னர். அந்த அமுதத்தை மூன்று கிண்ணங்களில் நிரப்பி ஒன்றை கௌசல்யாவிடமும், ஒன்றை கைகேயிடமும், ஒன்றை சுமித்ராவிடமும் கொடுக்கின்றார். சுமித்ராவிடமிருந்த கிண்ணத்தை ஒரு பறவை வந்து தட்டி விட்டு செல்கிறது. பதறிப் போயினர் மூவரும். கைகேயி தன்னிடம் இருந்த அமுதத்தை கொஞ்சமும், கௌசல்யா தன்னிடம் இருந்த அமுதத்தை கொஞ்சமும், சுமித்ராவின் கிண்ணத்தில் ஊற்றி கொடுக்க, மூவரும் அருந்துகின்றனர். அதன் மூலமாக கௌசல்யாவிற்கு ஸ்ரீ ராமரும், கைகேயிக்கு பரதனும். சுமித்ராவுக்கு லக்ஷ்மணரும் சத்துருக்கணனும் பிறக்கின்றனர்.

ஸ்ரீ கிருஷ்ணரின் தாய் தேவகியும், தந்தை வசுதேவரும், கம்சனால் சிறையில் அடைக்கப்பட்டு இருக்கின்றனர். அவர்களுக்கு பிறக்கும் குழந்தையால் தனக்கு மரணம் என்று அசரீரி வாக்கு கூறியதால், அவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளை கொன்று விடுவான் கம்சன். இப்படி ஏழு முறை அவருக்கு பிறக்கும் குழந்தைகளை கம்சன் கொன்று விட்டான். தேவகி எட்டாவது முறையாக கர்ப்பம் தரித்துள்ளாள். அப்போது ஆகாயத்தில் இருந்து வந்த நீல நிற ஒளி ஒன்று தேவகியின் உடலில் இறங்கியது. அந்த குழந்தை தான் ஸ்ரீ கிருஷ்ணராக பிறந்து கீதையை நமக்கு தந்தது.

அதேபோல இயேசு பிறந்ததும் அந்த மாதிரி தான். ஆகாயத்தில் தோன்றிய ஒரு நீல நிற நட்சத்திரம் இறங்கி வந்து மேரியின் உடலில் கலந்து விடுகிறது. கன்னி மேரி கர்ப்பம் தறிக்கிறாள். அந்த குழந்தை தான் இயேசுவாக பிறந்தது. இந்த சம்பவங்களை எல்லாம் பார்க்கும்போது நீலநிற ஒளி தான் இறைபேராற்றல் என்று நமக்கு தெளிவாகிறது. எல்லா அவதாரங்களின் உடலும் மனித கருவில் தான் உருவாகிறது. அந்த உடலின் உள்ளே ஆத்மாவாக நீலநிற ஒளி வடிவில், அந்த இறை ஆற்றல் இறங்கி கலந்து விடுகிறது, என்பது தெளிவாகிறது.



ஒவ்வொரு குணத்திற்கும் ஒரு நிறம் உண்டு என்று விஞ்ஞானிகள் கண்டு சொல்கின்றனர். க்ரில்லியன் கேமரா கொண்டு பிரணவ்ஸ்கி என்பவர். இந்தியாவில் உள்ள மகான்களையும், சித்தர்களையும், சாமியார்களையும் ஆய்வு செய்ய படம் எடுக்கிறார். அந்த கேமராவில் ஒவ்வொருவரின் உடலிலும் இருந்து ஆரா என்று சொல்லக்கூடிய ஒளிவட்டம் சுற்றி இருப்பது வெளிப்படும். ஒரு சிலரின் ஆரா சிவப்பு நிறத்தில் வெளிப்படுகிறது. இது உக்கிரம் அல்லது கோபத்தின் வெளிப்பாடு. ஒரு சிலரின் ஆரா கருஞ்சிவப்பு நிறத்தில் வெளிப்படுகிறது. இது அவர்களின் எதிர்மறை எண்ணங்களை காட்டுவதாகும்.

ஒரு சிலருக்கே அந்த ஆரா இளநீல நிறத்தில் வெளிப்படுகிறது. அதுதான் அன்பையும் கருணையயும் காட்டுவதாகும். இதன் அளவைப் பொறுத்தும் உள்ளது. ஒரு சிலரின் ஆரா அவர்களின் உடலை சுற்றி ஓரடி 2 அடி விட்டத்தில் இருக்கும். பெரிய மகான் என்று மக்களால் கொண்டாடப்படும், ஒரு சிலருக்கு 5 அடி 10 அடி வரை கூட அவர்களின் எண்ணத்தை பொறுத்து அந்த ஆரா வெளிப்படுகிறது. பிரனவுஸ்கி பகவான் சத்ய சாயிபாபாவை ஆராய்ச்சி செய்ய வருகிறார். சத்யசாய் மக்களிடையே தரிசனம் தந்து கொண்டுள்ளார். அப்போது பிரனவுஸ்கி படம் எடுக்கிறார் அதில் பகவான் சத்யசாயின் ஆரா இளநீல நிறத்தில் வெளிப்படுகிறது.

அது அவரின் உடலில் இருந்து 5 அடி 10 அடி வரை அல்ல தொடுவானின் எல்லை வரை நீள்கிறது. க்ரில்லியன் கேமராவில் அடங்காமல் விரிந்து செல்வதை பிரணவ்ஸ்கி காண்கிறார். தரிசனத்தின் பொருட்டு மக்கள் கூட்டத்தில் அவர் நடக்கும் போது அவரின் இள நீல நிற ஆரா கூட்டத்தில் அமர்ந்துள்ள ஒவ்வொருவரையும் தழுவி செல்கிறது. அன்பும் கருணையும் மிதமிஞ்சி பொழிகிறது. இதனைக் கண்ட பிரணவ்ஸ்கி ஆடிப் போய்விட்டார். மிகப்பெரிய மகான் என்று மக்களால் போற்றப்படுபவர்களுக்கு 5 அடி பத்தடி வரையே ஆரா இருக்கிறது. அதனால் பகவான் சத்யசாயி ஒரு மகானோ சித்தரோ அல்ல அவர் ஒரு தெய்வ புருஷர் சாட்சாத் இறைவனாகத்தான் இருக்க முடியும். அப்படிப்பட்டவரால் தான் இப்படி எல்லையில்லா கருணையும், அன்பையும், பாகுபாடு இன்றி எல்லோர் மீதும் கொண்டிருக்க முடியும் என்று தனது நாட்டிற்கு சென்று ஆய்வினைச்சமர்ப்பிக்கிறார்.

அவதாரங்கள் பிறப்பதற்கு முன்பே, கருவில் இருக்கும் போதே அந்த தெய்வீக பேராற்றல் நீலநிற ஒளியுடன் அவர்களை அடைந்து விடுகிறது என்பது இதன்மூலம் தெளிவாகிறது. மேலே கண்ட நிகழ்வின் சாயல் போல் ஒரு நிகழ்வு பிரேமசாயி கருவாக இருந்தபோது நடந்துள்ளது.

மகாலட்சுமி தண்டபாணி தம்பதியருக்கு முதலில் பெண் குழந்தை பிறக்கிறது. 2003 ல் மகாலட்சுமி மீண்டும் கருவுறுகிறார். தாராபுரம் பாலாஜி சூர்யா மருத்துவமனையில் பார்த்துக் கொண்டிருந்தனர். 5 மாத கருவாக இருந்தபோது வழக்கமான செக்கப்பிற்கு செல்கிறார்கள். மகாலட்சுமியை செக்கப் செய்த டாக்டர் ஒரு குளுகோஸ் ஒரு இன்ஜெக்ஷன் போட்டுச் செல்ல பரிந்துரைக்கிறார். அப்போதே குளுக்கோசும், இன்ஜெக்ஷனும் போடப்படுகிறது. குளுக்கோஸ் இறங்கி கொண்டுள்ளது அப்போது மகாலட்சுமியின் உடல் நீல நிறமாக மாறி உடலெங்கும் பரவுகிறது அதனைக் கண்ட மகாலட்சுமியின் அம்மா பத்மாவதி ஓடிச்சென்று செவிலியரிடம் சொல்கிறார். அவர்கள் வந்து குளுக்கோஸ் இறங்குவதை நிறுத்தி விடுகின்றனர். சற்று நேரத்தில் அவரின் உடல் இயல்பான நிறத்திற்கு மாறிவிட்டது. அப்போது சுவாமிஅப்பா இன்ஜெக்ஷனை மாற்றி போட்டு விட்டார்கள் அதனால் தான் தான் இப்படி ஆகி உள்ளது என்ற கோபத்தில், டாக்டரிடம் சென்று இவ்வளவு அசால்ட்டாக வேலை பார்த்து உள்ளீர்களே

ஏதாவது ஆகி இருந்தால் என்ன செய்வது, கொஞ்சம் கூட பொறுப்பில்லாத டாக்டர், பொறுப்பில்லாத நர்ஸ், உங்களிடம் வருவது தாயும், சேயும் ஆரோக்கியமாக இருப்பதற்கு வேண்டித்தான். ஆனால் நீங்களே அவர்களுக்கு எமனாகி விடுவீர்கள் போல உள்ளது என்றுள்ளார். உடனே டாக்டர் சென்று மகாலட்சுமிக்கு போட்ட குளுக்கோசையும், ஊசியின் காலி பாட்டிலையும் பார்த்துவிட்டு வந்து இது சரியான மருந்து தான். எல்லா கர்ப்பிணிகளுக்கும் போடுவது தான், இது அலர்ஜியையோ, மாற்று உபாதையையோ ஏற்படுத்துவது அல்ல, வேறு ஏதோ நடந்துள்ளது என்று கூறுகிறார். இதுவும் ஒரு வேலை அந்த பரம்பொருள் அவதாரமாக இறங்குவதற்கான நிலைப்பாடாக இருந்திருக்கலாம்.

## அவதாரம் பிறந்தது




**கருவுற்றால் தெய்வ மாதா**
**மகாலட்சுமி வயிற்றினிலே..**
**நீல ஒளியாய் பிரவேசம்**
**தேவ தேவர் கரகோஷம்**
**தெய்வ நாயகன் பிரவேசம்**
**தாங்கா இறை அருளாலே..**
**அன்னை நீங்கா இன்பம் பெற்றனளே!.**

காருண்ய மகா சக்தி, மானிட உருவில் உற்பவிக்கும் சுப முகூர்த்தம் நெருங்கிவிட்டது. விடிந்தால் செவ்வாய்க்கிழமை அதற்கு இன்னும் நாழிகைகள் உள்ளன. இதோ இந்த நாழிகை வரை திங்கட்கிழமைதான் பங்குனி மாதம், சோமவாரம் முருகனுக்கு உகந்த நாள், சிவசக்தியருக்கு பிரீதியான புனித நாள். பங்குனி மாதம் இரண்டாம் நாள் கிருஷ்ணபட்ச தசமி திதி மகாவிஷ்ணுவின் 9 அவதாரங்கள் நிகழ்ந்துவிட்டன. இனி நிகழப்போவது பத்தாவது அவதாரம், தசமதிதிக்கு பொருத்தமாக அமைந்துள்ளது. ராமர் பிறந்தது செவ்வாய்க்கிழமை, சத்ய சாயி பிறந்தது செவ்வாய்க்கிழமை, முருகனுக்கு உகந்தது செவ்வாய்க் கிழமை, பிரேமசாய் பிறக்கப்போவதும் செவ்வாய்க்கிழமை.

சோமவாரம் முடிய இன்னும் ஒன்னேகால் நாழிகை உள்ளது. மங்கள வாரம் பிறக்கவும் ஒன்னேகால் நாழிகை தான் உள்ளது.

உலகிற்கே பெரும் பேராக, ஒரு பிள்ளையை பெறப்போகிற மகாபாக்கியவதி மகாலட்சுமிக்கு பேற்று நோவு கண்டுவிட்டது.

ஆயாசத்திலேயே ஓர் ஆனந்தம், நோவிலேயே ஓர் இன்பம், எந்த தாய்க்கும் இருக்கக்கூடியதை விட இவளுக்கு கூடுதலாகவே இன்பம் இருந்திருக்குமோ?
ஏனெனில் உதிக்கப் போவது இறையல்லவா!

## தன்யகோ மகாலட்சுமி

தாயை குடல் விலக்கம் செய்த தாமோதரன் தரணியிலே நெளிந்து விட்டான். மிளிர்ந்து விட்டான். நித்திய தத்துவம் சச்சிதானந்தமாக நிலமிசை முகிழ்ந்து விட்டது.

**கண்ணன் பிறந்தான்**

**எங்கள் கண்ணன் பிறந்தான்**

**இந்த காற்றதை எட்டு**
**திசையிலும் கூறிடும்**

**தின்னம் உடையான்**
**மணி வண்ணம் உடையான்**
**உயர்தேவர் தலைவன் புவி மிசை தோன்றினான்**

**என பண்ணை இசைப்பீர்**

**இந்த பாரினில் துயர் நீங்கிடும் என்று இதை என்னிடை கொள்வீர்**

**இனி ஏதும் குறைவில்லை வேதம் துணையுண்டு.**

**- பாரதியார்.**

அவ்வருடத்தின் பெயரே **சுபானு வருடம்.** சுபத்தை தர போகிற வருடம். முருகனுக்கு உகந்த பங்குனி மாதம் இரண்டாம் நாள். செவ்வேலுக்குகந்த செவ்வாய்தினத்தில், ராமர் கையில் கொண்டுள்ள தனுசு ராசியில், உத்திராட நட்சத்திரத்தில், உலகையே உத்திராடனம் செய்ய வந்தவர்.

**அதிகாலை** பிரம்ம முகூர்த்தத்தில் **3மணிக்கு** சுகப்பிரசவமாக பூமியில் **(சிதானந்த்)** உதித்தார். ஆங்கில காலண்டர் படி **16/3/2004,** 3.00 AM (IST) இன்னும் சற்று நேரத்தில் செவ்வாய் தினம் விடிய செவ்வானத்தே உதிக்கப் போகிறான் ஆதவன். மாதவ சேயை காணப்போகிறான். அவருக்கு முந்தி நாம் குழந்தை சாய்க்கு **பிறந்தநாள்** வாழ்த்தை தெரிவித்துக் கொள்வோம்.

**நீண்ட நீண்ட காலம்**
**நீடு வாழ வேண்டும்!**

**வானம் தீண்டும் தூரம்**
**நீ வளர்ந்து வாழ வேண்டும்!**

**பண்பு வேண்டும் பணிவு வேண்டும்!**

**அன்பு வேண்டும் அறிவு வேண்டும்!**

**எத்திக்கும் உனை புகழ வேண்டும்!**

**எடுத்துக்காட்டாக நீவாழ வேண்டும்!**
**உலகம் பார்க்க உனது பெயரை நிலவு தாளில் எழுத வேண்டும்!**
**ஆயிரம் சூரிய பிரகாசம் உனது அழகு முகத்தில் கண்டோமே!**




**அன்னை பெற்ற பெரும் பேரு**
**தரணி கண்ட பெருநாளாம்!**

**அழகன் பெருமாள் வாழ்க**
**அவன் நாமம் என்றும் வாழ்க!**

**பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பல கோடி**
**நூறாயிரம் ஆண்டு வாழ்க வாழ்க வாழ்கவே!**

நாள் நட்சத்திரம் பார்த்து அக்குழந்தைக்கு **சிதானந்த்** என நாமகரணம் இட்டு மகிழ்ந்தனர் பெற்றோர். **சித்+ஆனந்தம்= எப்போதும் உள்ளத்தில் ஆனந்தமாய் இருப்பவன்** என்பது இதன் பொருள்.

எப்போதும், எல்லோருக்கும், ஆனந்தத்தை தருபவன் அவன் என்று தெரிந்தோ, தெரியாமலோ அன்றே அப்படி பெயரிட்டு இருந்தனர். **பெற்றோர் சூட்டிய பெயர் அவரது 14 வயது வரையே நீடித்தது. பின்னர் அது சுவாமி என்று மாற்றமடைந்தது. சின்ன சாமி, சின்னசாயி, ஆனந்தசாயி, பகவான் என்றெல்லாம் பக்தர்கள் அழைத்தனர்.**

அதில் ஒரு நெருக்கமும், ஒட்டுதலும் இல்லாமல் இருந்தது **சுவாமி என்பது பொருத்தமாகவும், எளிமையாகவும், இனிமையாகவும், உயர்வானதாகவும் இருந்தது அதனாலோ என்னவோ சுவாமி என்றே அன்பர்கள் அழைக்கலாயினர். அவரே பேச்சுவாக்கில் தன்னை சுவாமி என்றே குறிப்பிடுவதாலும் சுவாமி பார்த்து கொள்கிறேன். சுவாமி உங்கள் வீட்டுக்கு வருகிறேன். சுவாமிக்கு மிகவும் சந்தோஷம் என்பது போல் கூறுவதாலும், சுவாமி என்ற பெயரை நிலைத்து விட்டது.**

## சிதானந்த்தின் பால பருவம்

அதோடு அவருடைய குடும்பத்தினரும் சுவாமிஅம்மா, சுவாமிஅப்பா, சுவாமிஅக்கா, சுவாமிஆத்தா, ஸ்வாமிதாத்தா, என்று பெயர் மாற்றம் அடைந்தனர். அதற்குள் 14 ஆண்டுகள் முன்னோக்கி வந்து விட்டோமே. சிதானந்தை பார்ப்பவர்கள் அவன் அம்மா ஜாடையும் இல்லை, அப்பா ஜாடையும் இல்லை, அவர் குடும்பத்தினர் யார் ஜாடையும் இல்லையே, என்று பெண்கள் பேசிக் கொள்வார்கள். அவர் சத்யசாயின் ஜாடையில் அல்லவா உள்ளார். பரந்த நெற்றியும், உருண்டை முகமும், வளைந்த புருவமும், குறுகிய கழுத்தும், சற்று கூன் முதுகும், சற்று வளைந்த நுனிமூக்கும், மேல்தாடை பற்களில் உள்ள இடைவெளியும், விரிந்த வாயும், சத்யசாயின் முகத்தோற்றத்தையே காட்டுகிறது என்று சொல்வார்கள்.

சிதானந்த் நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தான். இயல்பிலேயே நல்ல குணமும், ஈவு இரக்கமும், அடுத்தவர்களுக்கு உதவும் மனப்பாங்குடனும் இருந்தான். அடுத்தவர்களுக்கு ஒரு கஷ்டம் என்றால் தன்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு செய்து அவர்களின் கஷ்டத்தை போக்க முயல்வான். தன்னால் முடியவில்லை என்றால் பெற்றோரை அழைத்து அவர்கள் மூலமாக அவர்களின் துன்பத்தைப் போக்க முயற்சிப்பான். பொய் சொல்லவே மாட்டான். பெரியோர்களை பெரிதும் மதிப்பான், எப்போதும் துருதுருவென்றே இருப்பான், குறும்புத்தனம் இருக்குமே அன்றி சேட்டைகள் இருக்காது. தனக்கு அது வேண்டும் இது வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்க மாட்டான். எலக்ட்ரானிக் பொருட்கள் என்றால் கொள்ளை இஷ்டம் அவைகளைப் பிரித்து மேய்வதில் அவனுக்கு பிரியம். ஓடாத ஃபேன் மிக்ஸி கிரைண்டர் இவைகளை கழட்டி சரி செய்து விடுவான். எப்பொழுதும் அவனைச் சுற்றி நண்பர்கள் கூட்டம் இருந்து கொண்டே இருக்கும். பள்ளி விடுமுறை நாட்களில் பள்ளி நண்பர்களை வீட்டிற்கு அழைத்துக் கொண்டு வந்து விடுவான்.

சிதானந்துக்கு முதல் அச்சராப்யாசம் புட்டபர்த்தியிலேயே நடைபெற்றது. அச்சராப்பியாசம் என்றால் குழந்தையை பள்ளிக்கு அனுப்பும் முன் ஒரு தட்டில் மஞ்சள் கலந்த பச்சரிசியை பரப்பி அதன் மேல் குழந்தையின் கையைப் பிடித்து ஓம் என்று எழுத செய்வது. அந்த நிகழ்வை பகவான் சத்யசாயி செய்விப்பார். என்று புட்டபர்த்திக்கு அழைத்துச் சென்றனர் பெற்றோர்.

அந்த காலகட்டத்தில் குழந்தைகளை தரிசனத்தின் போது முன் வரிசையில் அமர வைக்க கூடாது என்று ரூல்ஸ் இருந்ததால், சிதானந்தை முன்வரிசையில் அமர வைக்க முடியவில்லை. மூன்று நான்கு நாட்கள் தங்கி இருந்தும் சத்யசாயிடமிருந்து எந்த விதமான ரியாக்ஷனும் இல்லாததால் சிதானந்தின் பெற்றோர்களே புட்டபர்த்தியில் உள்ள காயத்ரி கோயிலில் வைத்து சிதானந்துக்கு அச்சராப்பியாசம் செய்து வந்தனர்.

பள்ளி செல்லும் காலம் வந்துவிட்டது. அவனை புட்டபத்தியில் உள்ள சத்யசாய் ஸ்கூலில் சேர்க்க வேண்டி விண்ணப்பித்தார்கள், இன்டர்வியூ கார்டும் வந்தது, புட்டபர்த்தி போய் இன்டர்வியூ அட்டென்ட் செய்தார். ஆனால் அவருக்கு அங்கு இடம் கிடைக்கவில்லை.

**அவன் படித்தது தாராபுரத்திலுள்ள பொன்னு மெட்ரிகுலேஷன் மேல்நிலைபள்ளி. பள்ளி செல்லும் முன் நீட்டாக குளித்து, சுத்தமான உடை அணிந்து, நெற்றியில் விபூதி பூசி, தன் பெற்றோர்களிடம் பாத நமஸ்காரம் பெற்று செல்வான். தூங்கி எழுந்ததும் காலை ஸ்துதி சொல்வதும், குளிக்கும் முன் மந்திரம் சொல்வதும், பூமித்தாய் துதி சொல்வதும், சாப்பிடும் முன் பிரம்மார்பணம் சொல்வதும் தவறாது செய்வான். இந்த விதமான நற்செயல்கள் செய்ய காரணம் ஒன்று உண்டு. சத்யசாய் சேவா நிறுவனங்கள் நடத்தும் பாலவிகாஸ் என்னும் பாடத்திட்டத்தில் சேர்த்து பயிற்றுவித்ததே இதற்கு காரணம்.**

பாலவிகாஸ் குருமார்களின் செல்லப் பிள்ளையாகவே இருந்தான், கிளாஸ் முடிந்து மற்ற பிள்ளைகள் வீடுகளுக்கு சென்றாலும், இவனை பிரிய மணம் இல்லாத பாலவிகாஸ் குருக்கள், இவன் இங்கேயே இருக்கட்டும் மாலையில் வந்து அழைத்துச் செல்லுங்கள் என்று சுவாமிஅப்பாவிடம் கேட்டுக்கொள்வர். அதற்காகவே ஞாயிற்றுக்கிழமைகளில் தாராபுரத்தில் நடக்கும் பாலவிகாஸ் கிளாசுக்கு காலையில் சிதானந்தை கூட்டிப் போய் விட்டுவிட்டு சுவாமிஅப்பா வந்து விடுவார். மாலையில் மீண்டும் போய் அழைத்து வருவார்.

**நன்றாக பேசக்கூட வராத திக்கி திணறி பேசும் சின்ன குழந்தையாக இருந்தபோதே ‘கணானாம்’ என்ற ஸ்லோகம் தெளிவாகச் சொல்லி பரிசும் பெற்று வந்தான்.**


சிதானந்த் பால பருவத்தில்..

# சிதானந்த்தின் இளமைகாலம்




பாலவிகாஸ் குரூப் ஒன்று குரூப் இரண்டு தேர்வு எழுதி தேர்ச்சியும் செய்திருந்தான். பாலவிகாஸ் மட்டுமல்ல பள்ளி படிப்பிலும் சுட்டியாக தான் இருந்தான். பள்ளிப்படிப்பு ஒன்பதாம் வகுப்பு அரையாண்டு தேர்வுடன் நிறைவுக்கு வந்தது பகவான். சத்யசாயும் தன்னுடைய ஒன்பதாம் வகுப்பு முடியும் முன்னே பள்ளி படிப்பை முடித்துக் கொண்டார்கள். என்பது இருவருக்கும் உள்ள ஒற்றுமைகளில் ஒன்று.

சிதானந்த் சுவாமி என்றாகிய ஆரம்ப காலத்தில் நடந்த நிகழ்வு ஒன்றை மட்டும் பார்த்துவிட்டு இந்த தலைப்பை நிறைவு செய்வோம். சுவாமியை பார்க்க வெளிநாட்டவர் இருவர் வருவதாக சுவாமிஅப்பாவிடம் தகவல் கூறியிருந்தனர். ஒன்பதாம் வகுப்பையே தாண்டாத சுவாமி எப்படி அவர்களுடன் ஆங்கிலத்தில் பேச முடியும், அவ்வளவு தூரத்திலிருந்து வருபவர்களுக்கும் சுவாமிக்கும் மொழி ஒரு பிரச்சனையாக ஒரு தடையாக இருக்க வேண்டாம், என சுவாமிஅப்பா திருப்பூரில் இருந்து வரும் சாய்அன்பர் செந்திலை வரச் சொல்லி இருந்தார்! அவருக்கு ஆங்கிலம் நன்கு பேச வரும் செந்திலும் வந்துவிட்டார். வெளிநாட்டவர்களும் வந்துவிட்டனர், சுவாமி வெளியே தரிசனத்திற்கு வரும் வரை செந்தில் அவர்களிடம் சுவாமியை பற்றியும், இந்த இடத்தைப் பற்றியும், சுவாமி குடும்பத்தாரை பற்றியும், ஆங்கிலத்தில் அவர்களுக்கு சொல்லிக் கொண்டிருந்தார்.

சற்று நேரத்தில் வெளியே வந்த சுவாமி வெளிநாட்டவர் இருவரையும் இன்டர்வியூ கொடுக்க உள்ளே அழைக்கிறார். அவர்களுடன் செந்திலும் சுவாமி ரூமிற்குள் செல்கிறார். சுவாமிக்கும் வெளிநாட்டவர்களுக்கும் இடையே மொழி பெயர்க்க, உள்ளே போன செந்திலை நீங்கள் வெளியே இருங்கள் அவர்களை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று அனுப்பி விட்டார். **இரண்டு மணி நேரம் உள்ளே மூவரும் பேசுகிறார்கள். இடைஇடையே சத்தமாக சிரிப்பது மட்டும் வெளியே கேட்கிறது. 2 மணி நேரம் கழித்து உள்ளிருந்தவர்கள் வெளியே வரும்போது கண்களில்**

**கண்ணீருடனும், நெற்றியில் சாயி வரவழைத்து பூசிய விபூதியுடனும் வந்தனர். அவர்கள் ஆனந்தத்துடன் கிளம்பி சென்றனர்.** சுவாமி இடம் என்ன மொழியில் அவர்களிடம் பேசினீர்கள்!? என்று கேட்க **இதயத்தின் மொழியில்** என்கிறார்.

**உலகையே படைத்து, பஞ்ச பூதங்களை படைத்து, பல்லுயிர்களைப் படைத்து, அவ் உயிர்களுக்குள் உணர்வையும், அறிவையும், படைத்து காத்து வரும் பரம்பொருளுக்கு மனிதனால் உருவாக்கிய மொழி அறியாததா? அவருக்கு புரியாததா?** சுவாமிஅப்பாவுக்கு தான் புரியாமல் மொழிபெயர்க்க ஆளை ஏற்பாடு செய்து விட்டார் என்பது மட்டும் புரிந்தது பின்னர்.







**வள்ளி தெய்வானையுடன்
பிரேமசாயி முருகனாக!..**



**அஸத்தோமா ஸத்கமய**
**தமஸோமா ஜோதிர்க்கமய**
**ம்ருத்யோர்மா அம்ருதம்கமய**
**ஓம் சாந்தி சாந்தி சாந்தி!**

**இறைவா! பொய்மையிலிருந்து உண்மை நிலைக்கும், இருளிலிருந்து ஒளிக்கும்.. அழிவிலிருந்து இறவாமைக்கும்.. எங்களை அழைத்துச் செல்வீர்களாக!!**

சுவாமியின்அப்பா, அம்மா, சத்யசாயி பக்தர்கள், வீட்டில் பூஜை அறையில் நிறைய சுவாமி படங்களும், திரும்பிய பக்கமெல்லாம் சத்யசாயி படங்களும் இடம்பெற்று இருக்கும். அவர்கள் சமிதி பஜன்களுக்கு வாரம் ஒரு முறை செல்வார்கள். அது மட்டுமல்லாமல் வீட்டிலேயே தினமும் காலை பிரம்ம முகூர்த்த நேரத்தில் 4.50 க்கு எழுந்து 21 முறை ஓம்காரமும், சத்யசாய் சுப்ரபாதமும் சொல்வார்கள். காயத்ரி மந்திரம் ஒன்பது முறை சொல்வார்கள். சத்யசாய் அஷ்டோத்திரம் எனும் 108 நாமாவளிகளை கூறி, மலர்களால் சுவாமியின் பாதத்திற்கு அர்ச்சனை செய்வார்கள்.

பின்பு பஜன் எனப்படும் இறை வழிபாட்டின் மூலம் இறைனின் பெருமையையும், காருண்யத்தையும், புகழ்ந்து கூறும் பாடல்களைப் பாடி சர்வதர்ம பிரார்த்தனை சொல்லி ஜோதி தியானம் செய்வர். ஜோதி தியானம் முடிந்து, மங்கள ஆரத்தி எடுத்து, லோகச்க்ஷேம பிரார்த்தனையுடன் நிறைவு செய்வார்கள். இதற்கு சரியாக ஒரு மணி நேரம் பிடிக்கும். இவ்வாறாக நீண்ட நெடுங்காலம் நாள் தவறாமல் பூஜை செய்து வந்தனர். எவ்வளவு வேலை இருந்தாலும் வெளியூர் பயணத்தில் இருந்தாலும் அங்கேயும் இந்நிகழ்வை நிறுத்தாமல் செய்து கொண்டிருப்பர். இப்படியாக வருடங்கள் போய்க் கொண்டிருந்தன.

பகவான் சத்யசாய்பாபா அவர்கள் தன் பக்தர்களுக்கு தன்னுடைய வருகையை காட்ட சுவாமி போட்டோவில் இருந்து விபூதி, குங்குமம், மஞ்சள் போன்றவைகளை வரவழைப்பார்கள் அல்லது விபூதி மனத்தை பரப்ப செய்வார்கள். போட்டோவில் இருந்து அமிர்தம், தேன், ருத்ராட்சம் வரும். ஒரு சில வீடுகளில் சுவாமி போட்டோவில் இருந்து பேப்பர் விழும், எடுத்துப் பார்த்தால் அவர்களின் பிரச்சனைக்கு தீர்வு அதில் இருக்கும். இது போன்ற நிகழ்வுகள் சத்யசாய் பக்தர்களுக்கு வியப்பூட்டும் விஷயம் அல்ல. அது சாதாரணமாகவே நடக்கும், சத்யசாயி பக்தர்கள் சுவாமிக்கு பிடித்த மாதிரி நடந்து கொண்டாலோ, அல்லது சிறப்பான முறையில் சேவைகள் செய்திருந்தாலோ, அல்லது சுவாமியின் மேல் அன்பும், பக்தியும் அதிகம் கொண்டிருந்தாலோ, சுவாமி தன்னுடைய அன்பை தன்இருப்பை இவ்வாறாக வெளிக்காட்டுவார்.

## பகவானின் வருகை

இக்குடும்பத்தாரின் பக்தியில் ஆனந்தம் அடைந்த பகவான் சத்யசாயி அவர்கள். 17/8/2017 வியாழக்கிழமை சுவாமியின் ரூமில் இருந்த போட்டோவில் இருந்து விபூதி விழச் செய்திருந்தார்கள். (இரவு 8.17 மணி என்று சுவாமி பின்னாளில் கூறினார்கள்) இதுதான் தொடக்கம்.

அன்று முதல் ஒவ்வொரு நாளும் ஒரு லீலையை பகவான் சத்யசாயி நிகழ்த்த ஆரம்பித்தார்கள். குங்குமம் ஒரு நாள் வரும், மஞ்சள் ஒரு நாள் வரும், ருத்ராட்சம் கலக் என்ற சத்தத்துடன் வந்து விழும், ஒரு நாள் மாலை சுவாமி ரூமில் தீபம் ஏற்ற நேரம் ஆகிவிட்டதால் சுவாமியே தீபம் இரண்டையும் ஏற்றிய லீலையும் நடந்துள்ளது.



பிரேமசாய் ஆசிரம ஹாலின் சத்யசாய் படத்திலிருந்து கொட்டும் விபூதி !



ஸ்ரீசத்யசாய் ஹால்முழுதும் தூவியிருந்த விபூதி



ஸ்ரீசத்யசாய் பூசிவிட்ட விபூதியுடன்



ஸ்ரீசத்யசாய் சிவன்சிலைக்கு தூவியிருந்த விபூதி

ஒரு நாள் சிதானந்த் கையில் கட்டியிருந்த (சத்யசாய் பகவானின் போட்டோவுடன் கூடிய) கடிகாரத்தின் கண்ணாடியின் உள்பக்கம் விபூதி வர செய்திருந்தார்கள். கடிகாரமுள் நகர முடியாமல் நின்று போய் இருந்தது. (அந்த கடிகாரத்தை சாந்தி நிலையத்தில் நேரில் இன்றும் காணலாம்) பூஜை அறையில் ஏசி மாட்டுவதற்கு முன்பு, நீரினால் இயங்கும் ஏர்கூலர் பெட்டி தான் வைக்கப்பட்டிருந்தது. அந்த ஏர்கூலரை பகவான் சத்யசாயி தானாகவே ஓட செய்வார். சத்யசாயே வேண்டும் போது தானாகவே நிறுத்திக் கொள்வார். அந்த ஏர் கூலருக்கு அவ்வப்போது தண்ணீர் ஊற்ற வேண்டும், அந்த வேலையை சிதானந்த் அவ்வப்போது செய்து விடுவார்.

ஒருநாள் காலை நேரம் பள்ளிக்கு கிளம்பிவிட்ட நிலையில் ஏர்கூலரில் தண்ணீர் மிகவும் குறைவாக இருப்பதை பார்த்த சிதானந்த், அவசர அவசரமாக சென்று சமையல் அறையில் இருந்த சொம்பு ஒன்றை கொண்டு தண்ணீரை எடுத்து வந்து ஊற்றுகிறார். காலை பள்ளி பேருந்து வரும் நேரமும் நேரம் ஆகிவிட்டது. அந்த ஏர்கூலருக்கோ 10 லிட்டர் தண்ணிக்கு மேல் ஊற்றினால் தான் நிறையும். ஒரு சொம்பு தண்ணீரை ஊற்றிய பின், மறுபடியும் சென்று ஒரு சொம்பு தண்ணீர் எடுத்து வருகிறார் சிதானந்த். வந்ததும் மெசினின் வாட்டர் டேங்க் பகுதியில் பார்த்தால் ஏர்கூலருக்குள் தண்ணீர் தானாகவே விழுந்து கொண்டு இருந்தது. உடனே குடோனில் வேலை செய்து கொண்டிருந்த பெற்றோரை கூவி அழைக்கிறார். அவர்களும் அவர்களுடன் வேலை செய்யும் ஆட்களும் உடனே ஓடி வந்து பார்க்கின்றனர்.

ஏர்கூலரின் மேல் வைத்துள்ள புனலின் அகன்ற மேல்பாகத்தில் எந்த விதமாகவும் தண்ணீரே ஊற்றப்பட வில்லை, ஆனால் அதன் கீழான குறுகிய அடிப்பாகத்தில் இருந்து சலசலவென தண்ணீர் ஏர்கூலருக்குள் செங்குத்தாக விழுந்து கொண்டிருக்கிறது. ஒரு நான்கு ஐந்து நிமிடம் வரை தண்ணீர் விழுந்து கொண்டிருந்தது. ஏர்கூலரின் அளவு காட்டி வரை நிரம்பியவுடன் தண்ணீர் தானாகவே நின்றுவிட்டது. இதை அப்போது இருந்த செல்போனில் வீடியோவும் எடுத்துள்ளார்கள். அந்நிகழ்வை இருப்பு வைத்துள்ளதால் சாந்திநிலையம் வருபவர்கள் எப்போது வேண்டுமானாலும் பார்க்கலாம். இவ்வாறான வேறுபல நிகழ்ச்சிகளையும், லீலைகளையும் பகவான் சத்யசாய் அரூபமாக அங்கு பிரசன்னமாகி தினமும் செய்து கொண்டே இருப்பார்கள். இதனை கேள்விப்பட்டு அக்கம் பக்கம் உள்ளவர்கள், உறவினர்கள், சாய் பக்தர்கள் நேரில் வந்து பகவானின் லீலைகளை

தரிசனம் செய்து கொண்டு செல்வர். குறிப்பாக தாராபுரம் சத்யசாயி சேவா சமிதியை சேர்ந்த பக்தர்களும், சின்னகாம்பாளையம் பஜனா மண்டலியை சேர்ந்த சாயி பக்தர்களும், தினமும் வருவார்கள். இங்கு கண்முன் நடக்கும் அற்புதங்களை கண்டு அவர்கள் ஆனந்தம் அடைவர். கூட்டமாக சங்கமிக்கும் நாட்களின் மாலை வேலைகளில் பஜனைகளும் சாயி பாடல்களோடு நடக்கும்.

பஜன் முடிவதற்குள் ஏதாவது ஒரு லீலையை சுவாமி நடத்தி விடுவார்கள். ஒரு நாள் பஜன் முடிந்து பஜன் ஹாலை விட்டு கடைசி ஆள் வெளியே வருகிறார். அவர் திரும்பி பார்க்கிறார். ஹால் முழுவதும் விபூதி, கால் வைக்க இடம் இன்றி பகவான் போட்டு இருந்தார்கள். எல்லோருமாக சேர்ந்து கூட்டி அள்ளி வைத்தனர். வீடுகளுக்கும் எடுத்துச் சென்றனர். ஒரு நாள் ஹால் முழுக்க தேன் வந்திருந்தது, ஹால் முழுவதும் சொட்டை இன்றி தேனை வரவைத்து ஊற்றி இருந்தார்கள் பகவான் சத்யசாய்.

ஆனால் ஒரு எறும்பு கூட வரவில்லை. தேனை பாத்திரத்தில் வலித்து எடுத்து ஊற்றிவிட்டு கழுவி சுத்தம் செய்து, துடைத்து விட்டு பஜன் வைத்தார்கள். இதற்கு இரண்டு மணி நேரம் ஆகிவிட்டது. இது அவர்களுக்கு சிரமம் என்று சுவாமி நினைத்ததாலோ, என்னவோ ஒரு நாள் ஒரு பாத்திரத்தை எடுத்து சுவாமி சத்யசாயே ஜன்னலில் கம்பி கொண்டு கட்டி போட்டோவில் இருந்து வரும் தேன் நேராக அந்த பாத்திரத்தில் விழுமாறு வெகு நேர்த்தியாக கட்டி விட்டிருந்தார்கள். பின் அந்த பாத்திரத்தை தேனால் நிரப்பி விடுவார்கள்.

அந்த அற்புதங்கள் நிகழ்ந்த சமயங்களில் அந்த பாத்திரத்தில் இருக்கும் தேனை வரும் பக்தர்களுக்கு பிரசாதமாகவும் அப்போது கொடுத்துக் கொண்டிருந்தார்கள். பாத்திரம் காலியானால் மீண்டும் தேனை நிரப்பி விடுவார்கள். ஒரு நாள் பார்த்தால் அரை பாத்திரம் தான் தேன் இருக்கும் அன்று கூட்டம் குறைவாகத்தான் வருவர். ஒரு நாள் பார்த்தால் நிரம்பி வழியும் படி இருக்கும் அன்று கூட்டம் நிறைய வருவர். இது நீண்ட நாட்களாக நடந்து கொண்டிருந்தது. பகவான் சத்யசாய் கட்டிய இந்த பாத்திரம் இன்னும் ஹாலில் வடபுறம் ஜன்னலில் அப்படியே உள்ளது. உள்ளே செல்ல வாய்ப்பு கிடைப்பவர்கள் இதை பார்க்கலாம். இவ்வாறாக விதவிதமான லீலைகள் தினமும் நடத்திக் கொண்டிருந்தார்கள். போன் செய்து சுவாமி இன்று என்ன செய்தார்கள் என்று கேட்கும் அளவு ஏதாவது ஒரு அற்புதம் நடந்து விடும். சாய் தரிசனத்திற்கு வருபவர்கள் வரும்போது பூ, பழம், ஸ்வீட், சாக்லேட் ஏதாவது ஒன்று வாங்கி வருவார்கள். அதை ஒரு தட்டில் வைத்து சுவாமி ரூமில் வைத்தால் அவர்கள் கிளம்புவதற்கு முன்னரே தட்டில் விபூதி போட்டு

## பிரசாதம் சாப்பிட்ட லீலை





**சத்யசாய் அரூபமாய் இருந்து சாப்பிட்ட பிரசாதம்**

இருப்பார்கள். அல்லது ஒரு பழத்தை உரித்து பாதி சாப்பிட்டிருப்பார்கள். ஸ்வீட்டில் ஒன்றை எடுத்து சாப்பிட்டு இருப்பார்கள் சாக்லேட் பாக்கெட் உடைக்காமல் வைத்திருந்தால் பாக்கெட் அப்படியே இருக்க உள்ளே இருந்து சாக்லேட்டை எடுத்து கவரை பிரித்து சாக்லேட்டில் பாதியை சாப்பிட்டு மீதியையும், கவரையும் அந்த பாக்கெட் மேலேயே வைத்திருப்பார்கள் பகவான். **அப்போது இருந்து சுவாமிக்கு பிரசாதம் வைக்கும் செயல் முறை தொடங்கியது.**

**சுவாமிக்கு என்று ஒரு சேரும், புட்ரெஸ்ட்டும், பக்கத்தில் ஒரு ஸ்டூலில் தண்ணீரும், கர்சீபும், வைத்திருப்பார்கள்.** இது எல்லா சத்யசாயி பக்தர்களின் வீடுகளிலும் செய்திருப்பார்கள். அதைப் போலவே இங்கும் சுவாமிக்கு என்று ஒரு சோபா ஏற்கனவே வைக்கப்பட்டு இருந்தது.

## சுவாமிக்கு வாங்கிய சோபா


ஸ்ரீசத்யசாய் அருபமாய்
வந்து அமர்ந்து கொள்ளும் இருக்கை

இந்த சோபாவிற்கு ஒரு கதை உண்டு. ஒரு சமயம் பகவான் சத்யசாய்பாபா கொடைக்கானலில் முகாமிட்டிருந்தார்கள். பழனி உடுமலை கோயம்புத்தூர் வழியாக பகவான் சத்யசாய் ஊட்டி செல்வதாக இருந்தது.

கொடைக்கானலில் சேவையில் இருந்த சுவாமிஅப்பாவிற்கு ஒரு ஆசை. பகவானுக்கு ஒரு சேர் வாங்கி அதில் பகவான் அமரும் அழகை காண வேண்டும் என்று ரொம்ப நாளாக இருந்தது. இப்போது சுவாமி பழனி வழியாக செல்வதால் பழனியில் இறங்கி அங்குள்ள பக்தர்களுக்கு தரிசனம் தந்து செல்வார்கள்.

பழனியில் சுவாமிக்கு சேர் வாங்கி வைத்து தனது ஆசையை நிறைவேற்றலாம் என முடிவு செய்து, பழனி கன்வீனரிடம் தகவல் சொல்லிவிட்டு கோயம்புத்தூர் சென்று சுவாமிக்கு சேர் வாங்கி வர சென்றார். சுவாமிஅப்பா அங்கு நிறைய கடைகளில் தேடியும் அவர் எதிர்பார்த்த மாதிரி சிம்மாசனம் போன்ற சேர் கிடைக்கவில்லை. ஆர்டர் கொடுத்தால் செய்து தருவதாக சொன்னார்கள். அதற்கு நேரமில்லை இப்போதைக்கு சோபா ஒன்றை வாங்கிச் செல்வோம் பிறகு பார்த்துக் கொள்ளலாம். என்று சோபாவை வாங்கிக் கொண்டு பழனி வருகிறார். இவர் வருவதற்கு இரவு 12 மணிக்கு மேல் ஆகிவிட்டது. அதற்குள் பழனியில் சுவாமி இறங்கி செல்லும் இடத்தில் ஏற்பாடுகளை செய்து கொண்டிருந்தவர்கள். சுவாமிக்கு ஒரு சேரையும் போட்டு ரெடி செய்து விட்டார்கள். பழனி கன்வீனரோ ஏற்கனவே வைக்கபட்ட சேரை எடுத்துவிட்டு, உங்கள் சோபாவை வைத்தால் அந்த சேர் வைத்தவருக்கு மன கஷ்டம் வரும் எனவே நீங்கள் வாங்கி வந்த சோபாவை எதிர் திசையில் வைத்து விடலாம் என்றார். சுவாமி எதில் அமர்ந்தாலும் சரி.

என்று அவ்வாறே வைக்கப்பட்டது. காலை 7:00 மணி சுமாருக்கு கொடைக்கானலில் இருந்து வந்த சுவாமி. அங்கு தரிசனம் தர காரிலிருந்து இறங்கி வந்தார்கள். இரு சேரிலும் அமரவில்லை சுவாமிஅப்பா வாங்கி வந்த சோபாவில் கையை வைத்து சிறிது நேரம் நின்று விட்டு திரும்பிவிட்டார்கள். இதுவே சுவாமி அப்பாவுக்கு பேரானந்தமாக இருந்தது.

அந்த சோபாதான் இன்றும் பூஜை அறையில் உள்ளது. அதில் சத்யசாய் அமருவதாகவே பாவனை செய்து பகவானுக்கு பிரசாதம்(படையல்) இடப்படும். பிரசாதம் என்றால் பெரியதாக ஒன்றும் இல்லை. காலையில் வீட்டில் சமைக்கும் உணவை முதலில் எடுத்து ஒரு தட்டில் வைத்து பூஜை அறையில் உள்ள சோபா அருகில் ஸ்டூலில் வைத்து விடுவர். பகவான் சத்யசாய் கை கழுவ ஒரு பாத்திரமும், குடிப்பதற்கு ஒரு செம்பில் தண்ணீரும், டம்ளரும், கர்சீப்பும் வைத்திருப்பர். சுவாமி சிறிதளவு பிரசாதம் எடுத்து சாப்பிட்டுவிட்டு பக்கத்தில் உள்ள பாத்திரத்தில் கை கழுவி இருப்பார்கள். அதற்கு அடையாளமாக கலங்கிய நீருடன் ஒரு சில பருக்கைகளும் இருக்கும். சத்யசாய் குழம்பு ரசம் இவைகளில் சிறிது ஊற்றி பிசைந்து சிறிது சாப்பிட்டும் இருப்பார்கள். மீதி சாப்பாட்டின் மேல் விபூதி போட்டு இருப்பார்கள். இது உணவு படைத்த சிறிது நேரத்திலேயே நடந்து விடும் இதை பிரசாதமாக சிதானந்தும், அவருடைய குடும்பத்தினரும் எடுத்துக் கொண்டு சாப்பிடுவர். அங்கு அப்போது இருப்பவர்களுக்கும் கொடுப்பர்.


ஸ்ரீசத்யசாய் சோபாவில் அமர்ந்து பூசிவிட்ட விபூதியுடன்

# சத்யசாய் தரிசனம்






28/08/2017 அன்று சிதானந்த் பள்ளி செல்ல கிளம்பிக் கொண்டிருந்தார். அவர் இன்னும் சாப்பிடாத நிலையில் பூஜை அறையில் வைத்துள்ள பிரசாத தட்டை எடுத்து வர பூஜை ரூம் உள்ளே சென்றபோது,

சோபாவில் பகவான் சத்யசாய் பாபா அவர்கள் அமர்ந்து தட்டை கையில் வைத்துக்கொண்டு சாப்பிடுவதை நேரில் கண்டுள்ளார். (பகவான் சத்யசாய் 2011 இல் தனது உடலை விட்டு விட்டார்கள்). இதுவரை சூட்சுமமாக இருந்து வரும் பகவான் சத்யசாய் ஸ்தூலமாக சிதானந்துக்கு காட்சி கொடுப்பது இதுவே முதல் முறை.

சிதானந்த் சிறு குழந்தையாக இருந்த போது கொடைக்கானலில் பகவான் தரிசனத்திற்கு எடுத்து சென்று இருந்தனர். அந்த வயதில் சிதானந்த் நன்றாக கூட சுவாமியை பார்த்திருக்க மாட்டார். இரண்டாவது அக்ஷராப்பியாசம் செய்ய புட்டபர்த்தி கூட்டிப்போனது அப்போதுதான் முதல் முதலாக சிதானந்த் சத்யசாய் பகவானின் தரிசனம் பெறுகிறார். அதற்கு அடுத்து இப்போது தான் சத்யசாய் தரிசனம் பெறுகிறார்.

## இரண்டாவது தரிசனம்

01/09/2017 அன்று வீட்டில் கலியும், கீரையும் சமைத்து இருந்தார்கள். அதனையே சத்யசாய்க்கு பிரசாதமாக படைத்திருந்தனர். சிதானந்த் பள்ளி செல்ல கிளம்பி கொண்டிருந்தார். தற்செயலாக பூஜை அறையை பார்க்க பகவான் சத்யசாய் கலிக்கு கீரையை ஊற்றி சாப்பிடுவதை பார்த்து உள்ளான். இன்றும் ஏர் கூலரில் தண்ணீர் இல்லை. சிதானந்த் தான் பள்ளிக்கு எடுத்துப் போகும் வாட்டர் கேனில் தண்ணீர் கொண்டு வந்து ஊற்றியுள்ளான். நாலைந்து முறை ஊற்றியும் நிறைய வில்லை. சுவாமியே (சத்ய சாய்) வந்து புனலின் மேல் தனது கையை வைக்க உடனே தண்ணீர் நிரம்பி விட்டது.

அன்று மாலை பாட்டியின் அறையில் சுவாமியே ஒரு கயிற்று கட்டிலை எடுத்துப்போட்டு அதில் ஜமுக்காலம் ஒன்றை எடுத்து விரித்து தலையணை ஒன்றையும் எடுத்துப்போட்டு படுத்திருந்தார்கள். அந்த அறையில் AC மாட்டியிருந்தது. அந்த AC யை ஆன் செய்து கதவை உள்பக்கமாக தாழிட்டுகொண்டு படுத்திருந்தார்கள். அன்று முதல் அந்தக் கட்டிலை சுவாமிக்கு என்று ஹாலில் போட்டு உள்ளார்கள். அது இன்னும் சுவாமியின் அறையில் உள்ளது. இதில் தான் சத்யசாய் படுத்துக்கொள்வார்கள்.



சத்யசாய் வந்து படுத்துக்கொள்ளும் கட்டில்

# சிவதரிசனமும் சமாதிநிலையும்



06/09/2017 காலை பள்ளி செல்ல சிதானந்த் குளித்துவிட்டு, வேஷ்டியை சுற்றிக்கொண்டு, ஹாலின் உள்ளே இருந்த ஹோம்ஒர்க் நோட்டை எடுக்க வந்துள்ளார். பூஜை அறையில் உள்ளே பார்த்ததும் மயங்கி கீழே விழுந்துவிடுகிறார். விழுந்த சத்தம் கேட்டு சுவாமிஅம்மா ஓடி வந்து பார்த்தபோது, சிதானந்துக்கு பேச்சு மூச்சு இல்லை. குடோனில் வேலை செய்து கொண்டிருந்த சுவாமிஅப்பாவை சத்தம் போட்டு கூப்பிட்டார். அவருடன் உள்ளே வேலை செய்து கொண்டிருந்தவர்களும் வந்து விட்டனர்.

வந்து பார்த்தபோது சிதானந்துக்கு மூச்சு இல்லை. கட்டை போல கிடந்தார் தூக்கி சோபாவில் படுக்க வைத்து நெஞ்சை அழுத்தி அழுத்தி பார்த்தார்கள். சிறிது நேரத்தில் மூச்சு வர ஆரம்பித்தது அவர்களுக்கும் சற்று நிம்மதி வந்தது. சுவாமிஅம்மாவும் ஆத்தாவும் அழுது கொண்டிருந்தனர். என்ன செய்வதென்றே தெரியவில்லை, என்ன செய்தாலும் சுயநினைவு வரவில்லை, தட்டிப் பார்த்தும், கை, கால்களை தேய்த்துப்பார்த்தும் எந்தப் பயனும் இல்லை. மூச்சு மட்டும் வந்து கொண்டிருந்தது. பள்ளி பேருந்து வரும் நேரம் ஆனதால் அப்படியே ஸ்கூல் யூனிபார்மை மாட்டி விட்டார்கள். சாப்பாடு எடுத்து வந்து வாயைத் திறந்து உள்ளே திணிக்க அப்படியே விழுங்கினார்.

அதற்குள் பள்ளி பேருந்து வந்துவிட, சாமிஅக்கா மட்டும் பள்ளிக்கு சென்றாள். ஈரோடு டிஸ்ட்ரிக்ட் பிரசிடெண்ட் ராஜேந்திரன் அவர்களுக்கு போன் செய்து கேட்க சுவாமி விபூதியை போடுங்கள் சரியாகிவிடும் என்றார். அதுவும் போட்டு பார்த்தாயிற்று எந்த பலனும் இல்லை. அப்படியே தான் இருந்தார். சுவாமி குடும்பத்தினர் அனைவரும் அழ ஆரம்பித்தனர்.

ஈரோட்டில் உள்ள பழம்பெரும் சாயி பக்தர் பாலகிருஷ்ணன் அவர்களுக்கு போன் செய்து நடந்ததை சொல்ல, அவர் புரிந்து கொண்டார். ஏதோ பெரிய காட்சியை பார்த்துள்ளதால் தான்
இந்த மயக்கம். இது பேரானந்த நிலை பயப்பட வேண்டாம்.
சாய் காயத்ரி மந்திரம் எல்லோரும் சேர்ந்து சொல்லுங்கள். நாளை இந்த நேரத்திற்குள் சரியாகிவிடும் என்றார். அதுவும் செய்தார்கள் பலன் இல்லை. அதற்குள் மணி பத்து ஆகிவிட்டது. இப்படியே வைத்துக் கொண்டு என்ன செய்வது மருத்துவமனை செல்லலாம் என்றும். கோவிலுக்கு அழைத்துச் செல்லலாம் என்றும். வேறு இடத்திற்கு சென்றால் ஏதாவது ஞாபகம் வரலாம் என்று, ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஐடியா கொடுத்தார்கள். அப்படியே வெளியே எங்காவது கூட்டி செல்லலாம் என்று முடிவு செய்யப்பட்டது.

சிதானந்த்தை தூக்கிக் கொண்டு வெளியே வந்து இறக்கிவிட நின்று கொண்டார். அப்படியே கைத்தாங்கலாக காருக்கு அழைத்துச் சென்று உட்கார வைத்துக் கொண்டு சுவாமிஅப்பா கிளம்பினார். சீட்ஸ் கட்டிடத்தில் வாட்ச்மேன் ஆக இருந்த ஐயனும் சிதானந்தும் கேலி செய்து கொண்டு நன்றாக விளையாடுவார்கள். அங்கு சென்று அவரைப் பார்த்தால் பழைய ஞாபகம் வந்துவிடும் என்று சீட்ஸ்க்கு அழைத்துச் சென்றார். அங்கு உள்ள தகர செட்டில் அவர் இருந்தார். காரில் இருந்த சிதானந்தை கை தாங்கலாக கூட்டிச்சென்று ஒரு சேரில் உட்கார வைத்தார்கள். அவரிடமும் எதுவும் பேசவில்லை. அவரும் நிறைய முயற்சி செய்தார்.

அப்போது நல்ல வெயில் தகர சீட்டின் சூடு மற்றவர்களுக்கு வேர்த்து கொட்டியது சிதானந்துக்கு வேர்க்கவில்லை உடல் ஜில்லென்றே இருந்தது எங்கோ வெறித்து பார்த்துக் கொண்டே இருந்தார். வேலை செய்யும் ஆட்கள் ஒவ்வொருவராக வர ஆரம்பித்தனர். என்ன செய்வது என்று தெரியாமல் மருத்துவமனை செல்லலாம் என்றால், அங்கு சென்று மருத்துவரிடம் என்ன சொல்வது இருந்தாலும் போகலாம் என்று மறுபடியும் காரில் அமர வைத்து தாராபுரம் நோக்கி சென்றார்.

போகும் வழியில் உள்ள ஒரு பேக்கரியில் நிறுத்தி, உள்ளே தூக்கி சென்று ஒரு சேரில் உட்கார வைத்தார். (முன்பு அந்த பேக்கரிக்கு சென்றால் அன்னாசிபழ ஜூஸ் வாங்கி கொடுக்க சொல்லி விரும்பி சாப்பிடுவார்) இன்றும் அண்ணாசி ஜூஸ் வாங்கி கொடுத்து ஸ்ட்ராவை வாயில் வைத்து திணிக்க அப்படியே குடித்தார். கொஞ்சம் நிம்மதியாக இருந்தது. மீண்டும் தாராபுரம் நோக்கி சென்றார்கள். போகும் வழியில் வித்தியாசமான காட்சி லாரி ஹாரன் அடித்துச் சென்றாலோ, பஸ் ஹாரன் அடித்தாலோ, கண் லேசாக திரும்பி அந்தப் பக்கமாக பார்த்தது. கொஞ்சம் ஞாபகம் வந்துவிட்டது போல் தெரிந்தது. தாராபுரத்தை ஒரு சுற்று சுற்றிவிட்டு வீட்டுக்கு வந்து விட்டனர். சுட்டி டீவி என்றால் விரும்பி பார்ப்பார். டிவி யை ஆன் செய்து அதைப்பார்க்கும்படி உட்கார வைத்தும் பார்க்கவில்லை.

1 மணியளவில் அப்படியே தூங்கி விட்டார். 3 மணி வரை தூங்கிக் கொண்டிருந்தார். 3 மணிக்கு எழுந்து நான் ஏன் இன்று பள்ளிக்கு செல்லவில்லை என்று கேட்டார். அரை மயக்கத்தில் இருந்தார். நடந்ததைச் சொன்னார்கள். என்ன நடந்தது எதைப் பார்த்தாய். என்று துருவி துருவி கேட்க தான் சிவனை பார்த்தேன். சிவனும் சக்தியும் சுவாமியின் அறையில் உள்ள சோபாவில் உட்கார்ந்து இருந்தார்கள் என்றார். எப்படி இருந்தார்கள் என்று சிவசக்தி போட்டோவை கொண்டு வந்து காட்டி, இப்படியா இருந்தார்கள் என்று கேட்க, இதைவிட 100 மடங்கு அழகாக இருந்தார்கள். இதில் இருப்பது போல் இல்லை. நிறைய நகை போட்டு இருந்தார்கள்.

என்னை எங்கோ கூட்டி சென்றார்கள். நம்முடைய மில் மாதிரி இருந்தது, அங்கிருந்து நடந்து சென்றோம். மிகவும் குளிராக இருந்தது, பனிக்கட்டியாக இருந்தது, ரொம்ப நேரம் நடந்து கொண்டிருந்தோம். கிரீடம் வைத்துக் கொண்டு அழகான நகை போட்டுக் கொண்டும் நிறைய பேர் ஆங்காங்கே இருந்தனர். பனிக்கட்டியில் வெறுங்காலில் நிற்கின்றனர் மிகவும் குளிராக இருந்தது. (அந்த வெயிலிலும் வேர்க்காததற்கு காரணம் சிதானந்தின் ஷூட்சும உடல் கைலாயமோ அல்லது ஏதோ ஒரு பனிபிரதேசத்தில் இருந்து உள்ளது. அதன் தாக்கம் இங்கு இருக்கும் ஸ்தூல உடலில் எதிரொலித்துள்ளது. அந்த குளிர்ச்சி தான் வேர்க்காததற்கு காரணம்) ஆனாலும் சந்தோசமாக இருந்தது. இடையில் பைனாப்பிள் ஜூஸ் கொடுத்தார்கள். ஐஸ் போட்டு இருந்தார்கள். இதெல்லாம் அரை மயக்கத்தில் இருந்தவாறு,

சிதானந்த் சொன்னது. இதற்குள் மாலை 5 மணி ஆகிவிட்டது. பக்கத்தில் உள்ள நல்லதங்காள் டேமில் தண்ணீர் நிரம்பி வழிந்ததால், அங்கே கூட்டிச் சென்றார்கள். அங்கு சென்றபின் கொஞ்சம் இயல்பு நிலைக்கு வந்தார். இப்பொழுது கையைப் பிடிக்க வேண்டியது இல்லை தானாகவே நடந்து வர முடிந்தது. இருட்டும் வரை அங்கேயே இருந்து விட்டு வீட்டிற்கு வந்தார்கள். இரவு சாப்பாடு ஊட்டி விட சாப்பிட்டுவிட்டு தூங்கிவிட்டார். காலையில் முற்றிலுமாக இயல்பு நிலைக்கு மாறிவிட்டார். ஆனால் நேற்று என்ன நடந்தது, என்று கேட்க அவருக்கு எதுவும் ஞாபகத்தில் இல்லை.

இப்பாரதத்தில் எத்தனையோ ஞானிகள், முனிவர்கள், யோகிகள், சித்தர்கள் நீண்ட நெடுங்காலம் தவம் செய்து இறைவனின் காட்சியை பெற்றுள்ளார்கள். ஆனால் இந்த நூற்றாண்டில் அதுவும் இந்த சின்னஞ்சிறிய வயதில் இறைக்காட்சியை கண்டது சிதானந்த் மட்டுமாகத் தான் இருக்கும். யாமறிய வேறு எவரும் சிவதரிசனம் பெற்றதாக கேள்விப்படவில்லை, சிதானந்த் ஒன்றும் தவமோ, யோகமோ, அப்பியாசமோ ஒரு நாள் கூட செய்ததில்லையே பள்ளி சென்று ஒன்பதாம் வகுப்பு படித்து கொண்டிருக்கும் மாணவனுக்கு என்ன அறிவு இருக்குமோ அவ்வளவு தானே இருந்து உள்ளது.

இது ஏதோ விட்ட குறை தொட்ட குறை என்பார்களே அந்த மாதிரி தான் இருந்திருக்க வேண்டும். அல்லது எங்கும் பொங்கி வழியும் நிறை இறை பேராற்றல், சிதானந்த் உள்ளே மூடி மறைக்கப்பட்டிருந்த இறைப்பேராற்றலை ஈர்த்து. அந்த சில மணி நேரம் இரண்டும் ஒன்றோடு ஒன்று கலந்து பின் பிரிந்து இருக்கலாம். இதெல்லாம் நம் அனுமானம் மட்டுமே. எது எப்படியோ இந்த உடலில் உள்ள சாதாரண கண்களால் இறை பரம்பொருளைக் கண்டுவிட்ட சிதானந்த் அவதாரமோ! இல்லையோ!

அவர் வரவழைத்துக் கொடுப்பது எல்லாம் கைத்தந்திரமோ மாயாஜாலமோ? எதுவாகவோ இருக்கட்டும் ஆபத்துக் காலங்களில் அவர் வந்து காத்தாரா அல்லது இயற்கையாகவே காப்பு நடந்து விட்டதா? எப்படியோ இருக்கட்டும் யோகியின் சுயசரிதையில் பரமஹம்ச யோகானந்தர் 300 வருடங்களாக, 400 வருடங்களாக, 500 வருடங்களாக இமயமலையில் யோகிகள் இன்றும் தவம் செய்து கொண்டிருக்கிறார்கள் என்று சொல்லி உள்ளார். அவர்கள் எதற்காக தவம் செய்கிறார்கள்? இந்த இறை காட்சியை காணத்தானே இவ்வளவு ஆண்டுகளாக அந்த குளிரிலும், மழையிலும் காத்து கொண்டு உள்ளனர். அதனை கண்டுவிட்ட சிதானந்த் சித்தபுருஷர்தானே, மகாயோகி தானே, மாமுனிவர் தானே அந்த

**சின்ன பையன் காலில் போய் விழுகிறார்களே என்று சிலர் கருதுகிறார்கள். இந்த ஒரு நிகழ்வே சிதானந்த் பாதநமஸ்காரம் கொடுக்க தகுதியானவர் என்று காட்டுகிறது.** அதைப் பெறுவதற்கு நமக்கு தகுதி உள்ளதா!? என்றுதான் பார்க்க வேண்டும்.

இது போன்ற **சிவதரிசனம்** மறுபடியும் ஒரு முறை கண்டுள்ளார். அந்நிகழ்ச்சியை பின்னர் பார்க்க போகிறோம்.

## விபத்தில் காத்த லீலை




09/11/2017 அந்த சமயத்தில் சீட்ஸ் குடோன் கட்டுமான பணி நடந்து கொண்டிருந்தது. தென் புறத்து குடோனில் மேல்புற சுவர் வைக்கும் வேலை நடந்து கொண்டிருந்தது. அந்தச் சுவரில் வென்டிலேட்டர்மட்டத்தை தாண்டி, மேலே வரி வைத்துக் கொண்டிருந்தார்கள். சுமார் 20 அடி உயரம் இருக்கும் 3 சாரம் போட்டு வேலை நடைபெறுகிறது. மேல் சாரத்தில் மேஷன்கள் இருவரும், அவர்களுக்கு கையாட்களாக பெண்கள் இருவரும் இருக்கின்றனர். அதற்கு கீழ் சாரத்தில் 2 பெண்கள் இருந்தார்கள். அதற்கு கீழ் சாரத்திலும் 2 பெண்கள் இருந்தார்கள். கீழே தரையில் உள்ளவர்கள் ஹாலோ பிளாக் கல், சிமெண்ட் கலவை போன்ற பொருட்களை கீழ்சாரத்தில் இருப்பவர்களுக்கு அனுப்புவர். அங்கு இருப்பவர்கள் நடுச்சாரத்தில் இருப்பவர்களுக்கு அனுப்புவார்கள். நடுச்சாரத்தில் இருப்பவர்கள் மேல் சாரத்தில் இருப்பவர்களுக்கு அனுப்புவர். அவர்கள் மேசன்களிடம் சேர்ப்பர். இப்படியாக 5 வரி ஹாலோ பிளாக் சுவர் வைத்தாயிற்று. சாரம் கிழபுறம் இருந்ததால் சுவற்றின் மறுபுறத்தில் போய் சந்துகளுக்கு சிமெண்ட் கலவை பூச வேண்டும், மம்பட்டியாள் ஒருவரை மேற்புறம் சென்று

சிமெண்ட் கலவை கொண்டு சந்து அடைக்கச் சொல்கிறார் மேஸ்திரி. அந்த மம்பட்டியாளுக்கு அவ்வளவாக அறிவு போதாது. மேல்புற சாரத்தில் ஏற வேண்டிய அவர் கீழபுற சாரத்திலேயே ஏறி மேற்புற சாரத்திற்கு தாண்டுகிறார். சுவர் சற்று முன் தான் கட்டப்பட்டுள்ள நிலையில், அதில் கை ஊன்றி மேற்குச்சாரத்திற்கு செல்ல, அவரின் கைவிசையால் 20 அடி அகலமும் 5 அடி உயரமும் உள்ள ஹாலோ பிளாக் சுவர் கிழபுறமாக சரிகிறது. முதல் சாரத்தில் இருந்த மேசன்கள் இருவரும் கீழே தாண்டி விட்டனர். அங்கு இருந்த 2 பெண்களும் சரிவில் சிக்கிக்கொண்டனர். அந்த ரெண்டு பெண்களுடன் ஹாலோ பிளாக் கற்களும் சேர்ந்து இரண்டாவது சாரத்தின் மேல் விழுகிறது. இரண்டாவது சாரமும் முறிந்து அங்குள்ள 2 பெண்களும் மேல் சாரத்தில் இருந்த இரண்டு பெண்களும் சேர்ந்து நால்வராக, கீழ் சாரத்தில் விழுகின்றனர்.

அந்தச்சாரமும் முறிந்து அங்கு இருந்த இரண்டு பேரும் சேர்ந்து ஆறு பேராக கீழே விழுகின்றனர். அவர்களைச் சுற்றி ஒரே கற்குவியல்களாக உள்ளது இதெல்லாம் ஒரு மணித்துளியில் நடந்து விட்டது. அப்போது அங்கு செட்டில் இருந்த சுவாமிஅப்பாவும், வாட்ச்மேன் ஐயனும், மேஸ்திரியும், சத்தம் கேட்டு ஓடி வருகின்றனர். அங்கே வந்து அந்த காட்சியை பார்த்த சுவாமிஅப்பா 'சாய்ராம்' என்று கத்தி விடுகிறார். கற்குவியல்களை விலக்கி ஒவ்வொருவராக வெளியே எடுத்து படுக்க வைக்கப்படுகிறார்கள். ஆறு பேரில் ஒருவருக்கு எதுவும் இல்லை. அவரும் சேர்ந்து இடிபாடுகளை அகற்றுகிறார். ஐந்து பேர் மயக்கத்தில் உள்ளனர். ரத்த காயம் எதுவும் தெரியவில்லை. கை, கால், எலும்பு முறிவு ஏற்பட்டு இருக்கலாம். 108 ஆம்புலன்ஸை அழைக்கலாம் என்று போனை எடுக்கிறார் சுவாமிஅப்பா. நூற்றியெட்டு வேண்டாம், போலிஸ் கேசாகிவிடும். காரிலேயே மருத்துவமனை அழைத்துச் செல்லலாம் என்கிறார் மேஸ்திரி. அப்படியே ஐந்து பேரையும் esteem காரில் தூக்கி போட்டு கொண்டு, தாராபுரம் வேல் மருத்துவமனைக்கு போகிறார்கள். போகும் வழியிலேயே இருவர்க்கு மயக்கம் தெளிந்து விட்டது. மூவர் மட்டும் மயக்கத்தில் இருந்தார்கள். அவர்களில் இருவர் மட்டுமே ஸ்ட்ரக்சரில் வைத்து அழைத்துச் செல்ல வேண்டி இருந்தது. ஒருவர் சரியாகி அவரே நடந்து வந்தார். அவசர சிகிச்சை பிரிவில் உள்ளே கூட்டி போய் டெஸ்ட் செய்த டாக்டர், வெளியே வந்து சொன்ன தகவல் தான் அதிர்ச்சியாய் இருந்தது. யாருக்கும் எதுவும் இல்லை. எல்லோரும் இயல்பாக தான் உள்ளார்கள். எந்த எலும்பு முறிவோ, ரத்தக் காயமோ,

மொக்கடியோ, எதுவும் இல்லை. ECG யும் நார்மலாக உள்ளது. இப்போதே அவர்களை கூட்டிச் செல்லலாம் என்கிறார். ஒரே ஒரு பெண்ணிற்கு மட்டும் கால் பெருவிரலில் லேசாக தோல் சிராய்ப்பு மட்டுமே. அதற்கும் கட்டோ தையலோ போடவில்லை. அப்படியே மஞ்சள் நிற மருந்தை பூசி அனுப்பிவிட்டனர். 500 ரூபாய் தான் பீஸ் போட்டிருந்தார்கள். பணத்தை கட்டிவிட்டு தம்பி பேக்கரியில் 400 ரூபாய்க்கு டீ வடை சாப்பிட்டுவிட்டு மீண்டும் கட்டிடத்திற்கு வந்து சேர்ந்தார்கள். இதற்குள் மதியம் ஆகிவிட்டது வீட்டிற்கு செல்கிறீர்களா? என்று கேட்க இந்த நேரத்தில் வீட்டிற்கு சென்றால், ஏன் வந்துவிட்டீர்கள்! என்று கேள்வி வரும் எனவே இங்கேயே இருந்து விட்டு மாலையில் மற்றவர்களுடன் சேர்ந்தே வீட்டிற்கு செல்கிறோம் என்றார்கள்.

மதிய உணவை சாப்பிட்டுவிட்டு, ஓய்வெடுக்க சொல்லியும் கேட்காமல் மற்றவர்களுடன் சேர்ந்து வேலை செய்ய சென்று விட்டனர். ஒரு ஹாலோ பிளாக் கல் குறைந்தது 20 கிலோ இருக்கும். அது இருபது அடி உயரத்தில் இருந்து ஒருவர் மேல் விழுந்தால் என்ன ஆகும்? விழுந்த இடம் நசுங்கி, பிய்ந்து போய் இருக்கும். தலையில் விழுந்திருந்தால் மண்டையோடு உடைந்து மூளை வெளியே வந்திருக்கும். எவ்வளவு பெரிய விபத்து! சார மரங்கள் உடைந்து தாறுமாறாக நீட்டிக் கொண்டுள்ளது. அதன் மேல் விழுந்திருந்தாலே போதுமே! இரண்டு மூன்று உயிர்கள் போயிருக்கும். 20 அடி உயரத்தில் இருந்து தாண்டிய மேசன்களுடன் சேர்த்து எட்டு பேரில் குறைந்தது ஐந்து பேராவது படுகாயம் அடைந்திருப்பர்.

ஆறு மாதம் ஒரு வருடம் ஹாஸ்பிடலில் சிகிச்சை பெற வேண்டி இருந்திருக்கும். அவர்களுக்கு எவ்வளவு கஷ்டம். ஏதாவது உயிர் சேதம் ஆகியிருந்தால், அக்குடும்பத்தாரின் நிலை என்ன? சுவாமிஅப்பாவுக்கு எவ்வளவு மன உளைச்சல். கட்டிடத்திற்கே ஒரு கெட்ட பெயர் வந்திருக்காதா? இவ்வாறு ஏதும் நடைபெறாமல் காத்தது யார்?

இது பகவான் சத்யசாயின் எவ்வளவு பெரிய அருட்காப்பு! எவ்வளவு பெரிய விபத்து சம்ரச்சனை! எவ்வளவு பெரிய ஆபத்பாந்தவம்! அவரின் அளவற்ற கருணையினால்தானே, நடந்த இவ்வளவு பெரிய விபத்து யாருக்கும், ஆபத்தை, சிறுகாயத்தை கூட ஏற்படுத்தவில்லை. இந்த ஒரு ஆபத்து சகாயத்துக்கே காலம் முழுவதும் சுவாமிக்கு நன்றியுடன் இருக்க கடமைப்பட்டவர்கள் அல்லவா? சுவாமிஅப்பா குடும்பத்தினர். (பின்னாளில் சிதானந் மூலமாக கட்டிட விபத்தில் இருந்து காப்பாற்றிய பகவான் சத்யசாயிக்கு நன்றி சொல்கிறார்.

சுவாமிஅப்பா. அப்போது பகவான், விலை உயர்ந்த கார்களில் இருக்கும் ஏர் பலூன் போல் தான் அங்கே இருந்து அவர்களை காப்பாற்றியதாகவும், நான் இங்கு இருக்கும்போது உனக்கு எதற்கு கவலை என்றும் கூறினார்கள்)

இங்கே ஒன்றை கவனிக்க வேண்டும். அந்த விபத்தின் போது சுவாமிஅப்பாவோ, வேறு யாரும் சுவாமியை காப்பாற்ற சொல்லி வேண்டவில்லை. சாமியப்பாவிற்கு விபத்து நடந்த பின் தான் விபத்து நடந்ததே தெரியும். வேலையாட்கள் கீழே விழும்போது ஒருவேளை தங்கள் இஷ்ட தெய்வத்தை வேண்டி இருந்தாலும் இருக்கலாம். ஆனால் அந்த நொடியில் ஓடி வந்து காத்தது பகவான் சத்யசாய்பாபா தான். சுவாமியே பலமுறை சொல்லியிருக்கிறார்கள். நீ என் வேலையை செய்தால் நான் உன் வேலையை செய்ய மாட்டேனா? என்று. சாமியப்பா சுவாமி வேலையை செய்து கொண்டிருந்ததே அந்த விபத்திலிருந்து அவர்களை பகவான் காக்க காரணமாக இருந்தது.

19/9/2017 முதல் தொடர்ந்து ஐந்து நாட்கள் ஏர்கூலர் ஓடவில்லை, சாப்பாடு சாப்பிடவில்லை, தண்ணீர் குடிக்கவில்லை, வைத்தது வைத்தபடி அப்படியே இருந்தது. வேறு எந்த நிகழ்வும் இல்லை. பகவான் சத்யசாயி வேறெங்கோ சென்று விட்டார்கள். போல இருந்தது. அவ்வளவு லீலைகளை பார்த்துவிட்டு ஐந்து நாட்கள் சுவாமி அமைதியாக இருந்தது என்னவோ போல இருந்தது. ஒருவேளை அவ்வளவுதானா! சுவாமி போய்விட்டார்களா! இனி வரமாட்டார்களா! என நினைக்க அழுகை வரும். 24/9/2017 அன்று காலை 7:00 மணிக்கு ஏர்கூலர் தானாக ஆன் ஆகி ஓடிய சத்தம் கேட்டதுமே! உள்ளம் மகிழ்ச்சியால் குளிர்ந்தது அக்குடும்பத்தினருக்கு.

## சத்யசாயி தரிசனமும், ஸ்பரிசனமும்

13/10/2017 அன்று சுவாமிஅப்பா தொழில் சம்பந்தமாக கொடுவாய் சென்றிருந்தார். 12 மணி சுமாருக்கு பள்ளியிலிருந்து போன் செய்து சிதானந்துக்கு வயிற்று வலி வந்து கூட்டிச் செல்லுங்கள் என்று கூறினார்கள். சுவாமிஅப்பா பள்ளிக்கு சென்று சிதானந்தை கூட்டிக்கொண்டு ஹாஸ்பிடல் போகிறார். சிதானந்தோ சுவாமியிடம் போலாம், சுவாமி இடம் என்னுடைய வயிற்று வலியைப் சரி செய்ய சொல்லிக் கொள்கிறேன். என்னை சீக்கிரம் வீட்டுக்கு கூட்டி செல்லுங்கள் அப்பா என்கிறான். வீட்டுக்கு வந்ததும் சுவாமி ரூமிற்கு சென்று வயிறு வலிக்கிறது என்று சொன்னதும், சுவாமி சத்யசாயி உருவமாக சோபாவில் இருந்து எழுந்து வந்து விபூதி வரவழைத்து, சட்டையை மேலே

தூக்கி வைத்து வயிற்று பகுதியில் தேய்த்து உள்ளார்கள். மீதி கையில் இருந்த விபூதியை சட்டையின் மேற்புறத்தில் துடைத்து விட்டு மறைந்து விட்டார்கள். உடனே வயிற்று வலியும் போய்விட்டது. இது சிதானந்துக்கு சத்யசாய் பகவானின் ஆறாவது தரிசனத்துடன், ஸ்பரிசனமும். இதற்கு முன் ஐந்து முறை ஸ்தூலமாக காட்சி மட்டுமே கொடுத்துள்ளார்கள். இதுவே முதன்முறை சிதானந்தை தொட்டது.



ஸ்ரீ சத்யசாய் பூசிவிட்ட விபூதியுடன் சிதானந்த்

## சத்யசாயி தரிசனமும், ஸம்பாசனமும்

14/10/2017 காலை 9:00 மணியிலிருந்து சிதானந்துக்கு வயிற்றுப்போக்கு ஆரம்பித்தது. அது அதிகமாகி கொண்டே இருந்தது. அதோடு வயிற்று வலியும் சேர்ந்து கொண்டது. சுவாமிஅப்பா மருத்துவமனை அழைத்துச் செல்லலாம் என்று தயாரானார். சுவாமியிடம் சொல்லி விட்டு வர சிதானந்த் சுவாமியின் அறைக்கு சென்ற போது, உள்ளே சுவாமி சோபாவில் அமர்ந்தவாறு காட்சி கொடுத்துள்ளார்கள். எப்போதும் ‘ஆனந்தமாக இருப்பவனே வா’ நேற்று நிறைய இடங்களில் சாப்பிட்டதால் இன்று இங்கு சாப்பிட முடியவில்லை. இன்னும் நம்பிக்கை வரவில்லையா! நான் சாப்பிடவில்லையே! என அம்மாவை கவலைப்பட வேண்டாம் என்று சொல். நான் எப்போதும் இங்கேயே இருப்பேன். என்று கூறி சாப்பாட்டு தட்டை எடுத்து மடியில் வைத்துக் கொண்டு குழம்பை கொஞ்சமாக ஊற்றி பிசைந்து ஒரு வாய் சிதானந்துக்கு ஊட்டியும் விட்டுள்ளார்கள். பின்னர் விபூதி வரவழைத்து தந்து வாயில் போட்டும்விட்டுள்ளார்கள். பின் சுவாமி அப்படியே விபூதி சிலையாக மாறிவிட்டார்கள். சிறிது நேரத்தில் விபூதி சிலையும் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து விட்டது. இதுவே சுவாமி சிதானந்த் இடம் முதல் முறையாக பேசியது. அதோடு சிதானந்துக்கு வயிற்றுப்போக்கும், வயிற்று வலியும், நின்றுவிட்டது. மருத்துவமனை செல்லும் பயணமும் நின்று விட்டது.

# அந்தரத்தில் விபூதி நிரப்பிய லீலை

2017அக்டோபர்17 அன்று தாராபுரம் பகுதியிலிருந்து புட்டபர்த்தி சேவைக்கு செல்ல 35 பேருக்கு மேல் தயாராக இருந்தார்கள். ஈரோட்டில் இருந்து அருண் சாய் மற்றும் சர்வீஸ் ஒருங்கிணைப்பாளர் ஜெயச்சந்திரனும் சாயிசேவைக்கு செல்பவர்களை பார்த்து பேசி, சாயி சேவையின் முக்கியத்துவத்தையும், எவ்வாறு புட்டபர்த்தியில் சேவை செய்யவேண்டும் என்ற வழிகாட்டு அறிவுரைகளை கூறுவதற்கும் வருவதாக சொல்லி இருந்தார்கள். அதனால் சாயி சேவைக்கு செல்பவர்களை 10 மணிக்கு சாந்திநிலையம் வரச் சொல்லி இருந்தார் சுவாமி அப்பா. அவர்தான் தாராபுரம் பகுதியில் இருந்து **புட்டபர்த்திக்கு சாயி சேவைக்கு செல்பவர்களை பார்த்து பேசி, அவர்களை தயார் செய்து போக வர ரயில் டிக்கெட் தன் சொந்த செலவில் எடுத்துக் கொடுத்து அனுப்புவார். இது பல ஆண்டுகளாக நடந்து கொண்டிருக்கும் ஒன்று.** இன்று இங்கு சாயி சேவைக்கு செல்பவர்கள், சுவாமி தரிசனம் செய்ய வருபவர்கள் என பலரும் வர உள்ளார்கள்.



அவர்கள் திரும்பும் போது சுவாமியின் அற்புத விபூதி வேண்டும் என்று கேட்பார்கள். வீட்டிற்கும் எடுத்துச்செல்வார்கள். அச்சமயத்தில் விபூதி பாத்திரங்கள் இரண்டிலும் விபூதி தீர்ந்து இருந்தது. அதனால் **உடனே சிதானந்த் சத்யசாயியிடம் (அரூபமாக அங்கு பிரசன்னமாகியிருக்கும் பகவான் சாயியிடம்) சென்று, வருபவர்களுக்கு கொடுத்திட விபூதி வேண்டும் என்று கூறியுள்ளார்.** விபூதி பாத்திரம் இரண்டும் ஹாலில் உள்ளது. அங்கு அமர்ந்தபடியே விபூதி பாத்திரத்தை சுவாமி பார்க்கிறார். விபூதி பாத்திரம் இரண்டும்ஒன்றின் பின் ஒன்றாக, விட்டலாச்சாரியார் திரைபடத்தில், வருவதை போல் காற்றில் பறந்து வருகிறது. **அதனை நேரிலே கண் கொண்டு பார்த்திராத வேறு எவரும் நம்புவது கடினம் எனும் வகையில், அவைகள் தரையில் இருந்து சுமார் மூன்றடி உயரத்தில் மிதந்தபடி அந்தரத்தில் தானாக சாயியின் அருகில் வந்து நிற்கிறது,**

பகவான் சத்யசாயி தன் இரு கைகளையும் அந்த சிறுபாத்திரங்கள் இரண்டின் மேலும் வைக்கிறார்கள். **உடனே விபூதி அப்பாத்திரத்தில் நிரம்பி விட்டது. அதை சிதானந்திடம் கொடுத்து விட்டு, உடனே மறைந்தும் விடுகிறார்கள்.** பின்னர் அந்த அற்புத விபூதியை புட்டபர்த்தி சாயி சேவைக்கு செல்பவர்கள் அனைவரும் நெற்றியில் இட்டுக்கொண்டும் எடுத்துக்கொண்டும் புறப்பட்டனர்.

## புரொஜெக்டர் கொடுத்த லீலை



2017, அக்டோபர் 19 அன்று **ப்ரொஜெக்டர் வாங்க வேண்டுமென்று சத்யசாய் கூறியதாக சிதானந்த், சுவாமிஅப்பாவிடம் சொன்னார்.** சுவாமிஅப்பாவும், சிதானந்தும் தாராபுரம் சென்று, சன் மொபைல்ஸ் கடையில், அமேசானில் **ப்ரொஜெக்டருக்கு ஆர்டர் செய்து விட்டு வந்தனர்.** அன்று இரவு சுவாமிஅப்பாவும், சிதானந்தும் ஒரு கட்டிலில் படுத்து இருந்தார்கள். பத்து மணி சுமாருக்கு சிதானந்த் எழுந்து சுவாமிஅப்பாவின், கைபேசியை வாங்கிக் கொண்டு ஹாலுக்கு சென்றார். சுவாமிஅப்பா தூங்கிவிட்டார். ஹாலில் இருந்த பிரம்பு சேரில் படுத்துக் கொண்டு, ப்ரொஜெக்டர் பற்றிய வீடியோவை செல்போனில் பார்த்துக் கொண்டிருந்தார்.

லைட் எல்லாம் நிறுத்தப்பட்டு இருந்ததால், செல்போன் வெளிச்சத்திற்கு பூச்சிகள் வந்து தொல்லை கொடுத்து கொண்டிருந்தன. தனியாக படுத்திருந்த சிதானந்துக்கு யாராவது கூட இருந்தால் நன்றாக இருக்கும் என்று நினைத்துள்ளார். **அப்போது பூஜை அறையில் இருந்து சத்யசாய் கொட்டாவி விட்டவாறு வந்து படுத்திருந்த சிதானந்த் அருகில் பிரம்பு சோபாவில் உட்கார்ந்து கொண்டு, செல்போனை தனக்கும் காட்டுமாறு கேட்டுள்ளார்கள்.** இருவரும் பார்க்குமாறு செல்போனை பிடித்துக் கொண்டு வீடியோவை கிளிக் செய்ய, ரீடிரை (retry)ரீடிரை என்றே வந்துள்ளது.
டவுன்லோட் ஆகவில்லை.

**சுவாமி சத்யசாய் தன் விரலால் சுடக்குப் போட, உடனே டவுன்லோட் ஆகிவிட்டது. பின் ப்ரொஜெக்டரும் உடனே அங்கு தோன்றி விட்டது. Projectorரை கீழே தரையில் வைத்து மேலே சீலிங்கில் இருவரும் வீடியோ பார்த்துள்ளார்கள் .**



*சித்தரிக்கப்பட்ட படம்.

சிதானந்துக்கு கை வலிக்கும் போது சத்யசாய் செல்போனை வாங்கிக் கொள்வார்கள். கையை உதறிவிட்டு சிதானந்த் ரிலாக்ஸ் ஆன பின் மீண்டும் கொடுப்பார்கள். சிதானந்த் திரும்பி படுக்கலாம் என்று நினைத்தால், சத்யசாய் தள்ளி உட்கார்ந்து விடுவார்கள். இப்படியே 38 நிமிடம் வீடியோ பார்த்துள்ளார்கள். பின் போதும் என்று செல்போனை சுவாமிஅப்பாவிடம் கொடுத்துவிட்டு, அப்பாவுடன் படுத்துக் கொள்ளலாம் என்று சிதானந்த் வந்தபோது, சத்யசாயும் கூடவே வந்துள்ளார்கள். **சிதானந்த் சத்யசாயிக்கு குட்நைட் சொன்னதும், பகவான் சத்யசாயி மறைந்து விட்டார்கள்.** இரவு 11 மணிக்கு தூங்கிக் கொண்டிருந்த சுவாமிஅப்பாவை எழுப்பி இந்த நிகழ்ச்சியை சிதானந்த் கூறினார். **அப்போது கொடுத்த ப்ரொஜெக்டர் கருவி சாந்திநிலையத்தில் இன்னும் உள்ளது** பார்க்க விரும்புபவர்கள் சாந்திநிலையம் வந்தால் பார்க்கலாம்.

## பள்ளியில் நடந்த லீலை


பள்ளி மாணவனாக சிதானந்த்


பள்ளி பருவத்தில் சிதானந்த்

சீட்ஸ் கட்டிட கட்டுமான வேலை நடந்து கொண்டிருந்தது. அங்கு இருந்த சுவாமி அப்பாவிற்கு, பொன்னு ஸ்கூலில் இருந்து பகல் ஒரு மணி சுமாருக்கு கூப்பிட்டு, சிதானந்துக்கு வயிற்று வலி வந்து கூட்டி சொல்லுங்கள் என்று கூறுகிறார்கள். சுவாமிஅப்பா பள்ளிக்குச் செல்கிறார். பள்ளியில் ஆபீஸ் பக்கம் நின்றிருந்த சிதானந்த் உடனே வீட்டுக்கு செல்லலாம் என்று சொல்கிறார். என்ன நடந்தது? வயிற்று வலி எப்படி உள்ளது? என்று சுவாமிஅப்பா கேட்க.. லஞ்ச் சமயத்தில் எல்லோரும் சாப்பிட்டு கை கழுவ சென்று விட்டார்கள். நானும் சாப்பிட்டு முடித்து விட்டேன். கை கழுவ எழுந்தேன். கிளாஸ் ரூமில் அப்போது யாருமே இல்லை. **பகவான் சத்யசாய் வேர்த்து போய், பதட்டத்துடன் வேர்வைசிந்த சிதானந்த்திடம் வந்தார்கள். அப்போது தாராபுரம் புட்டபர்த்தி ஆகிவிட்டது.** 9th class **புட்டபர்த்தியில் உள்ள** south building **ஆக மாறிவிட்டது.** உடனே வீட்டிற்குச் சென்று 'பஜனை வையுங்கள்' என்று சத்யசாய் கூறியுள்ளார்கள்.

சிதானந்த் வீட்டிற்கு எப்படி செல்வது? என்று தயங்கி நிற்கிறார். அந்த தண்ணீரை எடுத்து குடி என்கிறார் சுவாமி. அப்படியே வாட்டர் கேனில் இருந்த தண்ணீரை குடிக்க, உடனே கடுமையான வயிற்று வலி வந்து விட்டது. **கையசைத்து விபூதி வரவழைத்து கொடுத்த சத்யசாய்,**





ஸ்ரீசத்யசாயி சிருஷ்டித்த விபூதியை பக்தர்களுக்கு வழங்கல்!

கிளாஸ் டீச்சரிடம் சென்று வயிற்று வலி, என்று கூறிவிட்டு ஆபீஸ் சென்று அப்பாவிற்கு போன் செய்து உடனே வரச் சொல்! பின் **இந்த விபூதியை சாப்பிடு என்று கூறியுள்ளார்கள்.** அவ்வாறே கிளாஸ் டீச்சர் இடமும், ஆபீசிலும், சொல்ல அவர்கள் உங்களுக்கு போன் செய்துள்ளார்கள். அதற்குள் நான் கிளாசுக்கு சென்று, பேப்பரில் கொட்டி **வைத்திருந்த விபூதியை சாப்பிட வயிற்று வலி போய்விட்டது.** அப்படியே ஸ்கூல் பேக்கயும் லன்ச் பேக்கயும் எடுத்துக் கொண்டு வந்து விட்டேன். என்று நடந்ததை கூறினார் சிறுவனான சிதானந்த்.

ஏதோ அவசரம் போல உள்ளது, ஏதோ ஒன்று நடக்க உள்ளது. இல்லாவிட்டால் இப்படி பகவான் சத்யசாய் பதட்டத்துடன் வேர்த்துபோய் வந்திருக்க மாட்டார்கள். என்று நினைத்த சுவாமிஅப்பா, சிதானந்தை வீட்டிற்கு கூட்டி வரும் பயணத்திலேயே, இரத்தினசாமிக்கும், தாராபுரம் சமிதி கன்வீனருக்கும், செந்திலுக்கும், சாய்ஆர்ட்ஸ்காரற்கும், சின்னக்கம்பாளையம் மற்றும் வீட்டிற்கும் போன் செய்து விபரத்தை கூறி, **உடனே பஜனைக்கு ஏற்பாடு செய்து வையுங்கள் என்று கூறியுள்ளார்.**

வீடு வந்ததும் குடோனில் வேலை செய்யும் ஆட்களையும் வரச் சொல்லி பஜனை ஆரம்பித்தார்கள். அதற்குள் ஒவ்வொருவராக வந்து விட்டனர். பஜனை நடந்து கொண்டிருந்தது. **சோபாவில் உள்ளே அமர்ந்திருந்த பகவான் சத்யசாய் பஜன்ஐ முடித்துக் கொள்ள சொல்லி சிதானந்த்திற்கு ஜாடை காட்ட, அவர் சுவாமி அப்பாவிடம் கூற, பஜனையை நிறைவு செய்து பிரசாதம் வழங்கப்பட்டது.**

அப்போது சிதானந்தை '**எப்போதும் ஆனந்தமாக இருப்பவனே வா**' என்று கூறி, உள்ளே அழைத்து பஜன் நன்றாக இருந்தது என்று சொல்லி, **சத்யசாய் கையை சுழற்றி விபூதி வரவழைத்து, சிதானந்த் கையில் கொடுத்து எல்லோருக்கும் கொடுக்கச் சொன்னார்கள்.** இப்போது பகவான் இயல்பு நிலைக்கு திரும்பி இருந்தார்கள்.



ஸ்ரீசத்யசாயி சிருஷ்டித்த
விபூதியை பக்தர்களுக்கு வழங்கல்!

## பாட்டனாருக்கு தரிசனம், ஸ்பரிசனம், ஸம்பாசனம்



சிதானந்த்துடன்
பாட்டையன் முத்துச்சாமி

14/11/2017 **இப்போதெல்லாம் பகவான் சத்யசாய் சிதானந்துக்கு உடம்புடன் தரிசனம் தருவதும், பேசுவதும், இயல்பாகி விட்டது. சத்யசாயியும் சிதானந்தும் மணிக்கணக்கில் பேசுவார்கள். சிதானந்த் சுவாமி சேரின் அருகே கீழே அமர்ந்து கொண்டு தலையை ஆட்டி ஆட்டி பேசுவதை பார்க்க முடிகிறதே தவிர, அவர்கள் பேசுவது மற்றவர்களுக்கு கேட்கவில்லை.** சிதானந்த் குடும்பத்தினருக்கோ மற்றவர்களுக்கோ அப்போதைக்கு சத்யசாய் தெரியவில்லை.

ஒரே ஒருமுறை மட்டும் சுவாமியின் பாட்டனார் முத்துசாமிக்கு சத்யசாய் தரிசனம், ஸ்பரிசனம், சம்பாசனம் மற்றும் பாத நமஸ்காரமும் கொடுத்துள்ளார்கள். ஒரு நாள் முத்துசாமிஜயன் வெளியே அமர்ந்து திருவாசகம் படித்துக் கொண்டிருந்தார். பாட்டனாரை சுவாமி சத்யசாய் அழைத்ததாக சிதானந்த் கூறி, சத்யசாய் ரூமுக்கு அழைத்துச் சென்றார். **உள்ளே சென்று பார்த்தால் சோபாவில் சத்யசாய் உடம்புடன் அமர்ந்துள்ளார்கள். சிலு சிலு என்ற முடியுடன், தலதலவென்ற அழகுடனும், பளீர் என்ற சிகப்புடையுடனும், 40-50 வயதில் இருந்தது போல பாட்டனாருக்கு காட்சி கொடுத்துள்ளார்கள். அது மட்டுமல்லாமல் சுவாமி பற்கள் தெரிய சிரித்துக் கொண்டு வா முத்துச்சாமி என்கிறார்கள்.** பாட்டனாருக்கோ என்ன செய்வது என்று தெரியவில்லை. பதட்டத்தில் எதுவும் தோன்றவில்லை. அப்படியே நின்று கொண்டிருந்தார். பின் **சுவாமியே எதற்கு திருவாசகம் படிக்கின்றாய்?** அதில் என்ன உள்ளது? என்று கேட்டுள்ளார்கள். அதற்கு **இறைவன் புகழை திருவாசகத்தில் கூறியுள்ளது.**

திருவாசகத்திற்கு உருகார், ஒரு வாசகத்துக்கும் உருகார், என்று ஐய்யன் பதில் சொல்லி உள்ளார். **கொல்லா நோன்பு இருக்கிறாயே அது எதற்கு? என்று கேட்கிறார் பகவான். அதற்கு எல்லா உயிர்களிலும் இருப்பது ஒரே ஆன்மாதான் மனிதனின் நாவை கட்டுபடுத்த முடியாமல், பிற உயிர்களை கொன்று சாப்பிட்டுவது மிருகத்தனம் அது தவறு என்று கூறினார்.** பின் ஐய்யனிடம் 10-15 நிமிடம் பேசி உள்ளார்கள். அது ஐய்யனுக்கு ஞாபகம் இல்லை. **பாத நமஸ்காரம் எடுத்துக்கொள்ள சொல்லி சுவாமியே கூறியுள்ளார்கள். பாட்டனார் பாத நமஸ்காரம் பெற்றதும் விபூதி வரவழைத்து கொடுத்துள்ளார்கள் பகவான்.** கையை வெளியே காட்ட சுவாமி போகச் சொல்கிறார்கள் என்று வெளியே வர சாத்தி இருந்த கதவை திறக்க முயற்சி செய்கிறார் ஐய்யன். அதை அவருக்கு திறக்க தெரியவில்லை. உள்ளே கூட்டி வந்த சிதானந்தும் அங்கே இல்லை. சுவாமியை திருப்பிப் பார்க்கிறார் ஐய்யன். சுவாமியே எழுந்து வந்து கதவை திறந்து விடுகிறார்கள். இதெல்லாம் வெளியே வந்த பாட்டனார் உள்ளே நடந்ததை கூறியது. **சிதானந்தைத் தவிர குடும்பத்தினருள் பாட்டனார் ஒருவர் மட்டுமே சுவாமியின் ஸ்தூலதரிசனம் கிடைக்கப்பெற்றவர். நிறைய முறை சுவாமி அவருக்கு தரிசனம் தந்துள்ளார்கள்.**

இப்போதெல்லாம் **வரும் பக்தர்கள் சிதானந்திடம் தங்கள் பிரச்சினையை கூறுவார்கள். சிதானந்த் சென்று பகவான் இடம் கூறுவார். பகவானும் அதற்குரிய தீர்வை சிதானந்த் மூலமாக கூறுவார்கள். சிலருடைய பிரச்சனையை கூற சென்றால் பகவான் மறைந்து விடுவார்கள்.**

**சிலருக்கு சிதானந்திடம் விபூதி, குங்குமம் பகவான் வரவழைத்து கொடுத்து அனுப்புவார்கள். இவ்வாறு சுவாமி சத்யசாய் கொஞ்சம் கொஞ்சமாக, சிதானந்தையும் அவர் குடும்பத்தாரையும் சுற்றதாரையும் தயார் செய்து கொண்டிருந்தார்கள்.**

## நிஜ ஆஞ்சநேயர் தரிசனம்

இப்படியாக நாட்கள் போய்க் கொண்டிருந்தது. 14/11/2017-ல் சிதானந்த் இன்று நீ பள்ளிக்கு பேருந்தில் போக வேண்டாம். அப்பாவை கூட்டிப் போய் விடச் சொல். என்று பகவான் கூறியதாக கூறினார். சுவாமிஅப்பா சிதானந்தை பைக்கில் கூட்டிக் கொண்டு செல்கிறார். சிதானந்த்தை பள்ளியில் விட்டுவிட்டு அப்படியே கட்டிட வேலை நடைபெறும் இடத்திற்கு செல்ல நினைத்திருந்தார் சுவாமிஅப்பா. அவர்கள் இரெட்டாலவலசு தாண்டி தெற்கே திரும்பியதும். **சிதானந்த் அப்பா சுவாமி சத்யசாய் நம் பின்னால் வந்து கொண்டிருக்கிறார்கள். சத்யசாய் ஆஞ்சநேயர் மீது அமர்ந்துள்ளார்கள். ஆஞ்சநேயர் ரோடு அகலத்திற்கு பெரிய உருவமாக உள்ளார். அவரின் முதுகில் ஒரு சிம்மாசனம் உள்ளது. அதில் சத்யசாய் அமர்த்துள்ளார்கள். ஆஞ்சநேயருக்கு இறகு இல்லை கையை முன்னால் நீட்டிக் கொண்டு எப்படி பறக்கிறார் என்று தெரியவில்லை!. ஆகாயத்திலேயே வந்து கொண்டிருக்கிறார்கள்** என்றார்.



*சித்தரிக்கப்பட்ட படம்.

**அதுதான் முதல் முறையாக ஆஞ்சநேயரை சிதானந்த் பார்த்தது. எரகாம்பட்டி பிரிவில்** தெற்கே திரும்பியதும் பகவான் ஒரு மாதிரியாக சாய்ந்து சாய்ந்து உட்கார்ந்து இருந்துள்ளார்கள். காரணம் **ஆஞ்சநேயர் இவர்கள் செல்லும் பைக்கினை ஒட்டி இணையாக, இடது பக்கமாக பறந்து கொண்டு வந்ததால் மரத்தின் கிளைகள் சுவாமி சத்யசாய் மேல் உரசுவதுபோல் இருந்தது.** அப்பா பைக்கை வலது புறம் தள்ளி ஓட்டுங்கள் என்கிறார் சிதானந்த். எதிரே எந்த வண்டியும் அந்த நேரத்தில் வராததால் ரோட்டின் வலது புறமாகவே சுவாமிஅப்பா

பைக்கை செலுத்துகிறார். அப்போது சத்யசாய் உன்னுடைய syma helicopterரே அவ்வளவு தூரம் பறக்கும் போது, இவர் பறக்க மாட்டாரா! அப்பாவை டிராபிக் ரூல்ஸ் படி வண்டியை ஓட்டச் சொல் என்கிறார்கள் பகவான். ஆஞ்சநேயரும் மரங்களுக்கு மேலாக உயரமாக பறக்கத் துவங்கினார். அப்போது சுவாமி பள்ளிக்கு வேண்டாம், கட்டிடத்திற்கு செல்லலாம் என்கிறார்கள்.



*சித்தரிக்கப்பட்ட படம்.

அப்படியே கட்டடத்திற்கு சென்றார்கள். அங்கு சென்றதும் சுவாமி, ஆட்கள் வேலை செய்வதை பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள். **ஹனுமன் கிழக்கு சுவற்றின் கோம்பை மேல் பறந்து போய் நின்று கொண்டு கிழக்கு நோக்கி சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறார்.** சிறிது நேரம் சுவாமியையும் ஆட்கள் வேலை செய்வதையும் திரும்பி நின்று பார்க்கிறார். **இவ்வளவு பெரிய உருவம் சுவற்றில் நின்றால் சுவர் தாங்குமா!? என்று சுவாமியிடம் சிதானந்த் கேட்கவும், சிறிய மாருதியின் உருவமாக மாறி ஒற்றை காலில் நின்று கொண்டார் ஹனுமன்.**

பின்னர் ஹனுமார் எப்படி இருந்தார்? என்று சுவாமிஅப்பா கேட்க, **அவர் ஒரு மாதிரியாக வெல்வெட் துணி போல் கட்டி இருந்தார். கழுத்தில் ஒரே ஒரு சங்கிலி பெரிதாக போட்டு இருந்தார். அவரின் வாலின் நுனியில் மணி கட்டி இருக்கிறார். முகம் எல்லாம் சிகப்பாக இருந்தது. கலர் கழுதையின் நிறத்தைப் போல இருந்தது என்றார்.** மதியம் 2 மணி வரை அங்கேயே இருந்துவிட்டு வீடு வந்தார்கள்.





*சித்தரிக்கப்பட்ட படம்.




**Syma helicopter**
**சித்தானந்த் விளையாடுவதற்காக வெறும் கையசைப்பில் பகவான் சத்யசாய் வரவழைத்துக் கொடுத்ததுதான்.**

மனிதர்கள் நிலையில் பார்வைகள் வேறு!, சித்தர் ரிஷி - முனிவர்கள், நிலையில் பார்வைகள் வேறு!!



*சித்தரிக்கப்பட்ட படம்.

அப்படி குதம்பைச் சித்தர்..
“நீண்ட குரங்கை, நெடிய பருந்தை
வேண்ட பயன் வருமோ!?”
என்றே சற்றே சாடினாலும்..
வால் நீண்ட ஸ்ரீ அனுமனையும்
உயரமான ஸ்ரீ கருடனையும்
எவ்வளவோ வேண்டினாலும்
அந்த வானவர்கள் எளிதில் மனமிறங்கி
**நம் பகவானைப்போல்**
**கருணை செய்வது கடினம்.!!**

ஆனால் இங்கோ **கருடனும் அனுமனும் சாயியின் விருப்பத்திற்கேற்ப கணப்பொழுதில் தோன்றி சத்ய சாய்க்கும் -பிரேம சாய்க்கும்** வான்வெளி பயணத்திற்காக (பிறர் காண இயலா தேவநிலையில்) **வாகனமாக சேவை செய்வது என்பது! இங்கு இருக்கும் பரமாத்ம சொரூபம் எதன் அம்சமென்று!?** வாசிக்கும் அன்பர்களின் எண்ணத்திற்கே அடியேன் விட்டு விடுகிறேன்.

## பெற்றோர் சிதானந்தை ஒப்புவித்த லீலை



சாந்தி நிலைய நிகழ்வுகளில்..

முதலில் சிவசக்தி தரிசனம் கொடுத்த போது மயங்கி விழுந்து மூச்சு வராமல் அசைவின்றி கிடந்த சிதானந்தை காப்பாற்ற எவ்வளவோ முயற்சி செய்தும் பயனின்றி போனதால், பகவான் சத்யசாயிடம் பெற்றோர்கள் தங்களது மகனை காப்பாற்றும்படி வேண்டுகிறார்கள்.

“சுவாமி இனி சிதானந்த் உங்களுடைய குழந்தை, அவனை உங்களுக்கே கொடுத்து விடுகிறோம். அவன் எப்படியாவது உயிரோடு இருந்தால் மட்டும் போதும். அவன் உயிரை காப்பாற்றுங்கள்” என்று அழுது வேண்டிய பின்னரே மூச்சு வந்தது. மீண்டும் அது போன்ற ஒரு நிகழ்ச்சி நடந்தது. ஒரு நாள் சுவாமிஅப்பாவும், சிதானந்தும் ஒரு கட்டிலில் படுத்து இருந்தார்கள். அதிகாலை 4 மணி இருக்கும் எழுந்து பார்க்கும்போது சிதானந்த் கட்டிலில் இல்லை. சுவாமி அம்மாவையும் எழுப்பி எல்லா இடத்திலும் தேடி பார்த்து விட்டு சுவாமியின் அறையை திறந்து பார்க்கிறார்கள். அங்கே கண்ட காட்சி அவர்களை அதிர்ச்சியில் உறைய வைத்தது.

அங்கே சத்யசாய்க்கு என்று ஒரு கயிற்று கட்டில் போட்டு இருக்கும். (இப்பொழுதும் உள்ளது) அதில்தான் சத்ய சாயி தூங்குவார்கள். அந்த கட்டிலின் மேல் ஒரு ‘டெட் பாடி’ போல் சிதானந்த் படுக்க வைக்கப்பட்டிருந்தார். உடல் முழுவதும் வெள்ளை துணியால் மூடி அரளி பூச்சரமும், கதம்ப பூச்சரமும், கொண்டு கட்டிலோடு சேர்த்து சுற்றப்பட்டு இருந்தது. மாலையும் போடப்பட்டிருந்தது. கட்டிலின் உள்ளடங்கப்படுத்திருந்தார். அன்றோ அதற்கு முந்தைய நாளோ! யாரும் அவ்வளவு நீளமான கதம்ப மாலை வாங்கி வரவில்லை. பாடியை பார்த்த சுவாமிஅப்பா அம்மா பதறிவிட்டனர், கதறிவிட்டனர். சுவாமி அவன் உங்கள் குழந்தை அவன் உயிரோடு இருக்க வேண்டும். என்று வேண்டிக் கொண்டே உள்ளே சென்று முகத்தை மூடி இருந்த துணியை விலக்கி பார்த்தால், மூச்சு வந்து கொண்டிருந்தது. இப்படியாக இரண்டு முறை சத்யசாய்க்கு சுவாமி அப்பா அம்மா சிதானந்தை ஒப்படைத்து விட்டார்கள்.

இந்த நிகழ்விலிருந்து தான் பகவான் சத்யசாய் முழுவதுமாக சிதானந்த் உடம்பில் இறங்கி, ஊடுருவி, சிதானந்த் ஆன்மாவில் கலந்து இருப்பார்களோ என தோன்றுகிறது. இதுநாள் வரை அந்த எங்கும் நிறைந்துள்ள இறைபேராற்றல், தனது வியக்தியை சிதானந்தின் உள்ளே மூடி வைத்து கொண்டு இருந்த திரையை விலக்கி உள்ளே பாயச்செய்து விட்டது. இதுவரை சத்யசாய் விபூதி வரவழைத்துக் கொடுப்பதாக கூறி கொடுத்துக் கொண்டிருந்த சிதானந்த். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு தானே விபூதி வரவழைத்துக் கொடுப்பது ஆரம்பமானது.

## பிரேமலீலா தரிசன விழா

ஓரிரு நாட்கள் தவிர தினமும் ஏதாவது ஒரு லீலையை சுவாமி செய்து விடுவார்கள். நிறைய நிறைய அற்புதங்களை பார்த்தாயிற்று. பகவான் சத்யசாயிபாபா இங்கு தன்னை வெளிப்படுத்திய 100 வது நாளில் சிறப்பாக பஜனை வைக்கலாம். என்று தாராபுரம் சத்யசாய் சேவா சமதியினரும், சின்னக்காம்பாளையம் பஜனா மண்டலினரும், சுவாமி அப்பாவிடம் கேட்டனர்.

அதற்கு பகவான் சத்யசாயி பகவானிடம் அனுமதி கேட்க பகவானோ 100 வது நாள் வேண்டாம் 108 வது நாள் வைத்துக் கொள்ளலாம் என்றும், அதை மூன்று நாள் விழாவாக கொண்டாடவும் அனுமதி அளித்தார்கள். விழாவிற்கு எப்படி எப்படி எல்லாம் ஏற்பாடுகள் செய்வது என்று 12 முறை மீட்டிங் வைத்து விளக்கி கூறினார்கள்.



பிரேம லிங்கத்தில்
பிரேமசாயி

முதல் மீட்டிங் சாய்ஆர்ட்ஸ் கடையில் நடந்தது. அன்று 9:00 மணிக்கு சுவாமிஅப்பா, அம்மா, சிதானந்த், மீட்டிங்கிர்க்கு செல்ல தயாராக இருந்தனர். 9:15க்கு வெளியே வந்த சுவாமி (சத்ய சாய்) எஸ்டீம் காரில் முன் சீட்டில் அமர்ந்து கொள்கிறார். சுவாமி அம்மாவும், சிதானந்தும், பின் சீட்டில் அமர சாய்ஆர்ட்ஸ் கடைக்கு சென்றார்கள்.

அங்கு கடையில் சுவாமிக்கு என்று தனியாக ஒரு சேர் போட்டு இருந்தார். மற்றவர்களும் அங்கு வந்து விட்டனர். சுவாமி சேரில் அமர்ந்தவுடன் ஐந்து முறை ஓம்காரம் சொல்லி வேதமந்திரம் சொல்லி ஆரம்பிக்கப்பட்டது.

சிதானந்த் சுவாமி சேரின் பக்கத்தில் சுவாமியையும் மற்றவர்களையும் பார்க்குமாறு தரையில் அமர்ந்து கொண்டார்.

பின்னர் வந்திருந்தவர்கள் தங்களுடைய கேள்விகளை சந்தேகங்களை சொன்னார்கள். அதற்கு சுவாமி கூறும் பதில்களை கேட்டு சிதானந்த் சொல்லுவார். ஒருவர் நோட்டில் குறித்துக் கொள்வார். யார் யாரை விழாவில் பேச அழைப்பது, அவர்களுக்கு என்ன தலைப்பு கொடுப்பது. சமையலுக்கு யாரை போடுவது, அவர்களை எங்கே தங்க வைப்பது, பந்தல் எவ்வாறு அமைப்பது, மேடை எவ்வாறு அமைப்பது, பிளக்ஸ் எங்கெங்கு வைப்பது, வாகனங்களை எங்கே நிறுத்துவது, பூ எங்கே வாங்குவது, யார் யார் என்னென்ன பொறுப்பு எடுத்துக் கொள்வது, சேவை செய்பவர்களுக்கு நினைவு பரிசாக என்ன கொடுப்பது, என்பது போன்ற கேள்விகளை கேட்டார்கள்.

அதற்கு பகவான் சத்யசாயி பதில் சொல்ல சிதானந்த் அங்கிருந்தவர்களுக்கு கூறுவார். இப்படியாக 10 மணிக்கு துவங்கிய மீட்டிங் 2 மணி வரை நடந்தது. மீட்டிங் முடிந்து கிளம்பும்போது நீங்கள் காரில் செல்லுங்கள், நான் எனது வாகனத்தில் வந்து கொள்கிறேன் என்றார்கள் சுவாமி. கூறி முடிப்பதற்குள் ஆஞ்சநேயர் வந்து நின்று விட்டதாக சிதானந்த் கூறினார். வீடு வரும் வரை அவர்கள் காருக்கு மேலே கொஞ்சம் முன்பாகவே பறந்து வந்து கொண்டிருந்தார்கள். கரண்ட் கம்பம் எலக்ட்ரிக் லைன் வந்தால் மேலே போய்விட்டு மறுபடியும் காரை ஒட்டியே பறந்து வருவதாக சிதானந்த் கூறிக் கொண்டே வந்தார்.

வீடு வந்ததும், தற்போது கிருஷ்ணர் சிலை உள்ள இடத்திலேயே காரை நிறுத்திக் கொண்டார்கள். சுவாமி எப்படி இறங்குகிறார்கள் என்று பார்ப்பதற்காக. வீடு வந்ததும் வாசலில் தெற்கு வடக்காக ஹனுமன் படுத்துவிட்டார். சிம்மாசனத்தில் இருந்து எழுந்த சுவாமி பாதம் வைக்கும் footrest ல் காலை வைத்து இறங்கி மறு காலை ஆஞ்சநேயரின் முதுகில் வைக்கிறார்கள். முதுகிலேயே இரண்டு மூன்று ஸ்டெப் வைத்து கொஞ்சம் தனிவாக இருந்த பகுதியில் இருந்து கீழே இறங்கிய சத்யசாய், கதவு வரை சென்று திரும்பி பார்க்கிறார்கள். ஆஞ்சநேயர் மண்டியிட்டு வணங்கி கொண்டு உள்ளார்.

சுவாமி எதுவும் சொல்லாமல் உள்ளே சென்று விட்டார்கள். ஆஞ்சநேயரும் சிறிய உருவமாக மாறி சாதாரணமாக நாம் பார்க்கும் குரங்கு போல் மாறி தெற்கு நோக்கி பறந்து சென்று, ஜெனரேட்டர் வைத்துள்ள இடத்தில் போய் நின்று கொண்டதாக சிதானந்த் கூறுகிறார். இப்படியாக முதல் மீட்டிங் முடிந்தது. மீண்டும் அவர்களுக்கு சந்தேகங்கள் வந்தது. உங்கள் சந்தேகங்களை எல்லாம் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். வியாழக்கிழமை ஒரு மீட்டிங் வைத்து அதில் கூறுகிறேன்.

என்றார்கள். அந்த இரண்டாவது மீட்டிங் சாந்திநிலையத்தில் வீட்டிலேயே நடந்தது. மூன்றாவது மீட்டிங் ரத்தினசாமி வீட்டில், நாலாவது மீட்டிங் செந்தில் வீட்டில், இப்படி 12 மீட்டிங் நடந்தது. இப்போது எல்லாம் சுவாமி தனது வாகனங்களை மாற்றிக் கொள்கிறார்கள். ஒரு நாள் கருட வாகனத்திலும், ஒருநாள் மயிலிலும், ஒரு நாள் காளை வாகனத்திலும் ஆக சென்று வந்தார்கள்.(கருடவாகனத்திலும்,மயில்வாகனத்திலும், சிதானந்தும், பகவான் சத்யசாயும் பயணம் செய்த நிகழ்வு இனி வர இருப்பதால் அதைப் பற்றி தனியாக கூறவில்லை ) முதல் மீட்டிங்கிலேயே பந்தல் பற்றி கேட்டதற்கு மழை வெயில் ஒழுகாதவாறு, வீட்டிற்கு வடபுறத்தில் கீழ் மேலாக போடும்படி சொல்லியிருந்தார்கள். குறிப்பு எழுதியவரும் அவ்வாறுதான் எழுதியுள்ளார். அவர்கள் தான் புரிந்து கொள்ளாமல் கார்த்திகை மாதத்தில் மழை காலம் முடிந்துவிட்டது, இனி மழை வராது என்று கிடுகு ஓலை பந்தல் போட்டு விட்டார்கள்.

## சுவாமி அப்பாவின் பண பிரச்சனையை தீர்த்த லீலை



*கொடைக்கானல் தரிசனத்தில் சுவாமிஅப்பா தாராபுரத்தில் சமிதிகட்ட அருளாசி வேண்டுதல்.



சிதானந்த்துடன் தந்தையார் தண்டபானி

விழா நெருங்கிக் கொண்டிருக்கிறது. பத்திரிக்கை வந்து விட்டது. வெளியூர் சாய் பக்தர்களுக்கு, பகவான் சத்யசாய் கூறியபடி மூன்று குழுவாக பிரிந்து அழைப்பிதழ் கொடுக்க கிளம்பினார்கள்.

செந்தில் மற்றும் 3 பேர் ஊட்டி, மேட்டுப்பாளையம், கோவை சென்றனர். செல்லத்துரை மற்றும் நான்கு பேர் காங்கேயம், திருப்பூர், வெள்ளகோவில் சென்றனர்.சுவாமிஅப்பா, அம்மா மற்றும் இரண்டு பேர் ஈரோடு சென்றனர். கிளம்பும் முன் மூன்று கார்களையும் ஒரு சேர நிறுத்தி ஆரத்தி எடுக்கப்பட்டது.

அப்போது வெளியே வந்த சுவாமி (சத்ய சாய்) ஏன் தண்டபாணி ஒரு மாதிரியாக இருக்கிறாய்? என்று சுவாமி கேட்பதாக சிதானந்த் கூறினார். ஒன்றும் இல்லைங்க சுவாமி! கிளம்பலாம் என்று சுவாமிஅப்பா கூறினார். பணமில்லை என்ற கவலையா? அதை பார்த்துக் கொள்ளலாம். சந்தோசமாய் போய் ஆரத்தி எடு என்கிறார்கள். ஆரத்தி எடுக்கும்போது பகவான் சத்யசாய் மூன்றாக பிரிந்து மூன்று வண்டிகளிலும் முன் இருக்கையில் அமர்ந்து கொண்டார்கள். மூன்று கார்களும் கிளம்பி கொஞ்ச தூரம் சென்றதும், செந்தில் வண்டியில் சென்று கொண்டிருந்த சிதானந்த் போன் செய்து மயில் வாகனத்தில் சுவாமி வருகிறார்கள்.

நீங்கள் ஃப்ரீயாக பேசிக்கொண்டு வாருங்கள் சுவாமி இப்போது உங்கள் காரில் இல்லை என்கிறார். பண பிரச்சனையை நினைத்தால் சுவாமிஅப்பாவிற்கு கவலை வந்துவிடும். சுவாமி பார்த்துக் கொள்வார்கள் என்று நம்பிக்கையும் வந்துவிடும். உண்மையில் அன்று சுவாமி அப்பாவிடம் வெறும் 2000 ரூபாய் தான் இருந்தது. கட்டிடத்தில் நிறைய ஆட்கள் வேலை செய்து கொண்டுள்ளனர். கூலிக்கே 2 லட்சம் இருந்தால் தான் அன்றைய நாள் முடியும். விழாவிற்கான வேலையை பார்த்து கொண்டு இருந்ததால், ஒரு வாரமாக கட்டிட வேலை நடைபெறும் இடத்திற்கே செல்லவில்லை. அக்கவுண்டிலும் பணம் இல்லை. ஈரோடு போய் வந்தாலே பொழுது போய்விடும். மாலை வந்து பணத்தை எங்கே புரட்டுவது. என்றெல்லாம் அவர் மனதில் ஓடிக்கொண்டே இருந்தது. அதுதான் அவரின் கவலைக்கு காரணம். கையில் உள்ள 2000 ரூபாயில் காருக்கு ஆயிரத்தில் பெட்ரோல் போட்டு விடலாம், செலவுக்கு ஆயிரம் போதும்.

ஆனால் மாலை திரும்பி வந்து யாருக்கு என்ன பதில் கூறுவது. காங்கேயம் தாண்டி போய்க் கொண்டிருந்தபோது சுவாமிஅப்பாவின் மாமனார் ரத்தினசாமி போன் செய்து. பணம் 4 லட்சம் தன்னிடம் உள்ளது உங்களுக்கு தேவைப்படுமா? என்று கேட்கிறார். என்னவென்பது சுவாமியின் கருணையை. தேவையோ 2 லட்சம், வந்ததோ நாலு இலட்சம் இரவு வீடு திரும்பிவருவதற்குள் 4 லட்சம் கிடைக்க ஏற்பாடு செய்துவிட்டார்கள் பகவான். இதற்கு முன் நடந்த மற்றொரு பண பிரச்சனையை சுவாமி எப்படி தீர்த்தார்கள் என்று இப்போதே பார்த்துவிட்டு விழாவிற்கு செல்வோம்.

சுவாமிஅப்பாவிற்கு ஒரு நாள் பணத்திற்கு தட்டுப்பாடான நிலை, இரண்டு மூன்று பேரிடம் பணத்திற்கு சொல்லி இருந்தார். பணம் கிடைத்து விடும் என்று இருந்தார். மாலைக்குள் ஒவ்வொருவராக கூப்பிட்டு பணம் இல்லை என்று கூறிவிட்டார்கள்.

அன்று மூன்று லட்சம் பணம் தேவைப்பட்டது. கடைசிக்கு 50,000 இருந்தால் கூட போதும். கூலியில் பாதி பாதி கொடுத்து சமாளித்து விடலாம் என்ற நிலை. நேரம் ஆக ஆக டென்ஷன் ஆக இருந்தது. மாலை 5:00 மணிக்கு ஆட்கள் வேலை முடிந்தவுடன் மேஸ்திரி பணத்திற்கு வருவார் என்ன சொல்வது என்று எதுவும் புரியவில்லை. கடைசியில் அவரது முயற்சி ஒன்றும் நடைபெறவில்லை.

சுவாமியிடம் சொல்லவும் தயக்கம். தன்னுடைய சொந்த பிரச்சனையை சுவாமியிடம் சொல்வதா! கடைசியில் வேறு ஒரு வழியும் இல்லை! சுவாமி பார்த்து செய்தால் தான் உண்டு. என்று செட்டில் போய் உட்கார்ந்து விட்டார். ஐந்து நிமிடத்தில் ஒரு போன். நாகர்கோவில் புகையிலை வியாபாரி முருகனிடமிருந்து வருகிறது. எங்கே இருக்கிறீர்கள் பணம் ரூபாய் 6 லட்சம் கையில் உள்ளது உங்களிடம் கொடுத்துவிட்டு நான் கொடுவாய் செல்கிறேன் என்கிறார் வியாபாரி முருகன். நீங்கள் எங்கே இருக்கிறீர்கள் என்கிறார் சாமியப்பா.

ஒட்டன்சத்திரம் ரோட்டில் சாலக்கடை தாண்டி வந்து கொண்டு உள்ளேன் என்கிறார். அடுத்த பத்தாவது நிமிடத்தில் ஆறு லட்சம் சுவாமிஅப்பாவின் கையில். சுவாமியின் லீலையை பாருங்கள். புகையிலை வியாபாரி சுவாமிஅப்பாவிற்கு அந்த நேரத்தில் பணம் கொடுக்க வேண்டிய பாக்கி எதுவும் இல்லை. அவரும் சுவாமிஅப்பாவிற்கு பணம் கொடுக்கும் எண்ணத்தில் வரவில்லை.

அவரிடமே கேட்டார் ஏன் அண்ணாச்சி திடீரென்று பணத்தை கொண்டு வந்து உள்ளீர் என்று. கோயம்புத்தூர் சென்று அங்கு ஒருவருக்கு இந்த பணத்தை கொடுக்க வேண்டும் அதற்காக வந்தேன். அதனால்தான் முதலில் போன் செய்து கூறவில்லை. சாலக்கடை தாண்டியதும் என் எண்ணம் மாறிவிட்டது. பணத்தை உங்களிடம் கொடுத்துவிட்டு கொடுவாய் சென்று விட்டு வந்து, தாராபுரத்தில் ரூம் போட்டு தங்கி இருந்து விட்டு நாளை காலை கோயம்புத்தூர் போகலாம் என்று உள்ளேன் என்றார்.

அந்த பணத்தில் இருந்து எடுத்து கூலிக்கு கொடுத்துவிட்டு, அவர் நாளை வந்தால் அவருக்கு தரவேண்டிய பணத்திற்கு ஏற்பாடும் செய்துவிட்டு வீடு வந்து சேர்ந்தார் சுவாமிஅப்பா. மறுபடியும் வியாபாரி முருகனிடம் இருந்து போன் இரவு பத்து மணிக்கு வருகிறது. நான் இன்று இரவே நாகர்கோவில் செல்ல வேண்டும். பணம் உங்களிடமே இருக்கட்டும் நீங்கள் அடுத்து அனுப்பும் சரக்கிற்கு அட்வான்ஸ் ஆக வைத்துக் கொள்ளுங்கள். என்று கூறிவிட்டு நாகர்கோவில் சென்று விட்டார். இது யாருடைய லீலை. சரக்கு அனுப்பி அது நல்லபடியாக விற்பனையாகி,

வசூலானால் அதில் வரும் இலாபத்தை எடுத்துக்கொண்டு பின்னரே பணம் பட்டுவாடா செய்யும் அவர், நாகர்கோவிலில் இருந்து காரை எடுத்துக்கொண்டு 400 கிலோமீட்டர் பயணம் செய்து வந்தவர், கோயமுத்தூர் செல்லும் ஐடியாவில் தான் இருந்துள்ளார். சாலக்கடை தாண்டியதும் அந்த பிளானை அந்த எண்ணத்தை மாற்றியது யார்? சுவாமியப்பா இங்கே சுவாமியை மனதில் நினைத்த நொடியில் அங்கே வியாபாரியின் எண்ணத்தை சுவாமி மாற்றி உள்ளார்கள். எந்த வியாபாரியும் பொருள் வருவதற்கு முன்பே பணம் கொடுப்பார்களா? (பின் ஒரு மாதம் கழித்து வியாபாரிக்கு சரக்கை ஏற்றி கணக்கை சரி செய்து கொண்டு விட்டார்). **சுவாமி சத்யசாயின் அருளாற்றலை, அன்பை, கருணையை, ஆபத்பாந்தவத்தை, அருட்காப்பை நினைத்து சுவாமி அப்பாவிற்கு கண்களில் கண்ணீரே வந்துவிட்டது.**

## விழாவிற்கு முன் நடந்த ஒரு சுவாமியின் லீலை

விழாவிற்கு 10 நாள் இருக்கும்பொழுது தமிழ்நாடு சத்யசாய் சேவா நிறுவனத்தின் துணைத் தலைவர் சேலம் சுரேஷ் அவர்கள் சுவாமி அப்பாவிற்கு போன் செய்கிறார். (இந்த நிகழ்வை எழுதும் போது தமிழகத்தின் சத்யசாய் நிறுவன மாநில தலைவராக இருக்கிறார்) அவர்தான் விழாவின் முதல் நாள் சிறப்பு பேச்சாளர். அவர் இன்விடேஷனை மாற்றி அடியுங்கள். சத்யசாய் ஆர்கனைசேஷன் என்றால் சாய் எம்பலம் போட வேண்டும்.
சத்யசாயி சேவாசமிதி, தாராபுரம், தமிழ்நாடு, என்று இருக்க வேண்டும். நோட்டீஸ் ஒன்று தயார் செய்து அனுப்புகிறேன் அதைப்போல அச்சடியுங்கள். நீங்கள் தயார் செய்த அழைப்பிதழை யாருக்கும் தர வேண்டாம் என்கிறார். சுவாமி மீட்டிங்கின் போது கூறிய படியே தான் நோட்டீஸ் தயார் செய்யப்பட்டது **சுவாமியிடம் காட்டி சரி என்று சொன்ன பின்னரே அழைப்பிதழ்களை அச்சு அடித்தோம்.**

ஆனால் இவர் வேறு இப்படி சொல்கிறாரே! என்று **சிதானந்த் மூலமாக சத்யசாயிடம் கேட்க, சுவாமி சத்யசாயோ இன்விடேஷனை மாற்ற வேண்டாம், அப்படியே இருக்கட்டும் என்று சொல்லிவிட்டார்கள்.** மாநிலத் தலைவரிடம் இதைச் சொல்ல அழைப்பிதழை மாற்றுவதாக இருந்தால் நான் பேச வருகிறேன், இல்லாவிட்டால் நான் அங்கு வரமாட்டேன் என்று போனை வைத்து விட்டார். என்ன செய்வது என்று தெரியாமல் ஈரோடு மாவட்டத் தலைவர் ராஜேந்திரனிடம் சொல்ல, என்னால் அவரிடம் ஒன்றும் பேச முடியாது அவர் எனக்கு மேல் பதவியில் உள்ளவர். அவர் வந்தால் வரட்டும் வரவில்லை என்றால் முதல் நாள் நிகழ்ச்சியில் நான் வந்து அவருக்கு பதிலாக பேசுகிறேன் கவலைப்பட வேண்டாம் என்றார்.




**விழா அழைப்பிதழ்**

**முன் பக்கம்**

LOVE ALL — ஓம் ஸ்ரீ சாய்ராம் — SERVE ALL

## பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபா–வின்

# 108 வது தின பிரேம லீலா தரிசனம்

அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகன் பகவான் ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் லீலா தரிசனம்
ஆகஸ்ட் -16, ஆடி - 31-ம் நாள் மாலை 8-37 மணி முதல் பிரேம லீலா தரிசனம் இது வரை நடந்து கொண்டிருக்கிறது.
பிரேம லீலாவின் 108 வது நாளை முன்னிட்டு விழா பகவானின் அருளாசியுடன் மிகச் சிறப்பாக
சுவாமியின் அன்பு பார்வையில் நடைபெற உள்ளது.

## நிகழ்ச்சி நிரல்

இடம் – இரட்டாலவலசு பஜனா மண்டலி – தாராபுரம்.

29-11-2017 புதன்கிழமை மாலை 7-00 மணியளவில் சுவாமியின் திரு உருவப்பட ஊர்வலம்

30-11-2017 வியாழக்கிழமை காலை 4-00 மணிக்கு நகர சங்கீர்த்தனம் . மதியம் 4-03 மணி முதல் 5-03 மணி வரை பஜன்
மாலை 5-30 மணி முதல் 7-30 மணி வரை சொற்பொழிவு (புட்டபர்த்தியும் , மகிமையும்)
திரு.K.R.சுரேஷ் சாய்ராம் அவர்கள் (தமிழ்நாடு சத்ய சாயி நிறுவனங்கள், துணைத் தலைவர்)

7-30 மணிக்கு மகா மங்கள ஆரத்தி . பிரசாதம் வழங்குதல்

1-12-2017 வெள்ளிக்கிழமை காலை 4-00 மணிக்கு நகர சங்கீர்த்தனம் . மதியம் 4-03 மணி முதல் 5-03 மணி வரை பஜன்
மாலை 5-30 மணி முதல் 7-30 மணி வரை சொற்பொழிவு (சுவாமியின் பிறப்பும் , இரகசியமும்)
சென்னை சாய்ராம் திரு.T.E.வாசுதேவன் அவர்கள்

7-30 மணிக்கு மகா மங்கள ஆரத்தி . பிரசாதம் வழங்குதல்

2-12-2017 சனிக்கிழமை காலை 4-00 மணிக்கு நகர சங்கீர்த்தனம். மதியம் 2-04 மணி முதல் 3-04 மணி வரை பஜன்
தேனீர் இடைவேளை

மாலை 4-03 மணி முதல் 7-24 மணி வரை சொற்பொழிவு

1. ஊட்டி ஹில்ஸ் திரு. ராமன்பாபு சாய்ராம் அவர்கள் (கர்மாவை குறைத்தல்)
(மாலை 4-03 மணி முதல் 4-48 மணி வரை)
2. பேராசிரியர் திரு .K.சீனிவாசன் சாய்ராம் அவர்கள் திருப்பூர் (பர்த்தி சேவையும்,மகிமையும்)
(மாலை 4-49 மணி முதல் 5-34 மணி வரை)
3. சென்னை சாய்ராம் T.E.வாசுதேவன் அவர்கள் (சுவாமியின் லீலைகள் மற்றும் சுவாமியின் பிரேமை)
(மாலை 5-54 மணி முதல் 7-24 மணி வரை)

நன்றியுரை : செல்லத்துரை சாய்ராம்

மகா மங்கள ஆரத்தி . பிரசாதம் வழங்குதல்
விழா குறித்த நேரத்தில் நடைபெறும்

இடம் - இரட்டாலவலசு பஜனா மண்டலி (கிணத்தாங்காட்டு தோட்டம், புகையிலை குடோன்) தாராபுரம்.
மினி பஸ் - மகேந்திரன், செல்வக்குமார், செல்வதர்ஷினி
மினி பஸ் ஸ்டாப் - இரட்டாலவலசு பிரிவில் இறங்கவும். பிரிவில் இருந்து வாகன வசதி உள்ளது.

... வுன் பஸ் - பஸ் ஸ்டாண்டிலிருந்து மாலை 4-00 மணிக்கு புறப்பட்டு பகவான் கோவில் செல்லும் பஸ்
சுவாமியின் அன்பு தரிசனம் பெற இனிதே அழைக்கிறோம்.

அனுமதி இலவசம்

தொடர்புக்கு - 9442288339 , 9361619161 , 7904141189 , 9003701235

**விழா அழைப்பிதழ்**
**பின் பக்கம்**

**சுவாமியே அவர் பெயரை சொல்லி பேச அழைக்கப்பட்டவர் அவர். அவர் வராமல் எப்படி போவார்? எப்படியாவது சுவாமியே அவரைக் கொண்டு வந்து விடுவார்கள் என்ற நம்பிக்கையில் இருந்தார்கள்.** அந்த அழைப்பிதழ்கள்தான் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு ஒரு நாள் முன்னால் தலைவருக்கு போன் செய்து உங்கள் ப்ரோக்ராம் எப்படி உங்களுக்கு ரூம் போடவா? வண்டி ஏற்பாடு செய்யட்டுமா? என்று அவர் நிலையை அறிந்து கொள்ள சுவாமிஅப்பா இவ்வாறு கேட்டார். அவர் எதுவும் கூறவில்லை. **நான் என்னுடைய காரிலேயே வந்துவிடுகிறேன்.** நான் பேசி முடித்ததும் உடனடியாக சேலம் திரும்ப வேண்டும். வேலை உள்ளது. ரூமெல்லாம் வேண்டாம். தாராபுரம் வரை நான் வந்து விடுகிறேன் அங்கிருந்து அந்த இடத்திற்கு என்னை கூட்டிப் போக ஒரு நபரை தாராபுரத்தில் இருக்கச் சொன்னால் போதும் என்று கூறினார். இதை அவர்கள் எதிர்பார்த்ததுதான்.

## மழையால் வந்த கொடை

அழைப்பிதழில் உள்ளபடியே முதல் நாள் நிகழ்ச்சிகள்
நல்லபடியாக நடந்து முடிந்தது.

இரண்டாம் நாள் மழை வந்துவிட்டது. பந்தலில் இருந்து தண்ணீர் ஒழுகிக் கொண்டு இருந்ததால், ஒரு மணி நேரம் கழித்து சுவாமி மேடைக்கு வந்தார்கள். ஒரு மணி நேரம் தாமதம் ஆனதே தவிர நிகழ்ச்சி நல்லபடியாக நடந்து முடிந்தது. **கூட்டம் எதிர்பார்த்ததை விட அதிகமாகவே வந்திருந்தார்கள். இடபற்றாக்குறையால் நாற்காலியை எடுத்துவிட்டு கீழே நெருக்கி அமர வைக்க வேண்டி இருந்தது.**

மூன்றாம் நாள் நிகழ்ச்சி துவங்கும் முன்னரே மழை பெய்ய ஆரம்பித்து விட்டது. இரவு 8 மணி வரை மழை விடவே இல்லை. சிதானந்த் சத்யசாய் சுவாமியுடன் பேசமாட்டேன். இவ்வளவு செய்த சாய்சுவாமி மழையை நிறுத்த வேண்டியது தானே! பன்னிரண்டு மீட்டிங் வைத்த போது மழை வரும் என்று சாய் சொல்லி இருக்கலாமே! ஏன் கூறவில்லை? மழையில் நனைந்து கொண்டு, குடோனின் தென்புறம் சென்று அழுது கொண்டிருந்தார். செந்திலும் மற்றவர்களும் சிதானத்தை கூட்டி வர சென்றவர்கள் ஒவ்வொருவராக மழையில் நனைந்து கொண்டும், அழுது கொண்டும், சாய் காயத்ரி சொல்லிக் கொண்டும், அங்கேயே இருந்து விட்டார்கள். வாசுதேவனும் சிதானத்தை அழைத்து வாருங்கள் என்று ஆள் அனுப்ப வரமாட்டேன் சத்யசாய் சுவாமி முகத்தில் முழிக்க மாட்டேன் என்று கூறிவிட்டார்.

# பகவானிடம் எதை கேட்க வேண்டும்?




**பகவானிடம் எதை கேட்க வேண்டும்?**
**ஆதிசங்கர பெருமான் வேத சாரத்தின் மூலம் நமக்கு வழி காட்டுகிறார்.**

(*இணையத்தில் வாசித்த ஒரு நல்ல பதிவு இங்கே..)

**"பகவானிடம் நாம் என்ன பிரார்த்தனை செய்ய வேண்டும்? எதை கேட்க வேண்டும்?"**

பொதுவாக, நாம் மெய்யான "பக்தியோடு" எதை கேட்டாலும், பகவான் நமக்கு கேட்டதை தருவார்.

கேட்பதில் உயர்ந்த விஷயங்கள் உண்டு!
கேட்பதில் மிகவும் சாதாரண விஷயங்களும் உண்டு!!
பிரார்த்தனை செய்தேன்..செல்வம் கிடைத்து விட்டது,
பிரார்த்தனை செய்தேன்.. நோய் சரியாகி விட்டது,
பிரார்த்தனை செய்தேன்.. வேலை கிடைத்து விட்டது,
பிரார்த்தனை செய்தேன்.. பிரச்சினை தீர்ந்து விட்டது,
என்று சந்தோஷப்படுவது எல்லாம், **ஒரு கோடீஸ்வரனிடம் போய் நூறு/ ஆயிரம் ரூபாய் வாங்கி சந்தோஷப்படுவது போல சாதாரணமானவையே ஆகும்.**

"நாம் பகவானிடம் மிகவும் முக்கியமானதாக என்ன கேட்க வேண்டும்?" ஆனால்,

**பகவானிடம் அநேகமானவர்கள் பொதுவாக கேட்பது..,**
“எனக்கு வேலை கிடைக்க வேண்டும், மேல்பதவி வேண்டும், எனக்கு குழந்தைகள் இல்லை மழலைச் செல்வம் வேண்டும்,

வெளிநாடு வாழ்கை/கல்வி வேண்டும், நோய் நொடி தீரனும், என் பையனுக்கு-பொண்ணுக்கு கல்யாணம் நடக்கணும்" என்று அனுதினமும் பிரார்த்தனைகளாக வழக்கமாக கேட்டு கொண்டிருப்பார்கள்.

**ஆதி சங்கர பகவான் 'இவைகளையெல்லாம் போய் பகவானின் முன்னிலையில் கேட்காதே' என்று சொல்லி, "நீ முக்கியமானதாக கேட்க வேண்டியது என்று சில உள்ளது, தெய்வீகமான பகவானிடம் உன் இப்பிறவியின் முயற்சியால் கூட அடைய முடியாததை, ஜென்ம ஜென்மமாக முயன்றாலும் கிட்டுவதற்கு கடினமானதை கேட்பதே மிக உத்தமானது" என்று சொல்லி கொடுக்கிறார்.**



## முக்கியமாக கேட்க வேண்டிய சிலவைகள் :

### கர்வம் :

பகவானிடம் நாம் **முதலில் கேட்க வேண்டியது,** "பகவானே !! முதலில் 'நான் செய்கிறேன்' என்ற என் கர்வத்தை, (அஹங்காரம்) தனது எனது என அடையாளப்படுத்திக் கொண்டிருக்கும் பற்றுக்களை- பாசங்களை என்னிடம் இருந்து விலக்கி விடுங்கள்" என்று கேட்கவேண்டும். நமக்கு முக்கியமாக தேவையானது - விநயம் (அடக்கம்).

இந்த விநயம் (அடக்கம்) நமக்கு வராமல் இருப்பதற்கு காரணம், நம்மிடம் "நான் செய்கிறேன்"என்று இருக்கும் கர்வமே காரணம். அனைத்தையும் படைத்த பகவானிடம், நாம் போய் "என் கஷ்டம், என் துக்கம், என் வேலை" என்று நான், என்னுடைய என்று சொல்வதே 'நம் கர்வத்தை' காட்டுவதாகும். "எல்லாம் தெரிந்தவருக்கு உன் துக்கம், நோய் தெரியாதா? சொல்லித்தான் அவருக்கு தெரியுமா?

## ஆசை:

பகவானிடம் நாம் **இரண்டாவதாக கேட்க வேண்டியது,**

"என்னுடைய மனதில் இன்றுவரை நிறைய விதமாக பலப்பல ஆசைகள் எழுந்து கொண்டே இருக்கிறது. அந்த ஆசைகளை உற்பத்தியாகாது செய்து விடுங்கள் " என்று கேட்கவேண்டும். நமக்கு மனதில் எத்தனைக்கு எத்தனை ஆசைகள் உருவாகி கொண்டே இருக்கிறதோ, அந்த ஆசையினால் துக்கங்களும் வேதனைகளும் உண்டாகிறது.

ஒரு ஆசையை நிறைவேற்ற முயன்றால், அது பலிதமாகும் போது, அதன் தொடர்ச்சியாக இன்னொரு ஆசையும் மனதில் உண்டாகிறது.அந்த ஆசையை நிறைவேற்ற முயன்று, அதுவும் பலிக்கும் போது, கூடவே மற்றொரு ஆசையும் உண்டாகிறது. முடிவே இல்லாத ஆசைகளாய் திருப்தியே இல்லாமல் வந்து கொண்டே இருக்கும்.

திருப்தி இல்லாததால் துக்கமும் பிறவியும் உண்டாகிக்கொண்டே இருக்கும். கர்வத்தை நம்மால் அழிக்க முடியாதது போல, மனதில் வந்து கொண்டே இருக்கும் இந்த ஆசையையும் நம் மதியாலும் திறமையாலும் அழிக்கவே முடியாது. பகவானின் கருணையால் - அன்பினால் மட்டுமே, நம்மால் அழிக்க முடியாத கர்வத்தையும், நம்மிடம் உருவாகும் ஆசையையும் அழிக்க முடியும்.

## திருப்தி :

பகவானிடம் நாம் **மூன்றாவதாக கேட்க வேண்டியது,**

"எனக்கு என்று எது இயல்பாக கொடுக்கப்பட்டு உள்ளதோ, அதை கொண்டு நான் திருப்தி/நிறைவு அடையும் உறுதியான குணத்தை கொடு பகவானே! " என்று கேட்கவேண்டும்.

**இந்த திருப்தியை பற்றி**
**ஸ்ரீ கிருஷ்ணர் பகவத் கீதையில்,**
**“யதுர்சா லாப சன்துஷ்ட:**
**த்வந் த்வா தீதோ விமத் சர: ! சம:**
**சித்தாவ சித்தௌ ச**
**க்ருத் வா பி ந நிபத் யதே !!”**

(*Bhagavad Geetha 4 Chapter, 22 Sloka) என்று சொல்லும் போது,



**"நானாக போய் யாரிடமும் கை ஏந்தும் நிலைக்கு செல்ல மாட்டேன். எனக்கு என்று எது கிடைக்கின்றதோ அதை கொண்டு மட்டுமே நான் சந்தோஷப்படுவேன் என்கிற திருப்தியில் எவன் இருக்கிறானோ!! அவனை சுகம்-துக்கம், வெற்றி-தோல்வி என்ற எந்த அனுபவமும் மனதளவில் பாதிக்காது"என்கிறார்.**



தெய்வானுக்கிரகத்தால் மட்டுமே, மனதில் திருப்தி குணம் ஏற்படும். பகவான் மனோ சங்கல்பத்தால் மட்டுமே, நம்மால் அழிக்க முடியாத 'கர்வ'த்தையும், 'ஆசை'யையும் அழித்து, 'திருப்தி' என்ற குணத்தையும் கொடுக்க முடியும்.

## இரக்கம் :

பகவானிடம் நாம் **நான்காவதாக கேட்க வேண்டியது,**

"எனக்கு யாரை பார்த்தாலும் மனதில் உயிர் 'இரக்கம்/ ஜீவகாருண்யம்' உருவாகும் படி செய்யுங்கள் பகவானே! " என்று கேட்கவேண்டும்.

நம்மால் கொண்டு வர முடியாத குணம் "இரக்கம்". இரக்க குணம் உள்ளவனுக்கு, மற்றவர்கள் செய்யும் தவறுகள் தெரிந்தாலும், "அவன் தெரியாமல் செய்கிறான்" என்று அவன் மீதும் இரக்கம் வரும்.

"இரக்க குணம் உள்ளவனுக்கு", எதை பார்த்தாலும், யாரிடத்திலும் 'கோபமே' வராது. 'கர்வ'த்தையும், 'ஆசை'யையும் நம்மால் அழிக்க முடியாதது போல, மனதில் 'திருப்தி' யும் கொண்டு வரவே முடியாதது போல, எதனிடத்திலும் 'இரக்கம்' காட்டும் குணம், நம் முயற்சியால் வரவே வராது. தெய்வானுக்கிரகம் செய்தால் மட்டுமே, இந்த இரக்க குணம் மனதில் ஏற்படும். பகவான் அனுக்கிரகத்தால் மட்டுமே, நம்மால் அழிக்க முடியாத 'கர்வ'த்தையும், 'ஆசை'யையும் அழித்து, 'திருப்தி', 'இரக்கம்' என்ற குணத்தையும் கொடுக்க முடியும்.

## மோட்சம் :

பகவானிடம் நாம் **ஐந்தாவதாக கேட்க வேண்டியது,** “பகவானே! பல யுகங்களாக நானும் இந்த சம்சார சாகரத்தில் மூழ்கியும் எழுந்தும் கொண்டிருக்கிறேன்.

எவ்வளவு தடவை இப்படியே இருந்து கொண்டிருப்பது?
என்னை இந்த சம்சார சாகரத்தில் இருந்து விடுவித்து விடு!.
ஆத்ம விடுதலையாகிய மோக்ஷத்தை கொடு" என்று கேட்கவேண்டும். ஆத்ம விடுதலையாகிய மோக்ஷத்தை கொடு" என்று கேட்கவேண்டும்.

**இங்கு ’சம்சார சாகரம்’ என்று சொல்வது..**
’ **’ஜனனம்-மரணம்’ என்ற சுழற்சி சக்கரத்தையே.**
இந்த சுழற்சியையே, பஜ கோவிந்தத்தில்..



**.|| "புனரபி ஜனனம், புனரபி மரணம்,**
**புனரபி ஜனனீ ஜடரே சயனம் |**
**இஹ ஸம்ஸாரே பகுதுஸ்தாரே**
**க்ருபயா பாரே பாஹி முராரே" ||.**
என்று ஆதிசங்கர பெருமான் பாடுகிறார்.

இதற்கு அர்த்தம்,
"பிறப்பும் இறப்பும் மீண்டும் மீண்டும் தொடர்ந்து உண்டாகி கொண்டே இருக்கிறது. இந்த பிறப்பிலும் மீண்டும் தாயின் கருவறையில் பிறந்தாயிற்று. கடக்க முடியாத இந்த சக்கரத்தில் இருந்து, விடுவித்து, கடாக்ஷித்து அருளமாட்டாயா இறைவா?" என்பதாகிறது.

நாம் பிறந்தாச்சு!. கொஞ்சம் வருஷம் வாழ்ந்து தான் ஆக வேண்டும். பின்பு இறந்து தான் ஆக வேண்டும். செய்த பாவ-புண்ணிய அல்லது நல்வினை-தீவினை தொகுப்புகளின் படி, திரும்ப திரும்ப ஏதாவது ஒரு தாயார் வயிற்றில் பிறக்க தான் வேண்டும். **ஆனால் இப்படியே எவ்வளவு நாள் .!?**
**உலகாயுத சம்சார சாகரத்தில் சூழல்வது?**

'கர்வத்தை'யும், 'ஆசை'யையும் நம்மால் அழிக்க முடியாதது போல, மனதில் 'த்ருப்தி'யும், 'இரக்கத்தை'யும் நம்மால் கொண்டு வரவே முடியாதது போல,

சம்சார சாகரத்தில் இருந்து விடுபட்டிட, நம் முயற்சியால் முற்றுப்புள்ளி வைக்கவே முடியாது. தெய்வானுக்கிரகம் செய்தால் மட்டுமே, மோக்ஷம் நமக்கு ஏற்படும்.

**"உன் சொந்த முயற்சியால் கூட பெற முடியாத உயர் முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஐந்து விஷயங்களையும், தெய்வீக அவதாரமாய் திகழும் பகவானிடம் கேட்பாயாக" என்று ஆதிசங்கர பெருமான் நமக்கு சொல்லித் தருகிறார்.**

நீ இந்த ஐந்து விஷயங்களையும் பகவானிடம் தினமும் பிரார்த்தித்து கொண்டே இரு. பகவான் நம்மிடம் கருணை கொண்டு அனுக்கிரகித்து விட்டால், இதை விட லாபம் ஒரு மனிதனுக்கு வேறு ஒன்று உண்டா?

**இதை விட்டு, மிகவும் அற்பமானவைகளான எதை எதையோ கேட்டு! கேட்டு!! உன் வாழ்க்கையின் உயர்வான சந்தர்ப்பங்களை/ வாய்ப்புகளை வீணாக்கிக் கொள்ளாதே!** என்கிறார்.






# முடிவுரை

**கல்லாப் பிழையும், கருதாப் பிழையும், கசிந்துருகி**
**நில்லாப் பிழையும், நினையாப் பிழையும், நின்னஞ்செழுத்தைச்**
**சொல்லாப் பிழையுந், துதியா பிழையும், தொழாப் பிழையும்,**
**எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே!**

**- பட்டினத்தார் சித்தர்.**

சாயின் அன்பெனும் கரைபுரண்டு ஓடும், ஆற்றில் இருந்து எடுத்த ஒரு குடம் தான் இந்நூல். எடுத்துச் சென்ற இந்த குடம், இந்த அளவிலேயே நிறைந்துவிட்டது. இந்த குடம் கொள்ளாமல், வழிந்து ஓடும் சாயின் அன்பை, அற்புதத்தை, மகிமையை, சுவாமியின் அருள் கொண்டு பெரிய குடமாக எடுத்து, பெரிய நூலாக தர பகவான் அருள் புரிய வேண்டுகிறேன்.

இதில் என்னுடைய பணிகள் சிறியளவு முயற்சிதான், சுவாமியின் அருள்தான் இந்த பணிகளை முழுமையாக்கி நிறைவு செய்துள்ளது. **புத்தகம் எழுதும் அளவு கல்வியோ, அறிவோ, புலமையோ, கவிநயமோ, எமக்கு இல்லாததால் இதை ஒரு குறிப்பேடு போலத்தான் எம்மால் சொல்ல முடிந்தது.**

‘உலகெலாம்’ என்னும் ஒரு வார்த்தையை கொண்டு ஒரு கவிஞர் மூன்று மணி நேரம் பேசினார் எனில், அவருக்கு பரந்த அறிவும், புலமையும் இருந்தது, அதனால் முடிந்தது. அந்த அளவுக்கு நிகழ்வுகளை எம்மால் சுவாரசியமாகவும், சுவையாகவும், சொல்ல முடியாவிட்டாலும்.. **இந்த அளவுக்காவது சொல்ல வைத்த, பகவானுக்கு என் நன்றியை காணிக்கையாக்குகிறேன். இதில் என் சிற்றறிவுக்கு எட்டியதையே கொட்டியுள்ளேன்.** இதில் ஏதாவது தவறுகள், குறைகள், குற்றங்கள், மனம் வருந்துமாறு ஏதாவது இருந்தால் **என்னை மன்னிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.**

**இந்நூலை படித்து உள்வாங்கிய நீங்கள், இனி பிரேமசாய் தரிசனத்திற்கு வரும் பொழுது, அவரை தரிசிக்கும் பொழுது, இந்த நூலில் வரும் ஏதாவது சம்பவங்களை மனதில் கொண்டுவாருங்கள், அதை நிகழ்த்தியவர் இதோ நம்முன்னே உள்ளார்! என்று பார்ப்பீர்கள்.** அவர் சிவனாக காட்சி கொடுத்தவர்! முருகனாக காட்சி கொடுத்தவர்! அம்மனாக இருந்தவர்! ஆபத்துகளில் ஓடிச்சென்று காத்தவர் அவர்! என நினைக்க **அவரின் பிரம்மாண்டத்தை, மனம் உணரும் அவர்தான் இவர் என்று மனம் நிறையும்.** அவர் முன்னாள் நாம் உள்ளோம் என்ற நினைவு மேலோங்கும்.

**இந்நூல் வாயிலாக நாம் சுவாமியைப் பற்றி தெரிந்து கொண்டது, சிறிது தான். சுவாமியின் உள்ளாற்றலை, உள் ஆழத்தை, எவ்வளவு நாள் ஆராய்ந்தாலும் நம்மால் புரிந்து கொள்ள முடியாது. தீவிர பக்தியும், நம்பிக்கையும், அவரின் அருளும் இருந்தால் தான் அது சாத்தியம்.** என சொல்லி,

**இந்த புத்தகம் உருவாக உதவி செய்த இங்கே குறிப்பிடாத அத்தனை நல்ல உள்ளங்களுக்கும் என் நன்றியையும், வணக்கத்தையும் கூறிக் கொள்கிறேன்.** குறிப்பாக **ஆர்த்தி, சுதர்சனா** மற்றும் **செல்வபுவனேஷ்**க்கும் என் நன்றியை கூறிக் கொள்கிறேன். அவர்கள்தான் நான் சொல்லச் சொல்ல பதிவு செய்தவர்கள், கைகுறிப்பு எடுத்துக் கொடுத்தவர்கள். மேலும் பதிப்புக்குரிய வகையில் புத்தகமாக்கும் முதற்கட்ட பணிகளை மேற்கொண்ட **சந்துரு**விற்கும், **கிருத்திக்**கிற்கும் மற்றும் இறுதிகட்ட பணிகளையும் மின்னூல், ஆடியோபுக், ஆன்லைன் பணிகளையும் மேற்கொண்ட சிங்கப்பூர்-**கருவூரான் ராஜன்**னுக்கும் & ஆடியோபுக்கிற்கு குரலொலி தந்து உதவிய **சாந்தி-சிவன்சுரேஷ்** தம்பதியர்க்கும், புதுப்பை ஞானசம்பந்தர் பள்ளி தாளாளர் **பரிமளம் ஐயா** அவர்களுக்கும், மேலும் **ரா.கணபதி** அவர்கள் எழுதிய 'சுவாமி' எனும் நூலில் இருந்தும் குறிப்புகள் கொடுத்துள்ளேன் அவருக்குமாக சேர்த்து..

**மனப்பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்.**

**நம் ஆன்மீகபயணத்தில் நம் சொந்த வீடு செல்ல, இவ்வுலகம் எனும் பஸ்ஸ்டாண்டில், காத்துக் கொண்டுள்ளோம். ராமர் என்ற பஸ் வந்தது. அதில் கொஞ்சம் கூட்டம் ஏறி செல்கிறது. கிருஷ்ணர் என்ற பஸ் வருகிறது! அதில் கொஞ்சம் கூட்டம் ஏறி செல்கிறது. அல்லா, இயேசு என்ற பஸ் வருகிறது! அதிலும் ஒரு கூட்டம் ஏறி செல்கிறது. சீரடிசாய், சத்யசாய்! என்ற பஸ் வந்தது, அதிலும் ஒரு கூட்டம் ஏறி செல்கிறது. இப்போது தான் பிரேமசாய்! எனும் பஸ் வந்துள்ளது, வண்டி முழுவதும் காலியாக உள்ளது. நாம் இந்த வண்டியில் இப்போதே ஏறிக்கொண்டால், நல்ல ஜன்னலோர சீட் பிடித்து, சுகமாய் அமர்ந்து கொள்ளலாம். அவர் நம் சொந்த வீட்டுக்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்வார். அவரை நம்பி அந்த பஸ்ஸில் ஏறுவதே நம் வேலை. பின் அவரே நம்மை மோட்ச வீடு தேடி கொண்டு போய் விட்டு விடுவார். தயவு செய்து இந்த பஸ் ஸ்டாண்ட்டே, சுகம் என இருந்து விட வேண்டாம். எந்த பஸ்ஸில் ஏறினாலும், எந்தெந்த வழிகளில் போனாலும், போய் சேருகின்ற இடம் ஒன்றுதான். நாம் இறங்க வேண்டிய இடத்தில், நம்மை வரவேற்க நம் பிரேமசாயி தெய்வம் இருப்பார்.** எனக் கூறிக்கொண்டு ஆனந்தமாக மங்கலம் பாடலாம்.

**நான்மறை வான்முகில் வளாது பெய்க! மலிவலம் சுரக்க! மன்னன் கோன் முறை அரசு செய்க! குறைவிலாது உயிர்கள் வாழ்க! நான்மறை அறங்கள் ஓங்க! நல் தவம் வேள்வி மல்க மேன்மைகொள் சைவநீதி விளங்குக! உலகெலாம்!** என்று வேண்டிக்கொண்டு, உங்களுக்கு உலக வாழ்வில் **எல்லா வளத்தையும், நலத்தையும், அருளி நீடூடிகாலம், வாழ்வாங்கு வாழச்செய்யவேண்டும்** என்று பிரேமசாயியை பிரார்த்தனை செய்து கொண்டு,

**பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத்தாண்டு பல கோடி**
**மல்லாண்ட தின்தோல் மணிவண்ணா உன் செவ்வடி**
**செவ்வி திருகாப்பு.**

**பிரேமசாய் மணிவண்ணா, உன் செவ்விய திருவடி எங்களுக்கு**
**காப்பாக அமைய நீ பல கோடி நூறாயிரம் ஆண்டுகள்**
**எங்களுக்காக வாழ வேண்டும்.**

**வாழ்க வாழ்க என்னுடன் வேலை செய்தவர்கள்**
**இன்பமுடன் வாழ்க வாழ்கவே**

**வாழ்க வாழ்க அறப்பணிகள் செய்தவர்கள்**
**அன்புடனே வாழ்க வாழ்கவே**

**வாழ்க வாழ்க பிழைதிருத்தம் செய்தவர்கள்**
**குறைவின்றி வாழ்க வாழ்கவே**

**வாழ்க வாழ்க முன்னுரை கூறியவர்கள் மூப்பின்றி வாழ்க வாழ்கவே**

**வாழ்க வாழ்க அணிந்துரை செய்தவர்கள்**
**அனைத்தும் பெற்று வாழ்க வாழ்கவே**

**வாழ்க வாழ்க அழகு படுத்தியவர், அறவழியில் வாழ்க வாழ்கவே.**

**வாழ்க வாழ்க பதிப்பித்தவர்கள், பல்லாண்டு வாழ்க வாழ்கவே.**

**வாழ்க வாழ்க சாய்அன்பர்கள், சகலஇன்பம் பெற்று வாழ்க வாழ்கவே.**

**வாழ்க வாழ்க எனைப்பெற்றோர், பெருமையுடன் வாழ்க வாழ்கவே.**

**வாழ்க வாழ்க என் குருமார்கள், குறைவின்றி வாழ்க வாழ்கவே.**

**வாழ்க வாழ்க பிள்ளையாண்டான்,**
**பிரேமசாயி பெருமையுடன் வாழ்க வாழ்கவே.!**

**வாழ்க வாழ்க கண்கண்ட கருணைதெய்வம்,**
**சத்யசாயி வாழ்க வாழ்கவே..!!**



**- ஜெய் சாய்ராம் -**



## குறிப்புகளுக்காக..
## For Notes..



# குறிப்புகளுக்காக..
# For Notes..



# எப்படி வந்தடைவது..?
# How to Reach..?

***Travel to Near Arrival Landmarks***

*Coimbatore Railway Station*
*Tiruppur Railway Station*
*Karur or Dindigul Railway Station*

*Dharapuram Bus stand*
*Kangeyam Bus stand*
*Karur Bus stand*

*CJB - Coimbatore International Airport* [..87 km]
*TRZ - Tiruchirappalli International Airport* [..167 km]
*IXM - Madurai Domestic Airport* [..143 km]

## Map Guidance for Location :












Location QR

Google Map Link :
https://maps.app.goo.gl/Q1AFc9ToH6UQSZq6A

prema sai baba

+91 9442208339

*www.premasaiashram.org*